உ
சிவமயம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின்

# பாலபாடம்

(முதலாம், இரண்டாம் புத்தகங்கள்)



வெளியீடு:

**இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு**

**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**

**கொழும்பு-04.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின்

# பாலபாடம்

(முதலாம், இரண்டாம் புத்தகங்கள்)

வெளியீடு:

**இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு**
**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**
**கொழும்பு-04.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்பதிப்புத் தரவுகள்

நூல் : பாலபாடம்
(முதலாம், இரண்டாம் புத்தகங்கள்)

ஆக்கியவர்: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்

பதிப்பு : மீள்பதிப்பு பெப்ரவரி 2002

பக்கங்கள் : 152

பிரதிகள் : 10.000

அச்சு : ஓவ்செற்

வெளியீடு : இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு
இந்துசமய கலாசார அலுவல்கள்
திணைக்களம்
248 1/1, காலி வீதி,
கொழும்பு-04.

அச்சகம் : அனுஷ் பிரின்டர்ஸ்
கொழும்பு-11.

2002ஆம் ஆண்டு, அரசு அறிமுகஞ் செய்த நூறு நாள் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அறநெறிப்பாடசாலை ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்காக வெளியிடப்பட்ட இலவச வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කාර්යාලය / அலுவலகம் / Office
248, 2/1, ගාලු පාර, කොළඹ-04.
248, 2/1, காலி வீதி, கொழும்பு-04.
248, 2/1, Galle Road, Colombo-04.

නිවස / இல்லம் / Residence
110/3, විජේරාම මාවත, කොළඹ-07.
110/3, விஜேராம மாவத்தை கொழும்பு-07.
110/3, Wijarama Mawatha, Colombo-07.

හින්දු ආගමික කටයුතු පිළිබඳ අමාත්‍ය
இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்
MINISTER OF HINDU RELIGIOUS AFFAIRS

ත්‍යාගරාජා මහේස්වරන් පා. ම.
தியாகராசா மகேஸ்வரன் பா. உ.
Thiyagaraja Maheswaran M. P.

දුරකථන / தொலைபேசி / Telephone
කාර්යාලය / அலுவலகம் / Office: 554801, 554802
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 554803
නිවස / இல்லம் / Residence: 580953
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 580953

# புதிய அரசின் 100 நாள் துரித அபிவிருத்தித் திட்டம்

2002ம் ஆண்டு, மாண்புமிகு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் புதிய அரசு பொறுப்பேற்றது. அரசின் முதற் திட்டமாக 100 நாட்களுக்குள், பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பிரதமர் அவர்கள் அறிவித்தார்.

அவரது பணிப்புரைக்கமைய, அமைச்சுகள், திணைக்களங்கள், அரசு சார்ந்த ஏனைய நிறுவனங்கள் யாவும் மக்களுக்கு விழிப் புணர்வூட்டும் வண்ணமும், நாட்டை அபிவிருத்தி செய்யும் வண்ணமும் பல்வேறு செயற்பாடுகளை 100 தினங்களுக்குள் நிறைவேற்றத் திட்டம் வகுத்தன.

இந்துசமய விவகார அமைச்சும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் 100 தினங்களுக்குள் பல்வேறு செயற்பாடுகளை முழுமைப்படுத்த திட்டங்களை மேற்கொண்டன.

அவற்றுள் ஒன்று, அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்காக வெளியிடப்படும் உசாத்துணை நூல் வெளியீடுகளாகும். இந்நூல் வெளியீட்டின்போது நமது நாட்டின் தலைசிறந்த சமயப் பெரியாரான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் இரு நூல்களை அச்சிட்டு வெளியிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

சைவ அபிமானிகளுக்கும், இளம் சமுதாயத்தினருக்கும் தற்போது கிடைத்தற்கு அரியதாகவுள்ள, பாலபாடம், சைவ வினா விடை ஆகிய இரு நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டு வைக்கின்றோம்.

அறநெறிப் பாடசாலைகளிற் பயிலும் மாணவ மாணவியர் சமய அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு இவ்விரு நூல்களும் பெருந்துணையாக அமையும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

**தியாகராசா மகேஸ்வரன்,**

*இந்துசமய விவகார அமைச்சர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

2002ம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கையில் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு பிரதம மந்திரி அவர்கள், முதல் நூறு நாட்களுக்குள் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் அனைத்து அமைச்சுகளும், திணைக்களங்களும் துரித அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமெனப் பணிப்புரை விடுத்தார்.

இதற்கமைய இந்துசமய விவகார அமைச்சு, 100 தினங்களுக்குள் நிறைவேற்றத்தக்க பல செயற்பாடுகளைத் திட்டமிட்டது. அவற்றுள் ஒன்று, பொதுவாக சைவசமய மாணவர்களுக்கும் குறிப்பாக அறநெறிப் பாடசாலைகளிற் பயிலும் மாணவர்களுக்கும் உதவத்தக்க வகையில், நூல்களை வெளியிடுவதாகும்.

இத்திட்டத்தின் கீழ் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் இரு நூல்கள் திணைக்களத்தின் மூலம் மீள் பதிப்புச் செய்யப்பட்டு மேற்குறித்த கால எல்லைக்குள் வெளியீடு செய்யப்படவுள்ளன.

நாவலர் பெருமானின் பாலர்பாடம், சைவ வினாவிடை - 1, 2 ஆகிய இவ்விரு நூல்களும் தற்போது கிடைத்தற்கரியனவாக உள்ள நூல்களாகும்.

இவ்வெளியீட்டின் மூலம் சைவத் தமிழ் மக்களும், சிறப்பாக சைவ மாணவர்களும் நாவலர் பெருமானின் இரு நூல்களைப் பெற்றுப் பயனடையும் வாய்ப்பு ஏற்படுகின்றது என்பதையிட்டு நாம் மிகவும் மகிழ்வு கொள்கின்றோம்.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்''

**க. பரமேஸ்வரன்,**
*செயலாளர்,*
*இந்துசமய விவகார அமைச்சு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கத்தின் அதிகௌரவ பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் 2002ம் ஆண்டு ஜனவரி முதல் 100 நாட்கள் அமைச்சுக்களுக்கான செயற் திட்டத்தில் இந்துசமய விவகார அமைச்சர் மாண்புமிகு தியாகராசா மகேஸ்வரன் அவர்களின் விதந்துரைக்கு அமைய மிகப் பழமையான, கிடைத்தற்கரிய, சிறந்த சமய நூல்களை வெளியிடும் பணியில் இந்துசமய, விவகார அமைச்சும், திணைக்களமும் செயற்பட்டு வருகின்றன.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் அரிய சமயத் தொண்டில் சமய நூல்களை எழுதி வெளியிடும் பணியும் ஒன்றாகும். அவை எமது பொக்கிஷங்கள். நாவலர் பெருமானைத் தொடர்ந்து பலரும் நூல்களை யாத்து வெளியிட்டு வந்தார்கள். இப்பொழுதும் அப்பணி தொடர்கின்றது.

அந்நோக்கில் 2002ஆம் ஆண்டின் 100 நாட்கள் துரித அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இந்துசமய, விவகார அமைச்சின் செயற்திட்டத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதி வெளியிட்ட சைவ வினாவிடை - 1, 2 எனும் நூலை மறுபதிப்புச் செய்து சைவ உலகிற்குத் தருவதில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றது.

இப்பதிப்பின் மூலம் அறநெறிப்பாடசாலைகளிற் கல்வி பயிலும் மாணவர்கள் பயன்பெறுவதுடன், அரிய பொக்கிஷம் பேணிப் பாதுகாக்கும் வாய்ப்பினையும் பெறுகின்றது என்பதில் ஐயமில்லை.

**சாந்தி நாவுக்கரசன்,**
*பணிப்பாளர்,*
*இந்துசமய கலாசார*
*அலுவல்கள் திணைக்களம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பரமபதி துணை.

# பாலபாடம்

## முதற்புத்தகம்.

யாழ்ப்பாணத்து நல்லூர்

## ஆறுமுகநாவலரவர்கள்

செய்தது.

இது

சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத்
தருமபரிபாலகர்

Mudlr. G. சுப்பிரமணியம் J. P அவர்களால்
சென்னைபட்டணம்

வித்தியா நுபாலனயந்திரசாலையில்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

**உஎ-ம் பதிப்பு.**

சர்வதாரிஸு ஆவணிமீ

1948.

அரசினரால் அங்கீகரிக்கப்பட்டது.
(Copyright Registered.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பரமபதி துணை.

# பா ல பா ட ம்

## மு த ற் பு த் த க ம்.

௧. நெ டு ங் க ண க் கு.

உயிரெழுத்து.

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ

ஐ ஒ ஓ ஔ.

மெய்யெழுத்து.

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம்

ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்.

அஃகேனம்.

ஃ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர் மெய்யெழுத்து.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ |
| த | தா | தி | தீ | து | தூ | தெ |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பரமபதி துணை.

# பாலபாடம்

## முதற்புத்தகம்.

---

### ௧. நெடுங்கணக்கு.

உயிரெழுத்து.

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ

ஐ ஒ ஓ ஔ.

---

மெய்யெழுத்து.

க்ங்ச்ஞ்ட்ண்த்ந்ப்ம்

ய்ர்ல்வ்ழ்ள்ற்ன்.

அஃகேனம்.

ஃ

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர் மெய்யெழுத்து.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ |
| த | தா | தி | தீ | து | தூ | தெ |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர் மெய்யெழுத்து.

| | | | | |
|---|---|---|---|---|
| கே | கை | கொ | கோ | கௌ |
| ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| சே | சை | சொ | சோ | சௌ |
| ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| டே | டை | டொ | டோ | டௌ |
| ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| தே | தை | தொ | தோ | தௌ |
| நே | நை | நொ | நோ | நௌ |
| பே | பை | பொ | போ | பௌ |
| மே | மை | மொ | மோ | மௌ |
| யே | யை | யொ | யோ | யௌ |
| ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| லே | லை | லொ | லோ | லௌ |
| வே | வை | வொ | வோ | வௌ |
| ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| றே | றை | றொ | றோ | றௌ |
| னே | னை | னொ | னோ | னௌ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்கள்.

## ஓரெழுத்துச் சொற்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஆ | ஊ | வா | பை |
| ஈ | தா | தை | நா |
| கா | கை | மா | வை |
| பூ | போ | தீ | மை. |

## இரண்டெழுத்துச் சொற்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| தாய் | மணி | நெல் | ஓலை | ஏடு |
| மாலை | மாடு | சாதி | காசு | ஞானி |
| பதி | பால் | குடை | பூசை | காணி |
| ஒளி | ஊர் | நூல் | நெய் | மூடி |

| | | | | |
|---|---|---|---|---|
| நாடு | குரு | ஓசை | கண் | இமை |
| வீதி | மெய் | பூமி | கதை | செவி |
| பிதா | பசு | வீடு | அறை | தெரு |
| வழி | பொன் | கொடை | கிளி | வாள் |

| | | | | |
|---|---|---|---|---|
| நீதி | தலை | சாமி | அது | எழு |
| முறை | தோல் | ஆணை | துளி | நீறு |
| வீணை | தேன் | சோலை | உடு | உழு |
| தின் | மலை | சபை | பாய் | செய் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| மழை | பசி | நீர் | சீலை | வேலி |
| மாதா | காடு | வாசி | வலி | கரி |
| பலா | கொடு | ஆறு | இலை | எது |
| கொடி | நான் | சோறு | குழி | ஆடு. |

## மூன்றெழுத்துச் சொற்கள்.

| | | | |
|---|---|---|---|
| அருள் | வீரம் | கல்வி | குலம் |
| ஞானம் | புடைவை | மாதம் | பொழுது |
| தேவன் | பிள்ளை | கீதம் | தேசம் |
| தமிழ் | முகம் | இரவு | நாதம் |

| | | | |
|---|---|---|---|
| நன்மை | அறிவு | மயில் | நயம் |
| பழமை | முத்தி | பாதம் | குடம் |
| தலம் | வேதம் | நேர்மை | புதுமை |
| புகழ் | வாசனை | உடைமை | கொம்பு |

| | | | |
|---|---|---|---|
| குதிரை | தாமரை | புத்தி | கோயில் |
| சுவாமி | தானம் | கங்கை | கிணறு |
| செம்பு | திக்கு | தயவு | வெள்ளி |
| மணம் | பள்ளி | மடம் | நிலம் |

| | | | |
|---|---|---|---|
| ஆசான் | தயிர் | பாடம் | பழம் |
| நெஞ்சு | முகில் | வயல் | காவல் |
| தாரம் | வெட்டு | அழகு | தம்பி |
| பொறுமை | குணம் | தந்தை | உடல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| கன்று | கோபம் | வடிவு | மரம் |
| பாட்டு | மிகுதி | பண்பு | பட்டு |
| பெயர் | வெற்றி | செம்மை | சுகம் |
| உயிர் | இளமை | ஓடம் | முதுகு. |

## நாலெழுத்துச் சொற்கள்.

| | | |
|---|---|---|
| கடவுள் | தெய்வம் | மோதிரம் |
| வெய்யில் | மனிதன் | தண்ணீர் |
| போசனம் | மருந்து | செல்வம் |
| எழுத்து | மந்திரி | ஆயுதம் |

---

| | | |
|---|---|---|
| வட்டம் | ஒற்றுமை | குற்றம் |
| சரீரம் | சூரியன் | இன்பம் |
| தீபாவலி | தேவாரம் | அமாவாசி |
| செருந்தி | பௌர்ணிமை | பாடசாலை |

---

| | | |
|---|---|---|
| இடபம் | கத்தரி | கட்டில் |
| சர்த்தி | தமையன் | நாற்காலி |
| அரசன் | கரும்பு | அரும்பு |
| விளக்கு | பிறப்பு | மோட்சம் |

---

| | | |
|---|---|---|
| புட்பம் | பருவம் | தங்கம் |
| சிங்கம் | பிரியம் | நூதனம் |
| கூட்டம் | குழந்தை | சுத்தம் |
| மானுடன் | முயற்சி | வைக்கோல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அன்னம் | வேற்றுமை | சிறப்பு |
| அற்பம் | உருவம் | கிடங்கு |
| எண்ணெய் | ஒக்கலை | மாமிசம் |
| வகுப்பு | முற்றம் | சித்தம். |

ஐந்தெழுத்துச் சொற்கள்.

| | | |
|---|---|---|
| தோத்திரம் | புகழ்ச்சி | அடக்கம் |
| வைத்தியம் | பெரியவர் | தருக்கம் |
| வத்திரம் | எழுத்தாணி | மங்கலம் |
| மந்திரம் | தம்பிரான் | சித்திரம் |

| | | |
|---|---|---|
| சத்தியம் | கருத்தன் | சந்திரன் |
| கார்த்திகை | ஒழுக்கம் | உத்தமம் |
| அமிர்தம் | அபிடேகம் | ஆதித்தன் |
| புத்தகம் | சந்தனம் | மாணாக்கன் |

| | | |
|---|---|---|
| ஆபரணம் | சத்திரம் | படித்தல் |
| துதித்தல் | பத்திரம் | மாணிக்கம் |
| இரத்தம் | நித்தியம் | வித்துவான் |
| சொப்பனம் | விக்கினம் | தேவாலயம் |

| | | |
|---|---|---|
| திறவுகோல் | பாத்திரம் | மாம்பழம் |
| சேனாதிபதி | நாட்டியம் | சர்க்கரை |
| ஆசாரியர் | வணக்கம் | கற்கண்டு |
| சிங்காரம் | சங்கீதம் | கேழ்வரகு. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்றொடர்கள்.

## முதல் பாடம்.

ஒரு தலை.
இரு கண்.
நல் வினை.
சிறு மலை.
முள் வேலி.
அரி வாள்.
கூரை வீடு.

வாழை இலை.
பெரு மழை.
தலை வலி.
சோறு கறி.
புகை யிலை.
மத யானை.
ஆடு மாடு.

## ௨-ம் பாடம்.

மேல் வீடு.
ஓலை வேலி.
ஏழு பானை.
ஆறு குடை.
நல்ல மணி.
வாழைப் பழம்.
பெருங் காற்று.

குளிர் காலம்.
பெரு விரல்.
நெல் வயல்.
வட தேசம்.
பச்சை நிறம்.
பலாப் பழம்.
மூன்று விசிறி.

## ௩-ம் பாடம்.

விளை நிலம்.
சிறு கிணறு.
வீட்டு முற்றம்.
பஞ்சு மெத்தை.
புதுப் பாடம்.
பாழ்ங் கிணறு.
வண்டி உருளை.

ஓட்டு வீடு.
மரப் பெட்டி.
சங்கு நாதம்.
காட்டு வழி.
அச்சுக் கூடம்.
எட்டுத் திக்கு.
முத்துச் சிப்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சு - ம் பாடம்.

மேட்டு நிலம். பாக்குக் குலை.
பசுச் சாணம். செங்கற் சூளை.
எருமைத் தயிர். சிறு குழந்தை.
இரண்டு ரூபா. யானைத் தந்தம்.
ஐந்து மனிதர். கொட்டைப் பாக்கு.
நல்ல பிள்ளை. குதிரைக் குளம்பு.
தாமரைக் குளம். பெருந் தேங்காய்.

---

### ரு - ம் பாடம்.

ஆயிரப் வருஷம். வெட்டிவேர் விசிறி.
குதிரை வண்டி. சிவப்புப் புடைவை.
வெள்ளிக் கிண்ணம். இரத்தின மோதிரம்.
தண்ணீர்க் குடம். ஒன்பது வயசு.
கிணற்றுச் சலம் இருப்பைத் தோப்பு.
பழம் புத்தகம். அழகிய பல்லக்கு.
சுண்ணம்புச் சுவர். கமுகந் தோட்டம்.

---

### சு - ம் பாடம்.

நான் நடக்கிறேன். அவன் நடக்கிறான்.
நாம் நடக்கிறோம். அவள் நடக்கிறாள்.
நாங்கள் நடக்கிறோம். அவர் நடக்கிறார்.
அவர்கள் நடக்கிறார்கள்.

---

நீ நடக்கிறாய்.
நீர் நடக்கிறீர். அது நடக்கின்றது.
நீங்கள் நடக்கிறீர்கள். அவை நடக்கின்றன.
அவைகள் நடக்கின்றன.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எ - ம் பாடம்.

நான் நடந்தேன்.
நாம் நடந்தோம்.
நாங்கள் நடந்தோம்.

நீ நடந்தாய்.
நீர் நடந்தீர்.
நீங்கள் நடந்தீர்கள்.

அவன் நடந்தான்.
அவள் நடந்தாள்.
அவர் நடந்தார்.
அவர்கள் நடந்தார்கள்.
அது நடந்தது.
அவை நடந்தன.
அவைகள் நடந்தன.

---

## அ - ம் பாடம்.

நான் நடப்பேன்.
நாம் நடப்போம்.
நாங்கள் நடப்போம்.

நீ நடப்பாய்.
நீர் நடப்பீர்.
நீங்கள் நடப்பீர்கள்.

அவன் நடப்பான்.
அவள் நடப்பாள்.
அவர் நடப்பார்.
அவர்கள் நடப்பார்கள்.
அது நடக்கும்.
அவை நடக்கும்.
அவைகள் நடக்கும்.

---

## கூ - ம் பாடம்.

நீ பேசுகிறாய்.
அவன் போகிறான்.
நான் படிக்கிறேன்.
நீ விழுவாய்.
நான் கும்பிடுவேன்.
அவன் புசிப்பான்.
அவள் மெழுகுகிறாள்.

நான் விளையாடுகிறேன்.
நீ திருடினாய்.
அவன் குளிக்கிறான்.
அவள் சமைக்கிறாள்.
நீ வருவாயா?
நான் அலகிடுகிறேன்.
வாள் விழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க0 - ம் பாடம்.

கடவுள் படைக்கிறார். மரம் வளர்கிறது.
குரு உபதேசிக்கிறார். பழம் பழுத்தது.
இராசா காக்கிறான். பலா காய்த்தது.
மாணாக்கன் வாசிக்கிறான். செருந்தி பூத்தது.
தகப்பனார் வருகிறார். இலை உதிர்கிறது.
சுவாமி காப்பார். வில்வந் தளிர்த்தது.
காற்று வீசுகிறது. பாகல் முளைத்தது.

---

## கக - ம் பாடம்

அடுக்களை வேய்கிறான். தேங்காய் விழுந்தது.
பனிநீர் தெளிக்கிறான். ஓடு மாற்றுகிறான்.
மூடன் பிதற்றுகிறான். பால் கறக்கிறேன்.
குழந்தை தவழுகிறது. சூரியன் உதித்தது.
மரம் பட்டது. சண்டை நடக்கிறது.
பட்சி பறக்கிறது. சனங்கள் கேட்கிறார்கள்.
குதிரை பாய்கிறது. என்னை முத்தமிடு.

---

## கஉ - ம் பாடம்.

நிலவு பட்டது. திருவிழா நடக்கிறது.
விளக்கு எரிகிறது. தோட்டங்கொத்தினான்.
நீ புளுகுகிறாய். மண்வெட்டி முரிந்தது.
விளக்கு அணைகிறது. கலப்பை கொண்டுவா.
தீபத்தைத் தூண்டு. வயல் உழுதான்.
சூரியன் அத்தமித்தது. பஞ்சம் நீங்கியது.
நக்ஷத்திரம் பிரகாசிக்கிறது. தண்ணீர் பாய்ச்சுகிறேன்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கங-ம் பாடம்.

மேகம் முழங்கிற்று.
மின்னல் மின்னியது.
இடி இடிக்கிறது.
மழை பெய்கிறது.
தண்ணீர் பாய்கிறது.
ஆறு பெருகுகிறது.
தண்ணீர் இறைக்கிறான்.

கப்பல் ஓடுகிறது.
குளம் வற்றிப்போயிற்று.
சுவர் எழுப்புகிறான்.
முற்றத்தைப் பெருக்கு.
கன்று துள்ளுகிறது.
பூசினிக்காய் காய்த்தது.
அரிசி குற்றுகிறேன்.

---

## கச-ம் பாடம்.

ஊறுகாய் போட்டான்.
வற்றல் வறுத்தான்.
மா இடிக்கிறாள்.
அன்னங் குழைந்தது.
குடம் உடைந்தது.
திறவுகோல் எங்கே?
சீக்கிரம் ஓடு.

கதவைத் திற.
ஏன் சிரிக்கிறாய்?
தெளிவாகப் பேசு.
மெல்ல வாசி.
முன்னே நட.
திண்ணையில் இரு.
தூரத்திலே நில்.

---

## கரு-ம் பாடம்.

நெருப்புச் சுடும்.
தண்ணீர் குளிரும்.
வேம்பு கசக்கும்.
கற்கண்டு தித்திக்கும்.
மிளகு உறைக்கும்.
கடுக்காய் துவர்க்கும்.
மாங்காய் புளிக்கும்.

பிண்ணாக்குத் தின்றான்.
பணாட்டு வேண்டுமா?
சுக்குக் கொண்டுவா.
இன்றைக்கு அமாவாசை
நாறு நடுகிறார்கள்.
களை பிடுங்குகிறார்கள்.
பயிர் விளைந்தது.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசு - ம் பாடம்.

குயில் கூவும். தவளை கத்தும்.
மயில் ஆடும். பாம்பு சீறும்.
நாய் குரைக்கும். நரி ஊளையிடும்.
கோழி கூவும். குதிரை கனைக்கும்.
ஆந்தை அலறும். பசுக் கதறும்.
காக்கை கரையும். ஆடு கத்தும்.
தேனீ பாடும். யானை பிளிறும்.
பூனை உறுமும். சிங்கம் கர்ச்சிக்கும்.

## கஎ - ம் பாடம்.

மலை உயர்ந்தது. கை வேலை செய்யும்.
கல் வலிது. கால் நடக்கும்.
யானை பெரியது. மனம் நினைக்கும்.
தலை வணங்கும். மெய் நல்லது.
கண் காணும். பொய் தீது.
காது கேட்கும். வைக்கோல் கொண்டுவா.
மூக்கு மோக்கும். வெற்றிலை நட்டேன்.
வாய் பேசும். குப்பையைக் குவி.

## கஅ - ம் பாடம்.

கடவுளை வணங்கு. பொறாமை ஆகாது.
குருவை வழிபடு. உயிர்களைக் கொல்லாதே.
புண்ணியஞ் செய். கள்ளுக் குடியாதே.
பாவத்தை நீக்கு. இரக்கம் நல்லது.
உண்மை பேசு. ஒருவரையும் நிந்தியாதே.
கோபம் பொல்லாதது. சூது ஆடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களவு செய்யாதே. பொல்லாதவருடன் கூடாதே
பொய் சொல்லாதே. கோயிலுக்குப் போ.

---

கக - ம் பாடம்.

கடவுள் ஒருவர் இருக்கிறார்.
கடவுள் எங்கும் இருக்கிறார்.
கடவுள் எல்லாம் அறிவார்.
கடவுள் எல்லாம் வல்லவர்.
கடவுள் இரக்கம் உடையவர்.
கடவுள் நம்மைக் காக்கிறார்.
கடவுளை ஒருகாலமும் மறவாதே.
கடவுளை எந்நாளும் வணங்கு.

---

உ0 - ம் பாடம்.

குரு வாக்கைத் தட்டாதே.
பிதா மாதாவை வழிபடு.
உபாத்தியாயருக்கு அமைந்து நட.
கல்வியே அழியாத செல்வம்.
வீண் நேரம் போக்காதே.
புத்தகத்தைக் கிழித்துப் போடாதே.
கற்பலகையை உடைத்துப் போடாதே.
தினந்தோறும் பள்ளிக்கூடத்துக்கு வா.

---

உக - ம் பாடம்.

என் மகன் எங்கே?
இந்த மாம்பழத்தைத் தின்.
புட்பம் எடுத்துக்கொண்டு வா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ மரம் பூக்கின்றது.
உன் புத்தகம் எங்கே?
பூனை உங்கே வருகிறது.
இது நமது வீடு.
உன் வீடு எங்கே?
இந்தத் தோட்டம் விசாலமானது.
அது நல்ல விசிப்பலகை.

உஉ - ம் பாடம்.

பன்னி மரம் பூத்தது.
செங்கழுநீர்ப் பூ மலர்ந்தது.
குளத்திலே தாமரைப் பூ மிகுதி.
வாழை குலை போட்டது.
புழுகு சம்பா மணக்கிறது.
வரகுசோறு புசித்தேன்.
சாமை அரிசி கொண்டுவந்தான்.
கேழ்வரகு கதிர் விடுகிறது.
கம்பங் கூழ் குடித்தேன்.
நான் ஊருக்குப் போகிறேன்.

உங - ம் பாடம்.

ஒரு நாற்காலி கொண்டுவா.
இரண்டு மாம்பழம் பறித்துத் தா.
இந்த எலுமிச்சம் பழத்தை எண்ணு.
ஒரு பாயுந் தலையணையுந் தாரும்.
என்மேலே கோபித்துக் கொள்ளாதேயும்.
நீ சம்ஸ்கிருத பாடம் ஒப்பித்து விட்டாயா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரையினின்றும் இறங்கி வாரும்.
குழந்தை நடக்கப் பழகுகின்றது. [யும்.
இந்த இரகசியத்தை ஒருவருக்குஞ் சொல்லாதே
இரண்டு மாதுளம்பழங் கொண்டு வாரும்.

உச - ம் பாடம்.

பிள்ளைகாள்! என்மகனைக் கண்டீர்களா?
ஏன் என்னை இப்படி அடிக்கிறீர்?
நான் செய்த குற்றத்தைப் பொறுத்தருளுக.
கர்ப்பூரஞ் சாம்பிராணி வாங்கிக்கொண்டுவா.
விசிறி கொண்டுவந்து, சற்றே விசிறு.
மாமனார் இராமேசுரத்துக்குப் போய்விட்டார்.
என்னைப் பார்க்கிலும் அவன் புத்திமான்.
இப்பொழுது உமக்கு ஆரோக்கியம் எப்படி?
இந்தக் குளம் மிக ஆழம் உடையது.
உன் மகன் என் மகனிலுஞ் சமர்த்தன்.

உரு - ம் பாடம்.

தகப்பனார் சுரத்தினால் வருந்துகிறார்.
தாயார் மிகக் கவலைப் படுகிறார்.
பாட்டனார் சிதம்பரத்துக்குப் போய்விட்டார்.
வைத்தியர் மருந்து கொடுத்தார்.
இந்த மருந்துக்கு அனுபானம் என்ன!
இந்த மருந்துக்குப் பத்தியம் என்ன?
விளக்கு ஏற்றிக்கொண்டு வந்து, வை.
விளக்குக்கு ஒரு வர்த்தி போடு.
விளக்கை விரலிலே தூண்டாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கைத் தூண்டுகோலினாலே தூண்டு.
விளக்கை வாயினால் அவியாதே.
நாளைக்குப் பாட்டியாருடைய சிராத்தம்.

---

உசு-ம் பாடம்.

எவர்களோடும் இனிய வார்த்தை பேசு.
எவர் ஒருவருக்கும் தீங்கு நினையாதே.
வீண் வார்த்தை ஒருபொழுதும் பேசாதே.
எல்லார்மேலும் அன்பு உள்ளவனாய் இரு.
பிறருடைய பொருளை இச்சியாதே.
இரப்பவர்களுக்கு ஏதேனும் கொடு.
பெரியவர்களைக் கண்டால் வணங்கு.
கெட்ட வார்த்தை ஒருபொழுதும் பேசாதே.
நியாயாதிபதி வழக்கு விசாரிக்கிறார்.
ஒருபொழுதும் பொய்ச்சாட்சியம் சொல்லாதே.
கொலை செய்தவன் தண்டிக்கப்படுவான்.
திருடன் விலங்கு மாட்டப்படுவான்.

---

உஎ-ம் பாடம்.

உமக்குப் பணிவிடைக்காரன் இல்லையா?
தாமிரக் குடத்தை எடுத்துவா.
வண்டியிலே பாரத்தை ஏற்று.
குருக்கள் அத்தியேட்டி செய்வார்.
யாழ்ப்பாணத்திலே பனைமரம் மிகுதி.
தைச் சங்கிராந்தியிலே பள்ளிக்கூடம் இராது.
சனங்கள் பிரசங்கம் கேட்க வருகிறார்கள்.
வாயிலிலே ஒரு யாசகன் நிற்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறியவருக்கு ஒரு பிடி அன்னங்கொடு. [ம்.
நான் க்ஷௌரஞ் செய்வித்துக்கொள்ளல் வேண்டு
தீபாவலிக்கு ஒரு வேட்டி வாங்கித் தாரும்.
எங்கள் தோட்டத்திலே மருக்கொழுந்து மிகுதி.

---

உஅ - ம் பாடம்.

என் மகனே! வந்து என்னைத் தழுவு. [ன்.
என்னைப் பார்க்கினும் அவன் நன்றாக வாசிப்பா
மனிதருக்கு மேலாகிய ஆபரணம் அறிவு.
இந்தச் சுவர் ஆறுமுழம் உயரம் உடையது.
தம்பி கிராமத்துக்குப் போய்விட்டான்.
யாழ்ப்பாணத்துக்குத் தோணி ஏறிப் போகலாம்.
யாழ்ப்பாணத்துக்குப் புகைவண்டி ஏறியும் போகலாம்.
தோணி ஏறினால், நான் வாந்தி பண்ணுவேன்.
இந்த வருஷம் நல்ல வேளாண்மை.
காசிக்குப் புகைவண்டி ஏறிப் கோகலாம்.
சென்னப்பட்டணத்தினும் சிறந்த பட்டணம் கற்கத்தா.
பணத்தினும் பார்க்கப் பெரியது நல்ல பெயர்.

---

உகூ - ம் பாடம்.

எருது வண்டி இழுக்கும்.
ஒட்டகம் பாரஞ் சுமக்கும்.
குதிரை வாகனம் ஆகும்.
பூனை எலி பிடிக்கும்.
எருதும், எருமைக்கடாவும் வயல் உழும்.
ஆடும், மாடும், எருமையும் எரு இடும்.
பசுவும், எருமையும், ஆடும், பால் கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழி விடியல் அறிவிக்கும்.
நாவி புழுகு தரும்.
கழுதை சிலே சுமக்கும்.

பல விதமாகிய மிருகங்களின் தோல்கள், பாதரக்ஷை செய்யவும், புத்தகம் கட்டவும், குதிரைக்குச் சேணம் தைக்கவும் உதவும்.

யானே, எருமை, மாடு, மான், மரை இவைகளின் கொம்புகள், கத்திப்பிடி முதலானவை செய்ய உதவும்.

சில சாதி ஆட்டுமயிர், கம்பளம் நெய்யவும், விலை உயர்ந்த வஸ்திரம் நெய்யவும் உதவும்.

---

௨௦-ம் பாடம்.

காலணுவுக்கு மூன்று பைசா.
அரையணுவுக்கு ஆறு பைசா.
மூக்காலணுவுக்கு ஒன்பது பைசா.
ஒரு அணுவுக்குப் பன்னிரண்டு பைசா.
அரைக்கால் ரூபாவுக்கு இரண்டு அணு.
கால் ரூபாவுக்கு நான்கு அணு.
அரை ரூபாவுக்கு எட்டு அணு.
மூக்கால் ரூபாவுக்குப் பன்னிரண்டு அணு.
ஒரு ரூபாவுக்குப் பதினறு அணு.

பைசாச் செம்பினலும், அணுவும் ரூபாவும் வெள்ளியினலும், வேறொரு கலப்பு லோகத்தினலும் செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னினாலே செய்யப்படுகிற நாணயங்களும் உண்டு.

---

### ௯க-ம் பாடம்.

வெய்யில் நன்றாக எறிக்கிறது.

தாகத்தினாலே நா வரண்டு போயிற்று.

இந்த மர நிழலிலே சற்றே இருப்போம், வாரும்.

தயை கூர்ந்து தாகத்துக்குச் சலந் தாரும்.

தாகத்துக்குப் பானகம் வேண்டுமா? நீர்மோர் வேண்டுமா?

இங்கே தண்ணீர்ப்பந்தல் இல்லையானால் சனங்கள் எவ்வளவு துன்பப் படுவார்கள்!

தண்ணீர்ப் பந்தல் வைப்பது எவ்வளவு ஒரு பெருந்தருமம்.

இந்தச் சுமைதாங்கி கட்டுவித்தவர் எவ்வளவு புண்ணியவான்.

இந்த ஆவுரிஞ்சு தறியினாலே பசுக்கள் தினவு தீர்த்துக்கொள்ளுகின்றன.

தாமிரபர்ணி நதியிலே எப்பொழுதும் சலம் இருக்கும்.

காவேரியாற்றிலே சிலகாலம் ஊற்றுப் போட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதி தீரத்திலே வாசஞ் செய்வது, சௌக்கியத்துக்குக் காரணம்.

---

## ௩௨ - ம் பாடம்.

கலசத்திலே பால் கறந்து கொண்டுவா.

பாலை வடித்துக், காய்ச்சிப், பிரை இட்டு, மூடி, உறியிலே வை.

தயிரை மத்தினாலே கடைந்து, வெண்ணெய் எடுத்து வை.

மோரை, நீர்விட்டுப் பெருக்கு.

சலம் வார்த்து அரிசி களைந்து சோறு சமை.

அம்மி குழவிகளை நன்றாகத் தேய்த்துக் கழுவிக்கொண்டு, கூட்டு அரை.

பனையின் பத நீரைக் காய்ச்சினால், பனைவெல்லம் உண்டாகும்.

கருப்பஞ் சாற்றைக் காய்ச்சினால், சர்க்கரை உண்டாகும்,

கல், உமி, தவிடு, மயிர் இல்லாமல் அரிசியை நன்றாக ஆராய்ந்துகொள்ளல் வேண்டும்.

அடுக்களையானது, உள்ளே வெளிச்சம் வரத்தக்கதாக இருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருரு - ம் பாடம்.

ஒரு காலை தொடங்கி மற்றைக் காலை வரையும் உள்ள காலம் ஒரு நாள்.

அங்கிலேயர்கள், ஒரு நாளை, இருபத்துநான்கு மணிநேரமாகப் பிரித்திருக்கிறார்கள்.

இந்தியர்கள், ஒரு நாளை, அறுபது நாழிகை யாகப் பிரித்திருக்கிறார்கள்.

முப்பது நாழிகை பன்னிரண்டு மணி.

பதினைந்து நாழிகை ஆறு மணி.

ஏழரை நாழிகை மூன்று மணி.

ஐந்து நாழிகை இரண்டு மணி.

இரண்டரை நாழிகை ஒரு மணி.

ஒன்றேகால் நாழிகை அரை மணி.

ஏழு நாட்கள் கொண்டது ஒரு வாரம்.

ஒரு வாரத்திலே, ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி என்னும் ஏழு நாட்கள் உண்டு.

நாலு வாரம் கொண்டது ஒரு மாதம்.

பன்னிரண்டு மாதம் கொண்டது ஒரு வருஷம்.

---

ருச - ம் பாடம்.

பகலிலும், விடியற் காலத்திலும், நித்திரை பண்ணுதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவில், ஒன்பது மணிக்குப் பின்பே நித்திரை பண்ணு.

நித்தமும், விடியுமுன் நித்திரை விட்டெழுந்து விடு.

நித்திரை விட்டு எழுந்த உடனே, கடவுளைத் தோத்திரம் பண்ணு.

பல் விளக்கி, நாக்கு வழித்து, வாய் கொப்பளித்து, முகம் கை கால் கழுவி, ஈரந் துவட்டு.

நின்றுகொண்டாவது, நடந்துகொண்டாவது பல் விளக்கலாகாது.

புத்தகத்தை எடுத்துப், புதுப் பாடத்தையும், பழம்பாடங்களையும் படி.

---

நடு - ம் பாடம்.

நித்தமும் வேட்டியை நன்றாகத் தோய்த்து, அலம்பிப் பிழிந்து, உலரப்போடு.

உடம்பில் அழுக்கைத் தேய்த்து ஸ்நானம் பண்ணு.

நெடுநேரம் சலத்திலே நில்லாதே.

உடம்பு வெயர்க்கும்பொழுது ஸ்நானம்பண்ணாதே.

ஸ்நானம் பண்ணின உடனே, சூடு பிறக்கும்படி, ஈரத்தைத் துவட்டிப்போடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோய்த்து உலர்ந்த சுத்த வஸ்திரம் தரித்துக் கொள்ளு.

அழுக்கு வேட்டியாவது, ஈரவேட்டியாவது தரியாதே.

சனிக்கிழமைதோறும், எண்ணெய் தேய்த்துக் கொண்டு, தலைமுழுகு.

எப்பொழுதும் உடம்பும் வஸ்திரமும் சுத்தமாய் இருந்தால், வியாதி உண்டாகாது.

---

நகரு - ம் பாடம்.

வீட்டிலே கிடைத்ததைப் போசனம் பண்ணு.

வீட்டில் இல்லாத பதார்த்தத்தைக் கொண்டு வரும்படி கேட்டு அழாதே.

போசனம் பண்ணும்பொழுது, தூங்காது, அசையாது, செவ்வையாக இருந்துகொண்டு போசனம் பண்ணு; அன்னத்தைச் சிந்தாதே.

போசனம் முடிந்த பின்பே தாகத்துக்கு உட்கொள்ளு.

போசனம் பண்ணின உடனே, இலையை எடுத்துக்கொண்டு போய்ப் புறத்திலே எறிந்துவிட்டு, வாய் கொப்பளித்துக் கை கால் கழுவு.

போசனம் பண்ணின இடத்தைச் சாணம் தெளித்துத் தடவிவிட்டுக், கை கழுவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றுகொண்டாவது, நடந்துகொண்டாவது, கிடந்துகொண்டாவது, போசனமேனும் பானமேனும் பண்ணுதே.

அழுகின பழங்களைப் புசியாதே.

அடிக்கடி போசனம் பண்ணுதே; அடிக்கடி தண்ணீர் குடியாதே.

புகையிலைச் சுருட்டுப் பிடியாதே.

---

ூள - ம் பாடம்.

பள்ளிக்கூடத்துச் சுவரிலாவது தூணிலாவது சார்ந்து அதை அழுக்குப் படுத்தாதே.

சுவரையாவது குறட்டையாவது கீருதே; உடையாதே.

பள்ளிக்கூடத்திலே பிள்ளைகளுடன் பேசாதே; விளையாடாதே.

பள்ளிக்கூடத்திலே கல்வியின் மாத்திரமே உன் கருத்தை இறக்கு.

நிமிர்ந்து நின்று, புத்தகத்தை மார்புக்குநேராகப் பிடித்துக்கொண்டு, வாசி.

விரைவாக வாசியாதே, மெல்லென வாசி.

எல்லாருக்குங் கேட்கும்படி உச்சமாக வாசி.

பிழையில்லாமல், ஒவ்வொரு சொல்லையும், தெளிவு பெற உச்சரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு சொல்லுக்கும், பொருள் கேட்டு அறிந்து கொள்ளு.

உபாத்தியாயர் உன் பாடத்தை விளக்கும் பொழுது, அவதானத்துடன் கேளு.

பிழையில்லாமலே பேசப் பழகு.

ஓலையிலுங் காகிதத்திலும், பிழையில்லாமல், நன்றாக எழுதப் பழகிக் கொள்ளு.

நித்தமும், இரவிலே விளக்கு ஏற்றுவித்து வைத்துக்கொண்டு படி.

---

௩௪ - ம் பாடம்.

வெயர்வை ஒழுகும்படி, நித்தமும் சிறிது நேரம் விளையாடு.

படிக்கிற நேரத்தில் விளையாடாதே.

பள்ளிக்கூடத்துக்குப் போகும் பொழுதாவது, பள்ளிக்கூடத்தினின்றும் திரும்பி வீட்டுக்குப் போகும் பொழுதாவது, வழியில் நின்று விளையாடாதே.

மாடுகள் குதிரைகளுக்குக் கிட்டப்போகாதே.

பள்ளிக்கூடம் கலைந்த பின்பு, நேரே வீட்டுக்குப் போய்விடு; அங்கும் இங்கும் திரியாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடம் இல்லாத நேரத்தில், உன் பிதா மாதாவுடைய அநுமதி பெற்றுக்கொண்டு, விளையாடு.

கெட்டபிள்ளைகளுடன் கூடி விளையாடாதே. கை கால் ஒடியத் தக்க விளையாட்டுக்குப் போகாதே.

எந்தப் பிள்ளையாவது உன்னை வைதாலும், அடித்தாலும், நீ அந்தப்பிள்ளையை வையாதும், அடியாதும், அந்தப்பிள்ளையுடைய உபாத்தியாயருக்காவது, பிதாமாதாவுக்காவது அறிவி.

ருக - ம் பாடம்.

ஆடு, மாடு, நாய், பூனை இவைகளை அடியாதே.

அணில் ஓணான் முதலியவைகளின் மேலே கல் எறியாதே.

பறவைகளைப் பிடித்து, அவைகளின் சிறகுகளை ஒடியாதே.

பூச்சிகளை வதையாதே.

எந்தப் பிராணிக்கும் துன்பஞ் செய்யாதே.

எல்லாப் பிராணிகளையும் படைத்தவர் கடவுள்; பிராணிகளுக்குத் துன்பம் செய்வது கடவுளுக்கு விரோதம்.

உனக்கு ஒருவர் துன்பஞ் செய்தால் நீ என்ன பாடு படுவாய்! இதை நினைப்பாயாகில், நீ ஒரு பிராணிக்கும் துன்பம் செய்யாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருகிற எறும்புக்கும் நோ உண்டாகாதபடி சாவதானமாக நட.

---

சo - ம் பாடம்.

பெரியோர்கள் உன் வீட்டுக்கு வந்தால், எழுந்து, மரியாதை பண்ணி, ஆசனங் கொடுத்து, அவர்களை இருத்து.

பெரியோர்கள் உன்னுடன் பேசும்பொழுதும், நீ பெரியோர்களுடன் பேசும்பொழுதும், வேறெங்கும் பாராது, அவர்களுடைய முகத்தையே பார்.

எதையாவது, பெரியோர்கள் இடத்திலேகொடுக்கும் பொழுது, இரண்டு கையாலுங்கொடு; வாங்கும் பொழுதும் இரண்டு கையாலும் வாங்கு.

எவரிடத்தாவது இடக்கையினாலே கொடுத்தல் வாங்கல் செய்யாதே.

பெரியோர்கள் எதிரே சிரியாதே.

உனக்கு மூத்தவர்களைப், பெயர் சொல்லி அழையாதே.

---

சக - ம் பாடம்.

திக்கு நான்கு: அவை கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் உதிக்கின்ற திக்குக்குப்பெயர் கிழக்கு.

கிழக்கு முகமாக நிற்கிறவருக்கு வலப் பக்கமாகிய திக்குக்குப் பெயர் தெற்கு.

கிழக்கு முகமாக நிற்கிறவருக்குப் பிற்பக்கமாகிய திக்குக்குப் பெயர் மேற்கு.

கிழக்கு முகமாக நிற்கிறவருக்கு இடப்பக்கமாகிய திக்குக்குப் பெயர் வடக்கு.

தெற்கும் கிழக்குமாகிய மூலைக்குப் பெயர் தென்கிழக்கு.

தெற்கும் மேற்குமாகிய மூலைக்குப் பெயர் தென்மேற்கு.

வடக்கும் மேற்குமாகிய மூலைக்குப் பெயர் வடமேற்கு.

வடக்கும் கிழக்குமாகிய மூலைக்குப் பெயர் வடகிழக்கு.

---

### சஉ - ம் பாடம்.

வடக்குத் திக்கில் இருந்து வீசுகிற காற்றுக்கு, வாடை என்றும், வடகாற்று என்றும் பெயர்.

தெற்குத் திக்கில் இருந்து வீசுகிற காற்றுக்குத், தென்றல் என்றும், தென்காற்று என்றும், பெயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றற் காற்று, உடம்புக்கு ஆரோக்கியத்தைத் தரும்; அது, சித்திரை வைகாசி மாதங்களில், வீசும்.

கிழக்குத் திக்கில் இருந்து வீசுகிற காற்றுக்குக் கொண்டல் என்றும், கீழ் காற்று என்றும் பெயர்.

மேற்குத் திக்கில் இருந்து வீசுகிற காற்றுக்குக், கோடை என்றும், கச்சான் என்றும், மேல் காற்று என்றும் பெயர்.

---

சரு - ம் பாடம்.

ஒரு குருவுக்கும் ஒரு பிள்ளைக்கும்
நடந்த சம்பாஷணம்.

பிள்ளை: ஐயா! தண்டம்.

குரு: தம்பீ! நீ ஆர்?

பிள்ளை: ஐயா! அடியேன் திருநெல்வேலிக் கந்தசாமி முதலியாருடைய பிள்ளை.

குரு: உன் பெயர் என்ன?

பிள்ளை: அடியேன் பெயர் வேலாயுதன்.

குரு: உனக்கு எத்தனை வயசு?

பிள்ளை: ஆறு வயசு.

குரு: உன்னுடைய தாயாரும் தகப்பனும் சீவந்தர்களாய் இருக்கிறார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை: தகப்பனாரவர்கள் தேக வியோகம் அடைந்து விட்டார்கள்; தாயாரவர்கள் சீவந்தராய் இருக்கிறார்கள்.

குரு: உனக்குச் சகோதரர்கள் இருக்கிறார்களா?

பிள்ளை: ஆம், ஐயா! மூன்று சகோதரர்கள் இருக்கிறார்கள்; இருவர் மூத்தவர்; ஒருவன் இளையவன்.

குரு: நீ இப்பொழுது எங்கே போகிறாய்?

பிள்ளை: பள்ளிக்கூடத்துக்குப் போகிறேன், ஐயா!

குரு: நீ என்ன படிக்கிறாய்?

பிள்ளை: முதற் பால பாடம் படிக்கிறேன், ஐயா!

குரு: தம்பீ, நீ நன்றாகப் படித்து, நல்லொழுக்கமும் ஈசுர பத்தியும் உடையவனாய் நடக்கவேண்டும், போய் வா.

பிள்ளை: ஐயா! தண்டம் அடியேன் போய்வருகிறேன்.

---

௪௪-ம் பாடம்.

வடக்கே இமய மலை தொடங்கித் தெற்கே கன்னியா குமரி வரையும் உள்ள தேசம் இந்தியா தேசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவுக்குப் பரத கண்டம் என்றும் பெயர்.

இந்தியா தேசத்திலே பிரதான பட்டணம் டெல்லி.

இந்தியாவில் உள்ள நகரங்களில் பெரியது கற்கத்தா.

பம்பாய், இந்தியாவில் உள்ள நகரங்களில் இரண்டாவது.

சென்னபட்டணம், இந்தியாவில் உள்ள நகரங்களில் மூன்ருவது.

இந்தியாவுக்குத் தெற்கேயுள்ள ஒரு பெரிய தீவு இலங்கை.

இலங்கைக்கு, ஈழ மண்டலம் என்றும், சிங்களத்தீபம் என்றும் பெயர்.

இலங்கையில் உள்ள பிரதான பட்டணம் கொழும்பு; மற்றப்பட்டணங்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, காலி, குருநாக்கல், அநுராசபுரம், கண்டி, வதுளை, இரத்தினபுரி.

யாழ்ப்பாணத்துக்கும் கோடிக்கரைக்கும் உள்ள தூரம் முப்பத்தேழு மைல்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பழையன. | புதியன. | இங்கிலிசு. | உச்சரிப்பு. |
|---|---|---|---|
| ௯௰௬ | ௯௬ | 96 | தொண்ணூற்ருறு. |
| ௯௰௭ | ௯௭ | 97 | தொண்ணூற்றேழு. |
| ௯௰௮ | ௯௮ | 98 | தொண்ணூற்றெட்டு. |
| ௯௰௯ | ௯௯ | 99 | தொண்ணூற்ருென்பது. |
| ௱ | ௧௦௦ | 100 | நூறு. |
| ௱௧ | ௧௦௧ | 101 | நூற்ருென்று. |
| ௱௨ | ௧௦௨ | 102 | நூற்றிரண்டு. |
| ௱௩ | ௧௦௩ | 103 | நூற்றுமூன்று. |
| ௱௪ | ௧௦௪ | 104 | நூற்றுநான்கு. |
| ௱௫ | ௧௦௫ | 105 | நூற்றைந்து. |
| ௱௬ | ௧௦௬ | 106 | நூற்ருறு. |
| ௱௭ | ௧௦௭ | 107 | நூற்றேழு. |
| ௱௮ | ௧௦௮ | 108 | நூற்றெட்டு. |
| ௱௯ | ௧௦௯ | 109 | நூற்ருென்பது. |
| ௱௰ | ௧௧௦ | 110 | நூற்றுப்பத்து. |
| ௱௨௰ | ௧௨௦ | 120 | நூற்றிருபது. |
| ௱௩௰ | ௧௩௦ | 130 | நூற்றுமுப்பது. |
| ௱௪௰ | ௧௪௦ | 140 | நூற்றுநாற்பது. |
| ௱௫௰ | ௧௫௦ | 150 | நூற்றைம்பது. |
| ௱௬௰ | ௧௬௦ | 160 | நூற்றறுபது. |
| ௱௭௰ | ௧௭௦ | 170 | நூற்றெழுபது. |
| ௱௮௰ | ௧௮௦ | 180 | நூற்றெண்பது. |
| ௱௯௰ | ௧௯௦ | 190 | நூற்றுத்தொண்ணூறு. |
| ௨௱ | ௨௦௦ | 200 | இருநூறு. |
| ௩௱ | ௩௦௦ | 300 | முந்நூறு. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பழையன. | புதியன. | இங்கிலிசு. | உச்சரிப்பு. |
|---|---|---|---|
| சா | சoo | 400 | நானூறு. |
| ருா | ருoo | 500 | ஐந்நூறு. |
| கூா | கூoo | 600 | அறுநூறு. |
| எா | எoo | 700 | எழுநூறு. |
| அா | அoo | 800 | எண்ணூறு. |
| கூா | கூoo | 900 | தொளாயிரம். |
| கூ | கooo | 1000 | ஆயிரம். |
| கூகூாசயி அ | ககூசஅ | 1948 | ஆயிரத்துத்தொளாயிரத்து நாற்பத்து எட்டு. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை.

# பாலபாடம்

## இரண்டாம் புத்தகம்.

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரவர்கள்

செய்தது.

இது

சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத்
தருமபரிபாலகர்

Mudlr. G. சுப்பிரமணியம் J.P அவர்களால்
சென்னபட்டணம்

வித்தியா நுபாலனயந்திரசாலையில்
அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.
18-ம் பதிப்பு.
விஜய ௵ மாசி ௴
1954.

அரசினரால் அங்கீகரிக்கப்பட்டது.
(Copyright Registered.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௪௫ - ம் பாடம்.

நமக்குச் சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் தந்தவர் கடவுள்.

நமக்கு மழை பெய்விக்கிறவர் கடவுள்.

காணக் கண்ணையும், கேட்கக் காதையும், மோக்க மூக்கையும், வேலைசெய்யக் கையையும், நடக்கக் காலையும், நினைக்க மனதையும், நமக்குத் தந்தவர் கடவுள்.

நித்தமும் நமக்கு அன்னம் வஸ்திரம் தருகிறவர் கடவுள்.

நாம் விழித்திருக்கும் பொழுதும், நித்திரை பண்ணும் பொழுதும், நம்மைக் காப்பாற்றுகிறவர் கடவுள்.

இப்படிப்பட்ட கடவுளை நாம் ஒருபொழுதும் மறக்கலாகாது; எந்த நாளும் வணங்கித் துதித்தல் வேண்டும்.

## முதற்பாலபாடம்

முற்றுப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிராதக் காலப் பிரார்த்தனம்.

பெருங் கருணைக் கடவுளே! சென்ற இராத்திரியிலே தேவரீர் அடியேனைக் காத்தருளினதின் நிமித்தம், தேவரீரை அடியேன் துதிக்கிறேன். இந்தப் பகலிலும் அடியேனைக் காத்தருளும். அடியேன் பாவங்கள் செய்யாவண்ணம், அடியேனைத் தடுத்து ஆட்கொண்டருளும். அடியேன் முன் படித்த பாடங்களும், இனிப் படிக்கும் பாடங்களும், அடியேன் மனசிலே எந்தநாளும் தங்கும்படி அருள் செய்யும்.

---

## சாயங் காலப் பிரார்த்தனம்.

மகா தேவரே! அடியேன் செய்த பாவங்களை எல்லாம் பொறுத்தருளும். இந்த இராத்திரியிலே அடியேனைக் காத்தருளும். அடியேன் தேவரீரை அறிந்து, தேவரீருக்குப் பயந்து, தேவரீர்மேல் அன்பு வைத்துத் தேவரீரைத் துதித்து, வணங்கும்படி செய்தருளும். அடியேன், இறக்கும்பொழுது, தேவரீரை மறவாத தியானத்துடனே, தேவரீருடைய பதத்திலே சேரும்படி அருள் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்கள்.

| பழையன. | புதியன. | இங்கிலிசு. | உச்சரிப்பு. |
| --- | --- | --- | --- |
| க | க | 1 | ஒன்று. |
| உ | உ | 2 | இரண்டு. |
| ௩ | ௩ | 3 | மூன்று. |
| ௪ | ௪ | 4 | நான்கு - நாலு. |
| ௫ | ௫ | 5 | ஐந்து - அஞ்சு. |
| ௬ | ௬ | 6 | ஆறு. |
| எ | எ | 7 | ஏழு. |
| அ | அ | 8 | எட்டு. |
| ௯ | ௯ | 9 | ஒன்பது. |
| ௰ | க0 | 10 | பத்து. |
| ௰க | கக | 11 | பதினொன்று. |
| ௰உ | கஉ | 12 | பன்னிரண்டு. |
| ௰௩ | க௩ | 13 | பதின்மூன்று. |
| ௰௪ | க௪ | 14 | பதினான்கு. |
| ௰௫ | க௫ | 15 | பதினைந்து. |
| ௰௬ | க௬ | 16 | பதினாறு. |
| ௰எ | கஎ | 17 | பதினேழு. |
| ௰அ | கஅ | 18 | பதினெட்டு. |
| ௰௯ | க௯ | 19 | பத்தொன்பது. |
| உ௰ | உ0 | 20 | இருபது. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பழையன. | புதியன. | இங்கிலிசு. | உச்சரிப்பு. |
|---|---|---|---|
| ௨௰௧ | ௨௧ | 21 | இருபத்தொன்று. |
| ௨௰௨ | ௨௨ | 22 | இருபத்திரண்டு. |
| ௨௰௩ | ௨௩ | 23 | இருபத்துமூன்று. |
| ௨௰௪ | ௨௪ | 24 | இருபத்துநான்கு. |
| ௨௰௫ | ௨௫ | 25 | இருபத்தைந்து. |
| ௨௰௬ | ௨௬ | 26 | இருபத்தாறு. |
| ௨௰௭ | ௨௭ | 27 | இருபத்தேழு. |
| ௨௰௮ | ௨௮ | 28 | இருபத்தெட்டு. |
| ௨௰௯ | ௨௯ | 29 | இருபத்தொன்பது. |
| ௩௰ | ௩0 | 30 | முப்பது. |
| ௩௰௧ | ௩௧ | 31 | முப்பத்தொன்று. |
| ௩௰௨ | ௩௨ | 32 | முப்பத்திரண்டு. |
| ௩௰௩ | ௩௩ | 33 | முப்பத்துமூன்று. |
| ௩௰௪ | ௩௪ | 34 | முப்பத்துநான்கு. |
| ௩௰௫ | ௩௫ | 35 | முப்பத்தைந்து. |
| ௩௰௬ | ௩௬ | 36 | முப்பத்தாறு. |
| ௩௰௭ | ௩௭ | 37 | முப்பத்தேழு. |
| ௩௰௮ | ௩௮ | 38 | முப்பத்தெட்டு. |
| ௩௰௯ | ௩௯ | 39 | முப்பத்தொன்பது. |
| ௪௰ | ௪0 | 40 | நாற்பது. |
| ௪௰௧ | ௪௧ | 41 | நாற்பத்தொன்று. |
| ௪௰௨ | ௪௨ | 42 | நாற்பத்திரண்டு. |
| ௪௰௩ | ௪௩ | 43 | நாற்பத்துமூன்று. |
| ௪௰௪ | ௪௪ | 44 | நாற்பத்துநான்கு. |
| ௪௰௫ | ௪௫ | 45 | நாற்பத்தைந்து. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பழையன. | புதியன. | இங்கிலிசு. | உச்சரிப்பு. |
|---|---|---|---|
| ௪௰௬ | ௪௬ | 46 | நாற்பத்தாறு. |
| ௪௰௭ | ௪௭ | 47 | நாற்பத்தேழு. |
| ௪௰௮ | ௪௮ | 48 | நாற்பத்தெட்டு. |
| ௪௰௯ | ௪௯ | 49 | நாற்பத்தொன்பது. |
| ௫௰ | ௫௦ | 50 | ஐம்பது. |
| ௫௰௧ | ௫௧ | 51 | ஐம்பத்தொன்று. |
| ௫௰௨ | ௫௨ | 52 | ஐம்பத்திரண்டு. |
| ௫௰௩ | ௫௩ | 53 | ஐம்பத்துமூன்று. |
| ௫௰௪ | ௫௪ | 54 | ஐம்பத்துநான்கு. |
| ௫௰௫ | ௫௫ | 55 | ஐம்பத்தைந்து. |
| ௫௰௬ | ௫௬ | 56 | ஐம்பத்தாறு. |
| ௫௰௭ | ௫௭ | 57 | ஐம்பத்தேழு. |
| ௫௰௮ | ௫௮ | 58 | ஐம்பத்தெட்டு. |
| ௫௰௯ | ௫௯ | 59 | ஐம்பத்தொன்பது. |
| ௬௰ | ௬௦ | 60 | அறுபது. |
| ௬௰௧ | ௬௧ | 61 | அறுபத்தொன்று. |
| ௬௰௨ | ௬௨ | 62 | அறுபத்திரண்டு. |
| ௬௰௩ | ௬௩ | 63 | அறுபத்துமூன்று. |
| ௬௰௪ | ௬௪ | 64 | அறுபத்துநான்கு. |
| ௬௰௫ | ௬௫ | 65 | அறுபத்தைந்து. |
| ௬௰௬ | ௬௬ | 66 | அறுபத்தாறு. |
| ௬௰௭ | ௬௭ | 67 | அறுபத்தேழு. |
| ௬௰௮ | ௬௮ | 68 | அறுபத்தெட்டு. |
| ௬௰௯ | ௬௯ | 69 | அறுபத்தொன்பது. |
| ௭௰ | ௭௦ | 70 | எழுபது. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பழையன. | புதியன. | இங்கிலிசு. | உச்சரிப்பு. |
|---|---|---|---|
| எ௰க | எக | 71 | எழுபத்தொன்று. |
| எ௰உ | எஉ | 72 | எழுபத்திரண்டு. |
| எ௰௩ | எ௩ | 73 | எழுபத்துமூன்று. |
| எ௰ச | எச | 74 | எழுபத்துநான்கு. |
| எ௰ரு | எரு | 75 | எழுபத்தைந்து. |
| எ௰கூ | எகூ | 76 | எழுபத்தாறு. |
| எ௰எ | எஎ | 77 | எழுபத்தேழு. |
| எ௰அ | எஅ | 78 | எழுபத்தெட்டு. |
| எ௰கூ | எகூ | 79 | எழுபத்தொன்பது. |
| அ௰ | அ0 | 80 | எண்பது. |
| அ௰க | அக | 81 | எண்பத்தொன்று. |
| அ௰உ | அஉ | 82 | எண்பத்திரண்டு. |
| அ௰௩ | அ௩ | 83 | எண்பத்துமூன்று. |
| அ௰ச | அச | 84 | எண்பத்துநான்கு. |
| அ௰ரு | அரு | 85 | எண்பத்தைந்து. |
| அ௰கூ | அகூ | 86 | எண்பத்தாறு. |
| அ௰எ | அஎ | 87 | எண்பத்தேழு. |
| அ௰அ | அஅ | 88 | எண்பத்தெட்டு. |
| அகூ௰ | அகூ | 89 | எண்பத்தொன்பது. |
| கூ௰ | கூ0 | 90 | தொண்ணூறு. |
| கூ௰க | கூக | 91 | தொண்ணூற்றொன்று. |
| கூ௰உ | கூஉ | 92 | தொண்ணூற்றிரண்டு. |
| கூ௰௩ | கூ௩ | 93 | தொண்ணூற்றுமூன்று. |
| கூ௰ச | கூச | 94 | தொண்ணூற்றுநான்கு. |
| கூ௰ரு | கூரு | 95 | தொண்ணூற்றைந்து. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பழையன. | புதியன. | இங்கிலிசு. | உச்சரிப்பு. |
|---|---|---|---|
| ௯௰௬ | ௯௬ | 96 | தொண்ணூற்றாறு. |
| ௯௰௭ | ௯௭ | 97 | தொண்ணூற்றேழு. |
| ௯௰௮ | ௯௮ | 98 | தொண்ணூற்றெட்டு. |
| ௯௰௯ | ௯௯ | 99 | தொண்ணூற்றொன்பது. |
| ௱ | ௧௦௦ | 100 | நூறு. |
| ௱௧ | ௧௦௧ | 101 | நூற்றொன்று. |
| ௱௨ | ௧௦௨ | 102 | நூற்றிரண்டு. |
| ௱௩ | ௧௦௩ | 103 | நூற்றுமூன்று. |
| ௱௪ | ௧௦௪ | 104 | நூற்றுநான்கு. |
| ௱௫ | ௧௦௫ | 105 | நூற்றைந்து. |
| ௱௬ | ௧௦௬ | 106 | நூற்றாறு. |
| ௱௭ | ௧௦௭ | 107 | நூற்றேழு. |
| ௱௮ | ௧௦௮ | 108 | நூற்றெட்டு. |
| ௱௯ | ௧௦௯ | 109 | நூற்றொன்பது. |
| ௱௰ | ௧௧௦ | 110 | நூற்றுப்பத்து. |
| ௱௨௰ | ௧௨௦ | 120 | நூற்றிருபது. |
| ௱௩௰ | ௧௩௦ | 130 | நூற்றுமுப்பது. |
| ௱௪௰ | ௧௪௦ | 140 | நூற்றுநாற்பது. |
| ௱௫௰ | ௧௫௦ | 150 | நூற்றைம்பது. |
| ௱௬௰ | ௧௬௦ | 160 | நூற்றறுபது. |
| ௱௭௰ | ௧௭௦ | 170 | நூற்றெழுபது. |
| ௱௮௰ | ௧௮௦ | 180 | நூற்றெண்பது. |
| ௱௯௰ | ௧௯௦ | 190 | நூற்றுத்தொண்ணூறு. |
| ௨௱ | ௨௦௦ | 200 | இருநூறு. |
| ௩௱ | ௩௦௦ | 300 | முந்நூறு. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பழையன. | புதியன. | இங்கிலிசு. | உச்சரிப்பு. |
|---|---|---|---|
| ௪00 | ௪00 | 400 | நாநூறு. |
| ௫00 | ௫00 | 500 | ஐந்நூறு. |
| ௬00 | ௬00 | 600 | அறுநூறு. |
| ௭00 | ௭00 | 700 | எழுநூறு. |
| ௮00 | ௮00 | 800 | எண்ணூறு. |
| ௯00 | ௯00 | 900 | தொளாயிரம். |
| ௲ | ௧000 | 1000 | ஆயிரம். |
| ௲௯௱௪௰௮ | ௧௯௪௮ | 1948 | ஆயிரத்துத்தொளாயிரத்து நாற்பத்து எட்டு. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை.

# பாலபாடம்

## இரண்டாம் புத்தகம்.

யாழ்ப்பாணத்து நல்லூர்

**ஆறுமுகநாவலரவர்கள்**

செய்தது.

இது

சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத்
தருமபரிபாலகர்

Mudlr. G. சுப்பிரமணியம் J.P அவர்களால்
சென்னபட்டணம்

வித்தியா நுபாலனயந்திரசாலையில்
அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.
18-ம் பதிப்பு.
விஜயளு மாசிமீ
1954.

அரசினரால் அங்கீகரிக்கப்பட்டது.
(Copyright Registered.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை.

# பாலபாடம்

## இரண்டாம் புத்தகம்.

## முதற்பிரிவு

### நீதிவாக்கியங்கள்.

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால், நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்.

கடவுளையும், அவரை வழிபடும் நெறியையும், அதனால் எய்தும் பயனையும், உனக்குப் போதிக்கும் அருள்வடிவாகிய ஆசாரியர் ஒருவரே உன் உயிர்த்துணை; ஆதலால், அவரை ஒருகாலமும் மறவாதே.

ஈசுரபத்தியும் நல்லொழுக்கமும் உள்ள பிதா மாதாக்களை உடைமையே பெரும் பாக்கியம்.

தீவிரமாயேனும் மந்தமாயேனும், நல்வினை இன்பத்தையும், தீவினை துன்பத்தையும், வருவிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மை செய்தற்குச் சமயம் வாய்க்கும் பொழுது செய்யா தொழிவையாகில், பின் ஒரு காலத்தில் அது வாய்ப்பது அரிது.

சோம்பலே தீமைக்கும் துன்பத்துக்கும் பிறப்பிடம்.

தங்கள் நயத்தின்பொருட்டு மாத்திரம் அன்றி, பிறர் நயத்தின் பொருட்டும் பிரயாசப் படுகின்றவர்களே உத்தமர்.

எவ்வளவு அதிக இரகசியமாகச் செய்யப்படும் நன்மைகளையும், முற்றறிவு உடைய கடவுள் அறிந்து, பயன் அளிப்பார்; பிறர் அறிந்தென்! அறியாதிருந்தென்!

தன்பொருட்டு மாத்திரம் பிரயாசப் படுபவன் அற்ப இன்பத்தை மாத்திரமே அனுபவிப்பான்; அவ்வற்ப இன்பமுமோ மிக இழிந்தது.

அறிவும் அதனால் ஆகிய நற்குண நற்செய்கைகளும் உள்ள சான்றோர்களாலே நன்கு மதிக்கப்படுதற்கு யோக்கியனாய் இரு.

நீ பிறர்க்குச் செய்த உபகாரங்களை நீயே எடுத்துப் புகழ்தல் தக்கது அன்று.

அடக்கம் உடைமை பாலியர்களுக்குச் சிறந்த ஆபரணம்.

நாம் செல்வத்தையும் உபசரிக்கப்படுதலையும் நம்முடைய பிரீதிக்கு மாறாக இகழ்தல் கூடும்; நல்லொழுக்கத்தையோ அப்படி இழத்தல் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுசியுடைமை சரீரத்திற்கு ஆரோக்கியத்தையும், மனசுக்கு இதத்தையும் வளர்விக்கும்.

நீ பிறர்க்கு ஒன்றை வாக்குத்தத்தம் செய்யுமுன், அது உன்னால் இயலுமோ இயலாதோ என ஆராய்ந்துகொள்.

இளமையிலே ஒருவன் பழகிய பழக்கம் நன்றேயாயினும், தீதேயாயினும், அதுவே பெரும்பான்மையும் மரணபரியந்தம் அவனைத்தொடரும்.

நமக்கு நல்லொழுக்கமும் புகழும் இன்பமும் வருதல் தவிர்தல்கள், முறையே பெரும் பான்மையும், நமது நற்சார்பு தீச்சார்புகளால், ஆகும்.

நாம் இரகசியமாகக் குற்றம் செய்யும்போது, பிறர் நம்மைக் கண்டியாவண்ணம் தப்பிக்கொள்வோமாயினும், நம்முடைய மனம் நம்மைக் கண்டியாவண்ணம் தப்பிக்கொள்ள மாட்டோமே.

நாம் சிறு துன்பங்களைச் சகிக்கப் பயிலல் வேண்டும், பயில்வோமாகில், மேலே பெருந் துன்பங்களையும் சகிக்கவல்லர் ஆவோம்.

உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவற்ற களஞ்சியம்.

மனத்திருத்தியிலும், சரீராரோக்கியத்திலும், நற்குண நற்செய்கைகளை உடையராய் வாழ்தலிலுமே அன்றி, திரவியத்திலே இன்பம் ஜனியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவாய்க்குத் தக்க வாழ்க்கை இல்லாத பொழுது செல்வராவார் ஒருவரும் இலர், அது உள்ள பொழுது வறியராவார் மிக அரியர்.

கடன்படும் செல்வர்களினும், கடன்படா வறியவர்களே மிகுந்த சுகம் உடையவர்கள்.

கோள்கேட்பவன் இல்லையாயின், கோள் சொல்பவனும் இல்லை.

பிறருக்கு வரும் கல்வி செல்வங்களைக் காணும்பொழுது, பொறாமை இன்றி மகிழ்தலே நன்மனசுக்கு அழகு.

நாம் செய்த குற்றங்களை நாமே வெளிப்படுத்திப் பச்சாத்தாபப் படுவோமாயின், அறிவினால் மூத்த பெரியோர்கள் நம்மேல் இரங்கி அவைகளைப் பொறுத்துக்கொள்வார்கள்.

நம்முடைய குற்றங்கள் இவைகள் என்று நமக்குத் தெரிவித்து அவைகளை நீக்கி நடக்கும் நெறியை நமக்குப் போதிக்கின்றவர்களே நமக்கு உத்தம சிநேகிதர்கள்.

நம்மேல் அன்பு இல்லாதவர்கள் மேலும், நாம் அன்பு உள்ளவர்களாயே இருத்தல் வேண்டும்.

பிறர் உனக்குச் செய்த குற்றங்களினாலே உனக்குக் கோபம் தோன்றும்பொழுது, நீ பிறருக்குச் செய்த குற்றங்களை நினைப்பாயாகில், அது அடங்கிவிடும்.

நம்முடைய செயல்கள் அனைத்தும் சுருதிக்கும் யுக்திக்கும் இசைந்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரிடத்திலே நமக்குக் குற்றம் என்று தோன்றுபவைகளே நம்மிடத்தில் நமக்குக் குற்றம் என்று தோன்றாமை பட்ஷபாதத்தினால் அன்றோ?

அறிவும் நல்லொழுக்கமும் உடையவர்களை நிந்திப்பவர்கள், அறிவையும் நல்லொழுக்கத்தையுமே நிந்திக்கிறார்கள்.

தரித்திரனாய் இருக்கும் போது திருப்தி அடையாதவன், செல்வனாயபோதும், திருப்தியடையான், திருப்தியடையாமை மனக்குற்றமே அன்றிப் பொருட்குற்றம் அன்று.

அதிக வருத்தத்தோடு உன்னைப் பெற்று வளர்த்த பிதா மாதாக்களை, நீ என்ன வருத்தப் படினும், மறந்தும், கைவிடாமல், அன்போடு காப்பாற்று.

உன்னால் உன் தாய் தந்தையருக்குக் கிடைத்த உபசாரமே,அது கண்ட உன் பிள்ளைகளால் உனக்குக் கிடைக்கும்.

பிரயோசனம் இல்லாத சொற்களைச் சொல்லுவோன், அறிவாகிய உள்ளீடு இன்மையால் மனிதருக்குள்ளே பதர் என்று சொல்லப்படுவான்.

பாவம் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இல்லையாயில், பாவம் செய்பவர்களும் இலர்; ஆதலால் பாவம் செய்பவர்களினும், அவர்களை நன்கு மதிப்பவர்களே பெரும்பாவிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருடைய இன்சொற்கள் தனக்கு இன்பம் தருதலை அநுபவித்து அறிகின்றவன், அது நிற்க, கடுஞ்சொற்களைப் பிறரிடத்தே வழங்குவது என்ன பயன் குறித்து!

எவ்வகைப்பட்ட பெரிய நன்றிகளைக் கொன்றவனுக்கும் உய்வு உண்டாம், செய்ந்நன்றியைக் கொன்றவனுக்கு உய்வு இல்லை.

பாவம் செய்ய ஏவுகின்றவன், செய்கின்றவனோடு, சமமாகத் தண்டிக்கப்படுவான்.

பகைவர், அயலோர், நட்பினர் என்னும் இம்மூவகையோரிடத்தும், தருமத்தின் வழுவாமல், ஒப்ப நிற்றல் நடுவு நிலைமை எனப்படும்.

பொய் கூறலாகிய பாவம் ஒன்றை ஒளிப்பின், அதுவே நெறியாக மற்றப் பாவங்கள் அனைத்தும் தாமே ஒழிந்துவிடும்.

ஒருபொய் சொன்னவன், அதைத்தாபிக்கப்புகின், ஒன்பது பொய் சொல்லல் வேண்டும்.

காரணம் பற்றியாயினும், அறியாமையால் ஆயினும், ஒருவன் உன்னிடத்துத் தீங்கு செய்தபோது, நீயும் அதனை அவனிடத்துச் செய்யாது பொறுத்துக்கொள்.

திரவியம் எல்லார்க்கும் எந்நாளும் அவசியம் வேண்டுவதாய் இருக்கையால், அதனை விரைந்து சம்பாதிக்கவேண்டும்.

திரவியம் தேடுதற்கு முயற்சியே சிறந்த கருவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரீர வருத்தத்துக்கு அஞ்சிப் பிற தொழில்களைச் செய்து பொருள் பெற்றும், உணவின் பொருட்டு வேளாளரிடத்துச் செல்லல் வேண்டுதலாலும், பொய் முதலிய பாவம் கலவாமையாலும், வேளாண்மைக்கு நிகராவது ஒன்றும் இல்லை.

செல்வம் முதலியவற்றினாலே செருக்கு அடைந்து, முன் உன்னோடு பயின்ற சினேகிதரை மறந்துவிடாதே.

பாவத்துக்கு அஞ்சிப் பொருள் சம்பாதித்து, பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பங்கிட்டு, நீயும் உண்ணு.

பாவத்தால் வந்த பிறன் பொருளைப் பங்கிட்டு உண்பாயாகில், தருமம் பொருளுடையானையும், பாவம் உன்னையும் அடைந்து, உன் சந்ததி நாசம் அடையும்.

பிறர் பொருளானது, உடல் உயிர் இரண்டிற்கும் ஊறு செய்தலால், உடல் ஒன்றிற்கே ஊறு செய்யும் விஷத்தினும், கொடிதாம்.

பிறர் பொருளைக் கவர்தற்குப் பலவகையால் வன்மை இருந்தும் அது செய்யாதவன் எவனோ, அவனே அவருக்கு அப்பொருள் அனைத்தையும் கொடுத்தவன் ஆவான்.

இரப்போருக்குப் பொருள் கொடுத்தவன் அக்கொடை தன் உயிரை விடாது மறுமையினும் தொடர்தலால், அப்பொருளை மாத்திரம் இழந்திலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணும் வகையறிந்து உண்ணுதலும், உண்டபின் நூறடி உலாவுதலும், பகலிலே நித்திரை செய்யாமையும், வாரந்தோறும் எண்ணெய் இட்டு தலைமுழுகுதலும் உளவாயின், உடம்பிலே நோய் உண்டாகாது.

நீ உன் உடம்பை வளர்த்தற்குப் பிறிதொன்றன் உடம்பை உண்பையாயின், எவ்வகையால் அருளை ஆளுவை?

உன் உள்ளத்திலே செல்வமிகுதியால் அகந்தை தோன்றுமாயின், உன்னின் மிக்காருடைய செல்வத்தையும், வறுமை மிகுதியால் துக்கந் தோன்றுமாயின், உன்னின் இழிந்தாருடைய வறுமையையும், நினை; நினைப்பாயாகில், அகந்தை துக்கங்கள் உன்னை எக்காலத்தும் அணுகாவாம்.

சூதாடலானது ஒன்றினை முன் பெற்று இன்னும் பெறுவேன் என்னும் கருத்தால் நூற்றினை இழந்து வறியன் ஆதற்கு ஏதுவாம்; ஆதலால், அதனை ஒரு பொழுதும் நினைத்தலும் செய்யாதொழி.

சூதாடலை விரும்புவாய் ஆயின் காலமும் கருத்தும் பெறப்படாமையால், கல்வி, செல்வம், ஊண், உடை என்பன உன்னை அடையாவாம்.

நன்மை தீமையைப் பகுத்தறியும் அறிவை மயக்கி அதுபயக்கும் ஒழுக்கத்தைக் கெடுத்தலால், கள்ளுண்டலே பாவத்துக்கெல்லாம் தலையாயது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டவிடத்து முகமாத்திரம் மலரும்படி சினேகிப்பது சினேகம் அன்று, அன்பால் உள்ளமும் மலரும்படி சினேகிப்பதே சினேகம் ஆம்.

நீ உன்னிலும் மெலியாரை வருத்தச் செல்லுமிடத்து, உன்னின் வலியவர் உன்னை வருத்த வரும்போது அவர் முன் அஞ்சி நிற்கும் உனது நிலையை நினை.

பிறிதோர் உயிர்க்கு வந்த நோயைத் தனக்கு வந்த நோய்போலக் குறிக்கொண்டு காப்பாற்றா விடத்து, அறிவினாலே பயன் யாது?

நீ பிறனொருவனது பழியை அவன் புறத்திலே சொல்லுவையாயின், அவன் உன் பல பழிகளுள்ளும், நீ மிக வருந்தும்படி, அதிகமாகிய பழிகளை ஆராய்ந்து உன் எதிரே சொல்லுவான்.

ஒருவன் எவ்வெப்பொருளினின்றும் நீங்கினானோ, அவன் அவ்வப்பொருளினால் வரும் துன்பத்தை அனுபவித்தல் இலன்.

எந்த நாட்டையும் எந்த ஊரையும் உன் நாடும் உன் ஊரும் ஆக்குவது கல்வி, ஆதலால், அதனை இளமை தொடுத்து மரணபரியந்தம் விடாமற் கல்.

சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன், நித்திரையை விட்டு எழுந்து, தந்தசுத்தி செய்து, கடவுளை வணங்கிக்கொண்டு, உன் பாடங்களைக் கற்பாயாயின், அவைகள் உன் மனசிலே நன்றாகப்பதியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசானுடைய உள்ளத்திலே அருள் வரும்படி நடத்தலே கல்விக்குச் சிறந்த கருவி.

அழிவு உள்ளதும் துக்கமயமுமாகிய உன் சரீரத்தைத் தம்பயன் கருதிப் பெற்று வளர்த்த உன் தாய் தந்தையரினும், அழிவு இல்லதும் இன்பமயமுமாகிய உன் அறிவை உன்பயன் கருதிப் பெற்று வளர்த்த உன் ஆசாரியரே மேலானவர்.

நீ வருந்திக்கற்ற நூலை மறக்க விட்டு வேறு நூலைக்கற்றல், கையிலே கிடைத்த பொருளை எறிந்துவிட்டு வேறுபொருள் அரிப்பரித்துத் தேடல் போலும்.

சபைக்கு அஞ்சி நடுங்கும் வித்துவான்களிடத்தில் கல்வியும், சபைக்கு அஞ்சாத மூடர்களிடத்தில் ஆரவாரச் சொற்களும், உண்டாதலினும் உண்டாகாமையே நன்று.

உன்னை யாவரும் வியக்கக் கருதி நீயே உன்னைப் புகழ்தல், விளக்கைப் பிரகாசிப்பிக்கக் கருதி அதனது தகழியில் நீரை வார்த்தல் போலும்.

செல்வம் கல்லாதவரைக் கெடுக்கையாலும், வறுமை கற்றோரைக் கெடாமையாலும், கல்லாதாரிடத்து உண்டாகிய செல்வம், கற்றவரிடத்து உண்டாகிய வறுமையினும், மிகத்துன்பஞ் செய்வதாம்.

செல்வம் உள்ள மூடரினும், வறுமை உள்ள வித்துவான்களே எங்கும் நன்கு மதிக்கப்படுவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வம் அழிவு உள்ளது ஆதலால், அதனால் வரும் பெருமையும் அழிவுள்ளது, கல்வி அழிவில்லாதது ஆதலால், அதனால் வரும் பெருமையும் அழிவில்லாதது.

உடம்போடு அழிதலால் பயன்படாச் சாதியுணர்ச்சி இலராயினும், உயிரோடு செல்லுதலாற் பயன்படும் கல்வியுயர்ச்சி உடையவரே மேன்மக்கள்.

கல்வியறிவால் ஆகிய மூப்பே மூப்பு, ஆதலால், அதனை உடையவர்களே யாவராலும் வணங்கப்படத்தக்கவர்கள்.

அநித்தியமும் சடமுமாகிய உன் சரீரத்தின் பிதாமாதாக்களுடைய சொல் நித்தியமும் சித்துமாகிய உன் ஆன்மாவின் பரமபிதா மாதாவாகிய கடவுளது சொல்லாகிய வேதாகமங்களுக்கு விரோதம் இல்லாவழி அமைந்து நட.

அருட்செல்வமே அறிவுடையோரிடத்து மாத்திரம் உளதாகி, எவ்வுயிர்களாலும் நன்கு மதிக்கப்படும் பெருஞ்செல்வம்.

நேற்றைக்கு உளன் எனப்பட்டான் இன்றைக்கு இலன் எனப்படுதல் கண்டும், உன் உயிர்க்குப் பயன்படுவனவற்றைச் செய்யாது, வீண் நாட்கழிப்பது, ஐயையோ, எவ்வளவு அறியாமை!

நாவை அடக்கி விக்கல் எழும்போது, ஒன்றைச் செய்தலே அன்றிச் சொல்லலும் கூடாமையாலும், அது இன்ன காலத்தில் வரும் என்று அறிதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாமையாலும், மோட்ஷத்திற்கு ஏதுவாகிய புண்ணியத்தை விரைந்து செய்

நாம் சிற்றறிவு சிறுதொழில் உடையேம் ஆதலால், முற்றறிவு முற்றுத்தொழில் உடைய கடவுளை வணங்கி அவருடைய திருவருள் வசமாய் நிற்பின் அன்றி, பாவபுண்ணியங்களை உள்ளபடி அறிதலும், பாவங்களை ஒழித்துப் புண்ணியங்களைச் செய்தலும், நம்மால் இயலாவாம்.

**ஆக நீதிவாக்கியங்கள் 82.**

# கதைகள்

1. எந்த உயிரையும் கொல்லாத ஒரு சந்நியாசி ஒரு ஏரிக்கரைமேலே போனார். போகும்போது ஒரு செம்படவன் அந்த ஏரியிலே மீன் பிடித்தான். சந்நியாசி செம்படவனைப்பார்த்து "ஐயோ! நீ எப்போது கரை ஏறுவாய்" என்றார். "ஐயா, என்பறி நிரம்பினால் கரை ஏறுவேன்" என்றான்.

2. இரண்டு மல்லகசெட்டிகள் ஒருவரோடு ஒருவர் மல்யுத்தம் பண்ணினார்கள். ஒருவன் மற்றவனைக் குப்புறத்தள்ளி, புரட்டிப்புரட்டி உதைத்தான். உதையுண்ட வீரன் எழுந்து நின்று சனங்களைப்பார்த்து, "ஆனால் என்ன, என் மீசையிலே மண்படவில்லை" என்று மீசையை முறுக்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஒரு மனிதன் ஒரு மகாராசனைப் பார்த்து "நீர் எனக்கு ஆறுமாசம் நல்ல போசனம் தருவீராகில் பின் ஒரு பெரிய மலையை எடுப்பேன்" என்றான். அவன் இவனுக்கு அப்படியே நல்ல ஆகாரம் கொடுத்தான். பின் மலைக்குச் சமீபத்திலே அழைத்துக் கொண்டு போய் " இதை எடு" என்றான். அவன் "நீங்கள் எல்லாரும் எடுத்து என் தலைமேலே வைத்தால் எடுக்கிறேன்" என்று சொன்னான்.

4. செலவுகாரனாகிய ஒரு உத்தியோகஸ்தன் ஒரு செல்வனைக் கடன் கேட்டான். "திரும்ப நீ எப்படிக் கடன் தீர்ப்பாய்" என்றான். " என் சம்பளத்திலே மாசந்தோறும் சேர்த்துத் தருவேன்" என்றான். "இதற்கு முன்னே தானே நீ இப்படிச் சேர்த்துக் கொள்ளலாகாதா" என்றான். "ஆனால் நான் தெரிவிக்கின்றேன்: எப்படியெனில் கடன் தரமாட்டேன்: போ" என்றான். பின் பணஞ்சேர்க்கத் தொடங்கினான்.

5. ஒரு குரு தம்முடைய சீஷனுக்கு ஞானங்கள் உபதேசித்தார். உபதேசிக்கும் போது, சீஷன் தன் வளையிலே நுழையப் போகும் எலியைப்பார்த்து அதன்மேலே நினைப்பாக இருந்தான். குரு உபதேசித்தவுடனே "சீஷா, எல்லாம் நுழைந்ததா" என்றார். சீஷன் "எல்லாம் நுழைந்தது, வால் மாத்திரந்தான் நுழையவில்லை" என்றான். மூடர்களுக்குச் சொல்கிற புத்தி இப்படியே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஓராசிரியன் சீஷன் வீட்டுக்குப் போய், சில வார்த்தைகள் பேசிக் கொண்டு இருக்கும் பொழுது, "சீஷா, உன் பிள்ளைகள் நால்வருள் யோக்கியன் யாவன்" என்றான். "சுவாமீ, இங்கே கூரைவீட்டின்மேல் ஏறிக்கொண்டு கொள்ளிக்கட்டை சுழற்றுகிறானே! இவன்தான் இருக்கிறவர்களுக்குள்ளே பரம யோக்கியன்" என்றான். குரு "மற்றை மூவர்கள் எப்படிப்பட்டவர்களோ" என்று, மூக்கின்மேலே விரல் வைத்து, பெருமூச்சு விட்டு, "அப்படியா" என்று விசனப்பட்டான்.

7. ஒரு செல்வன் தன்பிதாவுக்கு ஓட்டிலே கஞ்சிவார்த்துக்கொண்டு வந்தான். அவன் பிள்ளை அதைப் பார்த்து, அந்த ஓட்டை எடுத்து ஒளித்துப் போட்டான். பின் அந்தச் செல்வன் தன் பிதாவைப்பார்த்து, "ஓடு எங்கே" என்று கேட்டு அடித்தான். அப்பொழுது அந்தப் பிள்ளை "அப்பா, என் பாட்டனை அடியாதே; நானே அந்த ஓட்டை எடுத்து ஒளித்து வைத்தேன்; ஏன் என்றால், நான் பெரியவன் ஆனபின் உனக்கு வேறே ஓடு சம்பாதிக்க மாட்டேன்" என்றான். அதைக் கேட்டு, செல்வன் வெட்கப்பட்டு அன்று முதல் தன் பிதாவை மிகுந்த சௌக்கியமாக வைத்திருந்தான்.

8. ஒரு பாடகன் தெருத்திண்ணையிலே இருந்து தலையசைத்துக் கொண்டு சங்கீதம் பாடினான். வெகுசனங்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது வழியிலே போகிற ஒரு ஆட்டிடையன் அங்கே நின்று,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றுநேரம் பார்த்து தேம்பித் தேம்பி ஓயாமல் அழுதான். இருந்தவர்கள் ஆனந்தத்தாலே அழுகிறான் என்று எண்ணி, "ஏன் அழுகிறாய் அழாதே" என்றார்கள். இடையன் ஐயோ! என் மந்தையிலே ஒரு ஆடு இந்த வழியே வரப்பெற்று, கோணக் கோண இழுத்து, யாதொன்றினாலும் பிழையாமல் இறந்துபோயிற்று; அது இந்தப் பிள்ளைக்கும் வந்ததே என்று அழுகிறேன்; ஆனால், இவனுக்கு உடனே சூடுபோட்டால் ஒருவேளை பிழைப்பான்" என்றான். அவர்கள் அவனுடைய அறியாமையைக்கண்டு நகைத்து, அவனைத் திட்டித் துரத்தினார்கள்.

9. ஒருவன் பதினாயிரம் வராகன் வைத்திருந்தான். அவன் தனக்கு மரணகாலம் சமீபித்ததை அறிந்து, தன் இரண்டு பிள்ளைகளையும் அழைத்து, ஒவ்வொருவனுக்கு ஐவைந்து பணம் கொடுத்து, "இதனாலே வீட்டை நிறையப் பண்ணுகிறவனுக்கு என்பொருளைக் கொடுப்பேன்" என்றான். அவர்களுள் மூத்தவன் ஐந்து பணத்துக்கும் மலிந்த பண்டமாகிய கருப்பஞ் செத்தை வாங்கிவந்து, வீடு நிறையக் கொட்டிப் பரப்பிவைத்தான். இளையவன் மெழுகுவர்த்தி வாங்கிவந்து, ஏற்றி எங்கும் பிரகாசிக்க வைத்தான். பிதா அவ்விரண்டையும் பார்த்து, தீபம் ஏற்றினவனுக்கே பொருளை ஒப்பித்தான்.– புத்தியுள்ளவனே பெரியவன்.

10. ஒருவன் கடைவீதியிலே இராமாயணப் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு இடைச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடனாகிய தன் கணவனுக்குப் புத்தி வருமென்று எண்ணி, அவனைப்பார்த்து, "நீர் இராமாயணம் கேட்டுவாரும்" என்று அனுப்பினாள். அவன் அப்படியே வந்து, மோவாயிலே கோலை ஊன்றி, குனிந்து கொண்டு நின்றான். அங்கே இருந்தவர்களில் ஒரு துட்டன் அவன் முதுகின்மேல் ஏறிக்கொண்டான். அந்த இடையன் பிரசங்கம் முடியுமளவும் அப்படியே சுமந்துகொண்டு நின்று, பின் வீட்டுக்குப் போனான். அவன் மனைவி அவனைப்பார்த்து "இராமாயணம் எப்படி இருந்தது" என்றாள். "அது இலகு அன்று; ஒரு ஆட்சுமை இருந்தது" என்றான். அவள் அதை ஆராய்ந்து அறிந்து, அவன் மடமைக்கு விசனப்பட்டாள்.

11. ஒருத்தி அழகும் விவேகமும் உள்ள ஒருவனை விவாகஞ் செய்ய வேண்டும் என்று வெகுநாள் காத்திருந்தாள். ஒருநாள் அழகுள்ள புருஷன் ஒருவன் வந்தான். அவன் விவேகியோ என்று அறியும்பொருட்டு அவனோடு பேசிக்கொண்டிருந்தாள். அப்பொழுது அங்கே சடசட என்றது. அவன் "அது என்ன" என்றான். "அது உடும்பு" என்றாள். "அதில் ஓிறகு பிடுங்கிவா; காது குடைதல் வேண்டும்" என்றான். "உடும்புக்கு இறகு இருக்குமா! போ" என்று அவனை அனுப்பிவிட்டாள். சிலநாள் சென்றபின், வேறொருவன் வந்தான். அவனுடனே, "முன் ஒரு மூடன் உடும்பிலே இறகு பிடுங்கிவரச் சொன்னான்" என்றாள். அதற்கு அவன் சிரித்து, "அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமை என்று நினைத்தான்போலும்'' என்றான். இவன் அவனிலும் பெருமூடன் என்று எண்ணி, இவனையும் இகழ்ந்து போகச்சொன்னாள்.

12. ஒரு பிறவிக்குருடனுக்கு ஒருபிள்ளை பிறந்தது. அந்தப்பிள்ளை ஒருநாள் பால் புரைக்கேறி இறந்துபோயிற்று. பந்துக்கள் அந்தக் குருடன் சமீபத்தில் வந்து, "உன் பிள்ளை இறந்துபோயிற்று'' என்றார்கள். "எப்படி இறந்தது'' என்றான். "பால் குடிக்கையில் இறந்தது'' என்றார்கள். "பால் எப்படி இருக்கும்'' என்றான். "வெள்ளையாயிருக்கும்'' என்றார்கள். "வெள்ளை எப்படி இருக்கும்'' என்றான். "கொக்குப்போலிருக்கும்'' என்றார்கள். "கொக்கு எப்படி இருக்கும்'' என்றான். கையைக் கோணலாக வளைத்துப் "பார்'' என்றார்கள். அவன் தடவி நீண்டு வளைந்து கோணலாக இருப்பதை அறிந்து, ஐயோ! இந்த முரட்டுப் பால் குழந்தைவாயில் நுழைந்தால் சாவாமல் பிழைக்குமா'' என்று அலறி அழுதான்.— ஒரு பொருளை அறியும் அறிவில்லாதவர்களுக்குச் சொல்லுவது இப்படியே விபரீதம் ஆகும்.

13. விடியற் காலத்திலே நித்திரைவிட்டெழுந்திருக்கும் போது முன்னே சோட்டுக் காகங்களைப் பார்த்தவனுக்கு அன்றைக்கு நல்ல லாபம் உண்டாகும் என்று ஒருவன் கேள்விப்பட்டு, தன் வேலைக்காரனை அழைத்து, "நீ விடியற் காலத்திலே சோட்டுக் காகத்தைப் பார்த்துவந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை எழுப்பு" என்றான். வேலைக்காரன் அப்படியே சோட்டுக்காகம் இருக்கக்கண்டு வந்து, எசமானனை எழுப்பினான். எசமானன் எழுந்துபோய்ப் பார்க்கும்போது, ஒரு காகம் ஓடிப் போய்விட மற்றக்காகம் இருந்தது. அப்போது எசமானன் "ஒன்று போவதற்கு முன்னே தானே என்னை எழுப்பாமற்போனாய்" என்று கோபித்துக்கொண்டு, வேலைக்காரனை அடித்து உதைத்தான். அப்போது வேலைக்காரன் "ஐயா, இரண்டு காகத்தையும் பார்த்த எனக்கு வந்த இந்த லாபத்தை நீர் பார்க்க இல்லையா" என்றான். அதுகேட்டு எசமானன் வெட்கப்பட்டான்.

14. பணத்திலே ஆசையில்லாத ஒரு சந்நியாசி காட்டுவழியே செல்லும் பொழுது, அங்கே ஒரு பணப்புதையலைக் கண்டு, பயந்து ஓடினான். அப்போது எதிராக ஒரு வேலைக்காரனோடு வந்த சந்நியாச வேஷதாரிகள் இருவர் அவனைப்பார்த்து, "நீ ஏன் ஓடுகிறாய்" என்றார்கள். "அங்கே இருக்கிற ஆட்கொல்லியைக் கண்டு பயந்து ஓடுகிறேன்" என்றான். அவர்கள் இருவரும் "இவன் பணத்தையே ஆட்கொல்லி என்று சொல்லுகிறான், மூடன்" என்று நினைத்து, அங்கே போய், அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு போனார்கள். அவர்களுடைய வேலைக்காரன், அவர்களைக் கொன்றுபோட்டால் அந்தப் பணத்தைத் தான் எடுத்துக்கொள்ளலாம் என்று நினைத்து, அவர்களுக்குச் சமைக்குஞ் சோற்றை நஞ்சுகலந்து சமைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தான். அவர்கள் இருவரும், வேலைக்காரன் ஒருவேளை தங்களைப் பங்கு கேட்பான் என்று நினைத்து, குளத்திலே குளிக்கும்போது அவனைத் தண்ணீரிலே அமிழ்த்திக் கொன்றுவிட்டு வந்து, அவன் சமைத்த சோற்றைத் தின்று, தாங்களும் இறந்து, ஆட்கொல்லி என்கின்ற வார்த்தையை நிசமாக்கினார்கள்.

15. ஒரு மூடன் ஒரு செட்டியுடனே கூடிக்கொண்டு பயணம் பண்ணினான். பண்ணும்போது, இரவிலே மிக இருளானபடியினாலே இவன் ஒரு மைதானத்திலே வழியிலே படுத்துக்கொண்டான். செட்டி சமீபத்திலே ஒரு செடி மறைவிலே படுத்துக்கொண்டான். அப்பொழுது வழியிலே போகிற திருடர் காலிலே மூடன்கால் தட்டுப்பட்டது. ஒரு திருடன் "இது என்ன! கட்டைபோல் இருக்கிறது" என்றான். மூடன் கோபங்கொண்டு "போ போ, உன் வீட்டுக்கட்டை இடுப்பிலே ஐந்துபணம் முடிந்து கொண்டு நன்றாகப் படுத்திருக்குமா" என்றான். திருடர் அவனைப்பிடித்து அந்தப் பணத்தைப் பிடுங்கிக்கொண்டு போனார்கள். போகும்போது, "இந்தப்பணம் செல்லுமோ செல்லாதோ" என்று பேசிக்கொண்டார்கள். மூடன் அதைக்கேட்டு, "ஆ என் பணம் அப்படிப்பட்டதா! வேண்டுமாகில் செல்லுமோ செல்லாதோ என்று அறியும்பொருட்டு, இங்கே செட்டியார் இருக்கிறார், காட்டுங்கள் என்று அந்தச் செட்டியைச் சுட்டிக்காட்டிச் சொன்னான். அவர்கள் செட்டியிடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த நூறுவராகனையும் பறித்துக்கொண்டு போனார்கள்.- மூடர்கள் சேர்க்கையினாலே தப்பாமல் கேடு வரும்.

16. ஒரு ஊரிலே ஒரு பார்ப்பான் இறைச்சி தின்று கள்ளுக் குடித்து வெறிகொண்டு திரிபவனாயிருந்தான். கல்வியறிவு உள்ள ஒரு சூத்திரன் அவன் மேல் இரங்கி அவனைப்பார்த்து, "ஐயா, நீர் கடவுள் அருளிய வேதாகமங் களுக்கு மாறாக இறைச்சி தின்று கள்ளுக் குடிக்கிறீரே, இதனால் உமக்கு மறுமையிலே நரகத் துன்பம் கிடைப்பதே யன்றி, இம்மையிலே எவர்களாலும் அவமதிப்பும் வரும். ஐயையோ! ஏன் கெட்டுப்போகிறீர்! உம்மிடத்திலே ஒழுக்கம் இல்லாதபோது பிராமணத்துவம் எங்கே" என்றான். பார்ப்பான் கோபங்கொண்டு, "நான் அப்படிச் செய்வதை அறிந்திருந்தும், அப்படிச் செய்யாத பிராமணர்களும் என்னையே நன்கு மதிக்கின்றார்கள். எல்லாரும் அந்தப் பிராமணர்களைப் பார்க்கிலும் என்னையே பெரியவர் எனக்கொண்டு, எனக்கே முதல் தானம் தருகின்றார்கள். என்னைப் பிராமணன் அல்லன் என்று இன்றைக்கு நீயே சொல்லக்கேட்டேன். உன் வீட்டுக்கு அரிசிக்கு வராமற் பார்த்துக்கொள்; போ போ பைத்தியக்காரா" என்றான். வித்துவான் பெருமூச்சுவிட்டு ஆலோசனையுடன் தலை குனிந்துகொண்டு போனான். பார்ப்பான் தன்னோடு நின்ற மூடனாகிய ஒரு செல்வனைப் பார்த்து, "தம்பி, இவன் வெட்கித்துப் போனான்; பார்த்தீரா"! என்றான். பணக்காரன் "ஆஆ சந்தேகம் என்ன சுவாமி!" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. ஒரு நாள் ஒரு நரி இரைக்காகத் திரியும்போது, நல்ல திராட்சைப் பழக்கொத்து ஒன்று எதிர்ப்பட்டது. அதைப் பறிக்கும்படி அந்த நரி வேண்டிய மட்டும் குதித்தும் எட்டவில்லை. அப்போது அது "சீ புளிக்குமே" என்று சொல்லிப் போய்விட்டது.

18. ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு பிள்ளை மற்றொருவனை நோக்கி, "சிநேகிதனே, நீ கடவுள் இருக்கின்ற இடத்தைச் சொல்வாயாகில் உனக்கு ஒரு மாம்பழம் தருவேன்" என்றான். அதற்கு அவன் "தோழா, நீ கடவுள் இல்லாத இடத்தைச் சொல்வாயாகில், உனக்கு இரண்டு பழம் தருவேன்" என்றான். இவர்களிற் பின் கேட்டவன் புத்தி பெரியது.

19. சம்பத்து உடையவனாகிய ஒரு வர்த்தகன் இருந்தான். அவன் தன் பல்லக்குச் சுமக்கிற ஆட்களை அழைத்து, "பசுமாட்டுக்கு நாள் தோறும் புல்லுவெட்டிக் கொண்டுவந்து போடுங்கள்" என்றான். அதற்கு அவர்கள் "நாங்கள் பல்லக்குமாத்திரம் சுமப்போம், வேறுவேலை செய்யமாட்டோம்" என்றார்கள். இப்படி இருக்கும்பொழுது ஒருநாள் பசுவின் கன்று வெளியில் ஓடிப்போயிற்று. அப்பொழுது வர்த்தகன் அந்தச் சிவிகையாட்களைப் பார்த்து, "கன்றைத் தேடிப்பிடித்துக்கொண்டு வாருங்கள்" என்று சொல்ல, அவர்கள் "நாங்கள் பல்லக்குச் சுமக்கிறவர்களோ, மாடு மேய்க்கிறவர்களோ" என்றார்கள். அப்போது வர்த்தகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குப் புத்தி வரும்படி செய்யவேண்டுமென்று யோசித்து, மத்தியான வேளையிலே பல்லக்குக் கொண்டு வரச்சொல்லி, அதிலே தான் ஏறி, கன்றைத்தேடும்படி நெரிஞ்சிமுள் இருக்கிற காட்டுமார்க்கமாய்ப் போகச்சொன்னான். அவர்கள் அப்படியே போய்த்திரிந்து வருந்துகையில், வர்த்த கனிடத்தில் முறையிட்டார்கள். அதற்கு அவன் "பல்லக்குச் சுமக்கிறது உங்கள் கடமை, கன்றைத் தேடுகிறது என் கடமை" என்று சொல்லி, அவர்கள் பல்லக்கை நிறுத்தாமற் சுமக்கும்படி செய்தான். அன்றுமுதல் அவர்கள் நல்ல புத்தி அடைந்து, எசமானன் ஏவும் எந்தக் காரியத்தையும் செய்வது கடமையென்று ஒப்புக்கொண்டார்கள்.

20. ஒரு தேசத்தில் ஒரு கிழவன் இருந்தான். அவனுக்கு அநேக பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் ஒருவரோடு ஒருவர் ஒற்றுமையின்றி நாள்தோறும் சண்டை செய்துகொண்டிருப்பதை தகப்பனானவன் கண்டு, தன்னாற் கூடிய வரையில் அவர்களுக்குத் தக்க புத்திகளை அடிக்கடி சொல்லிவந்தும், அவர்கள் கேளாமற் போனார்கள். இப்படியிருக்க, அவன் தனக்குள் ஒருயுக்தி செய்துகொண்டு, தன் பிள்ளைகள் யாவரையும் அழைத்து, எதிரே நிறுத்தி, குட்டையாயிருந்த ஒரு விறகுகட்டைக் கொண்டுவந்து, அவர்கள் முன்வைத்து, "பிள்ளைகளே, நீங்கள் எப்படியாவது பிரயாசப்பட்டு ஒவ்வொரு வனாக இந்த விறகுகட்டை முறியுங்கள், பார்ப்போம்" என்றான். அவர்கள் தகப்பன் சொற்படி தனித்தனியே தங்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனமட்டும் பிரயாசப்பட்டும் முறிக்கமாட்டாமற் போனார்கள். உடனே கிழவன் அவ்விறகுகட்டை அவிழ்க்கச் சொல்லி, ஒவ்வொருவன் கையில் ஒவ்வொன்றாகக் கொடுத்து, "இப்பொழுது முறியுங்கள்" என்று சொல்ல, அவர்கள் மிக எளிதாக முறித்துப்போட்டார்கள். அப்பொழுது தகப்பன் தன் புத்திரரைப்பார்த்து, "பிள்ளைகளே, இவ்விறகுக்கட்டு ஒன்றாயிருந்தபொழுது, உங்களால் எள்ளளவும் முறிக்கக்கூடாமற்போயிற்று. கட்டவிழ்த்துத் தனித்தனியே பிரித்தபொழுதோ, மிக எளிதாக முறித்துப் போட்டீர்களே; இதனாலே தான் நீங்கள் உங்களுக்குள் எள்ளளவும் பேதமின்றி ஒருமித்திருப்பதினால் உண்டாகும் பலன் இத்தன்மையதென்று எளிதாகத்தெரிந்து கொள்ளலாம்; ஆதலால் இனி நீங்கள் ஒருவரோடு ஒருவர் சண்டை போடாமல், பாலும் நீரும்போல ஐக்கியமாக இருக்கவேண்டும். அவ்வாறு இருப்பீர்களானால், ஒருவரும் உங்களை மோசஞ்செய்து வெல்லமாட்டார்கள்" என்றான். அது முதல் அந்தப் பிள்ளைகள் தங்கள் தகப்பனாற் காட்டப்பட்ட திருஷ்டாந்தத்தை ஒருபொழுதும் மறவாமல் ஒருமையை அனுசரித்துக்கொண்டுவந்து சுகப் பட்டார்கள். ஆதலால் பிள்ளைகளே, நீங்களும் எப்பொழுதும் சகோதர ஒருமையை அனுசரித்து நடக்க வேண்டும்.

21. ஒருநாள் இரவு மூடனாகிய ஒரு திருடன் ஒரு பிரபுவின் வீட்டிலே நுழைந்து சில சாமான்களைத் திருடிக்கொண்டு, வெளியே புறப்பட்டுப் போனான். அதைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபு தற்செயலாய், வெளியிலே வரும்பொழுது கண்டு, அவனை இன்னான் என்று அறிந்து, கூச்சலிட்டுத் துரத்திக்கொண்டு பிடிக்கும்படி ஓடினான். திருடன் களவெடுத்த பொருள்களிற் சிலவற்றை வழியில் எறிந்துவிட்டு, மிகுந்த வேகமாக ஓடி அந்தப் பிரபுவுக்குத் தப்பி மறைந்துவிட்டான்.

பிரபு மறுநாட்காலையில் அவன் எறிந்த பொருள்களை எடுப்பித்துக் கொண்டு போய் நியாயாதிபதியினிடத்திலே காட்டி, "இன்ன பெயருடைய திருடன் என் வீட்டிலே நேற்றிரவு புகுந்து களவெடுத்தான்" என்று முறைப்பாடு செய்தான். நியாயாதிபதி பிரதிவாதியாகிய கள்ளனை அழைத்து வழக்கை விசாரித்தார். கள்ளன் "நான் அந்த இடத்துக்குப் போகவேயில்லை" என்று மறுத்துவிட்டான். அப்பொழுது பிரபுவுக்காகச் சாட்சி சொல்லும்படி சாட்சிக் கூடத்தில் ஏறிய பிரபுவினுடைய வேலைக்காரன் ஒருவன், "இவன் இன்ன நேரத்திலே என்னுடைய எசமானன் வீட்டிற் களவெடுத்துக் கொண்டு ஓடும்போது நான் பார்த்தேன்" என்றான்.

உடனே, அந்தக் கள்ளன், சாட்சிக்காரனைச் சினந்து ஏறிட்டுப்பார்த்து, நியாயாதிபதியை நோக்கி "ஐயா, இவனை நான் அந்த இடத்திலே காணவில்லை" என்றான். நியாயாதிபதி அக்கள்வனை அவன் வாக்கினாலே "இவன் திருடன்" என்று தீர்மானித்து, அவனுக்குக் கடுந்தண்டம் விதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமி

நாம் வாசஞ்செய்கின்ற பூமி மிகவும் பெரியதாயும், அளவிறந்த பொருள் களை உடையதாயும் இருக்கின்றது. இதிற் சிலபாகம் நீரும் சில பாகம் நிலமுமாய் இருக்கின்றன. நிலத்தில், உயர்ந்த மலைகளும், மண்மேடுகளும், தாழ்ந்த பள்ளங்களும், சமநிலங்களும் இருக்கின்றன.

நிலத்திலே பலவிதமான மரங்களும், கொடிகளும், புல்பூண்டுகளும் உண்டாகும். இவைகள் செழித்து வளர்வதனாலே தான் பூமி மிகவும் சிறப்புள்ளதாகத் தோன்றுகின்றது. நிலம் மனிதர்களுடைய தொழில் முயற்சிக்குத்தக்கபடி பலன்தரும். பூமியில் உள்ள சிருஷ்டி பேதங்கள் அளவில்லாதவைகளாயும், ஆச்சரியப்படத் தக்கவைகளாயும் இருக்கின்றன.

உவர்நீர் ஒன்றாகச்சேர்ந்து பரந்து, நிலத்தைச் சூழ்ந்திருக்கின்றது. இப்படிச்சேர்ந்த உப்பு நீர்ப்பரவை சமுத்திரம் என்று சொல்லப்படும். சமுத்திரத்திலே, மீன் முதலாகிய நீர்வாழ் பிராணிகளும், முத்து பவளம் என்னும் இரத்தினங்களும் உண்டாகும். அதில் மனிதர்கள் கப்பலேறிச் சஞ்சரிக்கின்றார்கள்.

சமுத்திரசலத்தை மனிதர்கள் குடிக்கிறதில்லை. அதன் அருகில் தோண்டினால், குடிக்கத்தக்க நல்ல சலம் ஊறும். மனிதர்களுக்கு மிகவும் உபயோகப்படுகிற உப்பு, சமுத்திரசலத்தால் விளையும். குடிப்பதற்கும் ஸ்நானஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதற்கும் தகுதியான நல்ல சலம் ஆறு குளம் கிணறு என்னும் இவைகளில் உண்டு.

## மிருகம்

மிருகங்களாவன சிங்கம், புலி, யானை, ஒட்டகம், கரடி, குதிரை, மாடு, ஆடு, எருமை, மான் முதலானவைகளாம். மிருகங்களில் சில துட்டகுணம் உள்ளவை. சில சாந்தகுணம் உள்ளவை. பிற பிராணிகளைக்கொன்று தின்கிற சிங்கம், புலி முதலிய மிருகங்கள் துட்டகுணம் உள்ளவை. புல் தழை முதலிய தாவர உணவுகளை உண்கின்ற மான் மாடு முதலிய மிருகங்கள் சாந்தகுணம் உள்ளவை.

யானை குதிரை முதலிய சில மிருகங்கள் துட்டத் தன்மை உள்ளவைகளாய் இருந்தபோதிலும், மனிதர் கைப்பட்டுப் பழகிவருதலாற் சாந்தகுணம் உள்ளவைகளாய், மனிதர்களுக்கான அநேக வேலைகளைச் செய்கின்றன.

மிருகங்கள் காடுகளிலும், நாடுகளிலும் இருக்கின்றன. நாய், நரி, பூனை, குரங்கு, முயல், அணில், ஓந்தி முதலான சிறு மிருகங்கள் காட்டிலும் நாட்டிலும் வாசஞ் செய்கின்றன. மிருகங்களுக்கு விலங்குகள் என்றும் பெயர்.

மிருகங்கள் எல்லாம் நான்கு காலும் ஒரு வாலும் உடையவைகளாயிருக்கும். இவைகளிற் சிலவற்றிற்குக் கொம்பு உண்டு. சிலவற்றிற்குக் கொம்பு இல்லை. சில மிருக சாதிகளில் ஆண் மிருகத்திற்குக் கொம்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் மிருகத்திற்குக் கொம்பு இல்லை. விலங்குகளின் கொம்புகள் அநேக வேலைகளுக்கு உதவுகின்றன.

காட்டு மிருகங்களாகிய மான் முதலியவைகளை இராசாக்களும் செல்வர்களும் தங்கள் வீடுகளிற் கொண்டு வந்து, வளர்க்கிறார்கள். நாற்கால் விலங்குகளுள் யானை, ஒட்டகம், குதிரை, மாடு, ஆடு, எருமை என்னும் இவைகள் மனிதர்களுக்கு மிகவும் உபயோகம் உள்ளவைகள்.

## காற்று

காற்று, கண்ணுக்குத் தோன்றாது; எங்கும் பரந்திருக்கும். அதைப் பரிசத்தால் அறியலாம். அது மெல்ல வீசினால் இளங்காற்று என்றும், பெலனாக வீசினாற் கடுங்காற்று என்றும் பெயர். நிலத்திலிருந்து சுழன்று கொண்டு மேலே எழும்புங் காற்றுக்குச் சுழல்காற்று அல்லது சூறைக்காற்று என்று பெயர். காற்று, தான் இருந்துவரும் திக்குக்களின் பேதங்களினாலே கீழ்காற்று முதலாகப் பலபெயர்களைப் பொருந்தும். குணங்களினாலும் வேறுபட்டிருக்கும்.

வாடை, தென்றல், கொண்டல், மேல் காற்று என்னும் நான்கு காற்றினுள்ளும் தென்றற்காற்றே உடம்புக்கு மிகுந்த ஆரோக்கியத்தைத் தருவது. அது சித்திரை, வைகாசி மாதங்களில் வீசும். கடல் நீரில் விழுந்து வருங்காற்று வாதமுதலிய நோய்களை நீக்கும். ஆதலாற் கடற்காற்றுப் படும்படி சிறிதுநேரம் உலாவுவது உடம்புக்குச் சுகத்தைக் கொடுக்கும். பெருங்காற்றில் உலாவுவது நன்றன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றுச் சீவர்களுக்கு மிகவும் உபயோகமானது. நல்ல காற்று இல்லாதிருந்தால் நாங்கள் நெடுநாட் சீவிக்க மாட்டோம். நல்ல காற்று இல்லாமல் அடைபட்டிருக்கிற அறையினுள் இருந்தால், நோய் உண்டாகும். அதனால், நல்ல காற்று உலாவும் அறையில் நித்திரை செய்தல் வேண்டும்.

## தேசங்கள்

பூமியிலே பல தேசங்கள் இருக்கின்றன. அவ்வத் தேசங்களுக்குப் பாஷைகள் வெவ்வேறு விதமாய் இருக்கின்றன. ஒவ்வொரு தேசத்தாருடைய நிறம், குணம், உருவம், செயல் என்னும் இவைகள் ஒவ்வொரு விதமாய் இருக்கும்.

தமிழ்ப்பாஷை பேசுவோர் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் இருக்கிறார்கள். தென்னிந்தியாவில் தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்னும் பாஷைகளும், இலங்கையில் சிங்களப் பாஷையும் வழங்குகின்றன.

இந்தியாதேசம் பல மாகாணங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றது. அவைகளுள், தென்னிந்தியாவிலுள்ள சோழதேசத்தில் அநேக சிவாலயங்களும் விஷ்ணுவாலயங் களும் நெருங்கியிருக்கின்றன. தென்னிந்தியாவிலுள்ள பிரதான பட்டணங்கள் சென்னப்பட்டணம், பம்பாய். இந்தியா முழுவதிற்கும் பிரதான பட்டணம் டெல்லி.

இலங்கைத்தீவு இந்தியாவுக்குத் தெற்கே இருக்கின்றது. அதன் பிரதான பட்டணம் கொழும்பு. இலங்கைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவுக்கும் போக்குவரவு செய்பவர்கள் தோணி அல்லது கப்பல் ஏறிச் செல்லல் வேண்டும். இப்போது புகை வண்டியிலும், ஆகாய விமானத்திலும் செல்லலாம்.

இலங்கையில் வடபாகத்திலும் தென்மேல் பாகத்திலும் தமிழ்ப்பாஷையும் மற்றைப் பாகங்களிற் பெரும்பான்மையும் சிங்களப்பாஷையும் பேசுகிறார்கள்.

## மாடு

நாற்கால் விலங்குகளுள் மாடு நமக்கு மிகவும் உதவியுள்ளதாயிருக்கிறது. அதில் ஆண் எருது அல்லது காளை என்றும், பெண் பசு என்றும் சொல்லப்படும். எருது மாடு உழவும், வண்டி இழுக்கவும் உதவும். பசுமாடு பால் தரும்.

பாலைக்காய்ச்சிப் பிரை இட்டால், தயிர் ஆகும். தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுக்கலாம். வெண்ணெயைக் காய்ச்சினால் நெய்யாகும். பசுக்கள் தரும் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்னும் ஐந்தும் பஞ்சகவ்வியம் என்று சொல்லப்படும்.

மனிதர்கள் பசுக்களினால் அடையும் பிரயோசனத்தை வேறு எந்த மிருகங்களினாலும் அடையமாட்டார்கள். பசுக்களைத் துன்பம் அடையாத வண்ணம் காப்பாற்றுபவர்களுக்கு இம்மையில் அவைகள் தரும் பால் முதலியவைகளால் அடையும் சுகம் மாத்திரம் அன்றி, மறுமையில் புண்ணியலோகமும் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர்த்தொழில் செய்வோர்க்கு மாடு இல்லாவிடில் அத்தொழில் ஒரு காலத்தும் விருத்தி அடையாது. மாட்டுச்சாணி பயிர்களுக்கு நல்ல எருவாகும். வீடுகளிலே கரைத்துத் தெளிக்கிற சாணம் அசுசியைப்போக்கிச் சுத்தப்படுத்துவது மாத்திரம் அன்றி, வீடுகளில் உண்டாகும் அசுத்த வாயுவைப்போக்கிச் சுகத்தைக் கொடுக்கும்.

எல்லாவிதத்தாலும் பசுக்களும் எருதுகளும் மனிதர்களுக்கு இன்றியமையாதவைகளாயிருக்கிறபடியால், அவைகளை வெய்யில், மழை, உணவின்மை, நோய் முதலியவைகளினாலே வருத்தமடையாதபடி சாவதானமாகக் காப்பாற்றுதல் வேண்டும்.

## பக்ஷி

கருடன், பருந்து, கழுகு, கூகை, மயில், கிளி, புறா, கொக்கு, காகம், குயில் முதலியவைகள் பக்ஷிகள். பக்ஷிகளுக்குப் பறவைகள் என்றும் பெயர். பறவைகளுள், சிறு உருவமுடைய சில சாதிகளுக்குக் குருவிகள் என்று பெயர்.

கருடன், பருந்து முதலிய சில பறவைகள் நெடுநேரம் ஆகாயத்திலே பறந்து திரியும். மயில், கோழி முதலிய சில பறவைகள் கொஞ்சத்தூரம் மாத்திரம் பறந்து, பின் களைத்து மரக்கொம்புகளில் அல்லது நிலத்தில் இருந்துவிடும்.

சில பறவைகள் நெல் முதலிய தானியங்களையும், சில பறவைகள் மாமிசங்களையும் புசிக்கும். பருந்து, கழுகு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகம் என்னும் பக்ஷிகளும் நாய், நரிகளும் பிணங்களைத் தின்பதில் மிகுந்த விருப்பம் உடையவைகள்.

கிளி, நாகணவாய், மயில், கோழி முதலிய சில பக்ஷிகளை அநேகர் வளர்க்கிறார்கள். கிளியும் நாகணவாயும் சொல்லிக்கொடுத்தபடி பேசும்.

பல சாதியான விலங்குகளையும், பறவைகளையும், ஊர்வனவற்றையும், நீர்வாழ்வனவற்றையும், கல்கத்தா சென்னைப்பட்டணம் முதலிய இராசதானிகளில் உள்ள காட்சிச் சாலைகளிற் பார்க்கலாம்.

## தாவரம்

மரங்களும், செடிகளும், கொடிகளும் தாவரம் என்று சொல்லப்படும். ஒரே இடத்தில் நின்று வளருகிறபடியால் இவைகளுக்குத் தாவரம் என்று பெயர். தாவரங்கள் நமக்கு உணவுகளைக் கொடுக்கின்றன; நிழலைச் செய்கின்றன; கண்களுக்குக் குளிர்ச்சியைச் செய்கின்றன; வாசனை உள்ள புஷ்பங்களைத் தருகின்றன; நல்ல காற்றை உண்டாக்கு கின்றன; உடம்பில் உண்டாகும் வியாதிகளைத் தீர்த்தற்கு மருந்துகளுமாகின்றன.

தேக்கு, பாலை, முதிரை, தென்னை, பனை முதலான பலசாதி மரங்களால் மனிதர்கள் வீடு கட்டிக்கொள்ளுகிறார்கள். தென்னோலை பனையோலைகளினாலே வீடுவேயலாம். பனையோலை எழுதவும், கூடை, கடகம் முதலியன செய்யவும் உதவும். சில இடங்களிலே பனையின் பதநீரைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்ச்சி வெல்லம் எடுத்து விற்கிறார்கள். யாழ்ப்பாணத்துப் பனைமரம்போல வைரமுள்ள பனைமரம் வேறு எங்கும் கிடைப்பது அரிது. தேங்காய் எண்ணெயும் தென்னந்தும்புக் கயிறும் மிக உபயோகமானவைகள். இவைகள் இரண்டும் மலையாளத்திலும் இலங்கையிலும் இருந்து பல இடங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

## வஸ்திரம்

குளிர் வெய்யில் முதலியவைகளினாலே வருத்தம் உறாதபடி மனிதர்களுக்குச் சுகத்தைக் கொடுத்து, மானத்தைக் காப்பாற்றி, அவர்களுக்கு அலங்காரத்தையும் பெருமையையுஞ் செய்வது வஸ்திரம். அன்னத்தைப்போல வஸ்திரமும் மனிதர்களுக்கு அவசியம் வேண்டியதாயிருக்கிற படியினாலேதான் "அன்னவஸ்திரம்" என்று அன்னத்தோடு வஸ்திரமுஞ் சேர்த்து எண்ணப் படுகிறது. வஸ்திரம் இல்லா விட்டால் ஆபரணம் ஒருவருக்கும் அழகைச் செய்யாது.

வஸ்திரம் பருத்தி நூலினாலும், பட்டு நூலினாலும் நெசவு பண்ணப் படுகின்றது. பருத்தி நூலினுடைய இயற்கையான நிறம் சுத்த வெண்மை, பட்டு நூலின் இயற்கையான நிறம் பொன்மை கலந்த வெண்மை. இந்த இரண்டு வகை நூல்களையும் பலவகையான சாயங்கள் ஊட்டியும் நெய்கிறார்கள். பருத்தி நூல் வஸ்திரத்தை எல்லாரும் வாங்குகிறார்கள். பட்டு வஸ்திரத்தைச் செல்வர்கள் வாங்குகிறார்கள். வஸ்திரங்கள் எல்லாத் தேசங்களிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெசவு பண்ணப்படுகின்றன. ஆயினும் அவ்வத் தேசத்துக்குத் தக்கபடி வஸ்திரம் பலவிதமாயிருக்கும். பட்டு ஒரு பூச்சியினாலே செய்யப்படுகிறது.

பருத்திநூல், வஸ்திரம், பட்டுநூல் வஸ்திரம் என்னும் இரண்டையும் சரிகை சேர்த்து நெய்வதும் உண்டு. சரிகை வஸ்திரம் விலையேறப் பெற்றது. வஸ்திரங்கள் இன்னும் ஆட்டு உரோமத்தினாலும் சில மரங்களினுடைய நாரினாலும் செய்யப்படுகின்றன.

எல்லாத்தேசத்தாருக்கும் இயைந்த பலவித வஸ்திரங்களும் ஐரோப்பாக் கண்டத்தில் இருந்து இத் தேசங்களுக்கு வருகின்றன. வஸ்திரங்களைக் கையினால் நெய்கிறதிலும், யந்திரங்களினாலே வெகு சீக்கிரமாக நெய்யலாம். ஐரோப்பியர்கள் யந்திரத்தினாலே நெய்கிறதினால், அவர்களுடைய வஸ்திரங்கள் மலிவாக விலைப்படுகின்றன. கொஞ்சக்காலமாக இந்தியாவிலும், இலங்கையிலும் யந்திரங் களினால் நெய்கிறார்கள்.

## யானை

யானை விலங்குகள் எல்லாவற்றிலும் மிகப்பெரிய உருவமுடையது. அதனுடைய கண் அதன் உருவத்துக்குத் தக்கபடி பெரியதன்று. மற்றை மிருகங்களின் முகங்களோடு ஒத்துப் பார்க்கும்பொழுது யானையின் முகம் மிகவும் வேறுபாடு உடையதாய்த் தெரியும். அதன் மூக்கு நீண்டு கை போலிருக்கும். அதற்குத் துதிக்கை என்று பெயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானை உணவுகளை எடுத்து உண்பதும், தண்ணீரை மொண்டு குடிப்பதும், வேலைகள் செய்வதும் துதிக்கையினால். அதனால் மிகச் சிறிய ஊசியையும் யானை நிலத்திலிருந்து எடுக்கும். யானைக்கு உணவு தழைகளும், வளர்ந்த புற்களும், கரும்புகள், பழங்கள், தானியங்கள் என்னும் இவைகளையும் அது தின்னும். யானையின் கழுத்து மிகக் குறுகியது. அதன் கொம்பு இரண்டு கடைவாய் வழியாக முளைக்கும். செவி முறம்போலவும் கால் உரல்போலவும் இருக்கும். யானைக்கொம்பினால் பல்லக்கு, சீப்பு, சதுரங்கக் காய் முதலிய பல வேலைகள் செய்வார்கள்.

யானை தனக்குப் பிறர் செய்த தீமையை நினைத்திருந்து பழிக்குப்பழி வாங்கும். யானை மிகுந்த பலமுள்ள மிருகம். அது பெரிய மரங்களை வேரொடு சாய்த்துவிடும். யானைகள் பழக்கப்பட்ட பின்பு கற்பித்த வேலைகளைச் செய்யும். மனிதர்களாலே செய்யக்கூடாத அநேக வேலைகளை யானைகள் செய்து முடிக்கின்றன. யானைகள் இந்தியாவிலும், பிரமதேசத்திலும், இலங்கையிலும், அபிரிக்கா தேசத்திலும் காணப்படுகின்றன.

## உலோகங்கள்

பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் என்பன பஞ்சலோகம் எனப்படும். உலோகங்கள் எல்லாவற்றிலும் பொன் மிகச் சிறந்தது. அது அதிக கனமும் ஒலியும் உள்ளது. அதன் நிறம் மஞ்சள். வேறு கலப்பில்லாத சுத்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னைத் தங்கம் என்று சொல்லுவார்கள். அது அதிக விலையுள்ளது.

பொன்னுக்கு இரண்டாவது வெள்ளி. இது வெண்மைநிறம் உள்ளது. இதற்கு அடுத்தது செம்பு. இது தாமிரம் என்றும் சொல்லப்படும். தாமிரம் மங்கலான சிவப்பு நிறமாயிருக்கும். புளியிட்டுத் தேய்த்தாற் பிரகாசிக்கும். ஈயம் வெண்மை நிறம் உள்ளது. ஆனால் வெள்ளியைப்போலச் சுத்த வெண்மையாயிராது. உலோகங்கள் எல்லாவற்றுள்ளும் எளிதில் அகப்படுவது இரும்பு.

பொன் வெள்ளிகளினாலே நாணயங்களும் ஆபரணங்களும், செம்பினாலே நாணயங்களும் பாத்திரங்களும் செய்யப்படுகின்றன. நாணகம் என்பது நாணயம் என இக்காலத்தில் விளங்குகின்றது. பொன் வெள்ளிகளினாலே பாத்திரங்களையும் வேறு சில வேலைகளையுஞ் செய்கின்றார்கள். ஈயத்தினாலே பாத்திரங்கள் செய்யப்படுகின்றன. இரும்பினாலே ஆணி, பூட்டு, சாவி, ஆயுத வகைகள், இன்னும் பலவித சாமான்கள் செய்யப்படுகின்றன. சட்டி முதலிய சில பாத்திரங்களும் இரும்பினாற் செய்யப்படுகின்றன.

ஈயம் மற்றை உலோகங்களைக் காட்டிலும் இலேசில் இளகுந் தன்மை உள்ளது. அது அற்ப நெருப்புச் சூட்டினால் உருகும். பித்தளைப் பாத்திரம் செப்புப் பாத்திரங்களுக்கு ஈயத்தை உருக்கிப் பூசினால், களிம்பு ஊறாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே சொல்லப்பட்ட பஞ்சலோகங்களும் சில தேசங்களிலே நிலங்களில் இருந்து வெட்டி எடுக்கப் படுகின்றன. செம்பும் துத்தநாகமுங் கலந்து பித்தளையும், செம்பும் வெள்ளீயமுங் கலந்து வெண்கலமும் செய்யப் படுகின்றன. பித்தளைப் பாத்திரமும், வெண்கலப் பாத்திரமும் மனிதர்களுக்கு மிகவும் உபயோகமானவைகள். நல்ல வெண்கலப் பாத்திரம் களிம்பு ஊறாது.

## வேளாண்மை

வேளாண்மையாவது நிலங்களைத் திருத்திப் பருவம் பார்த்து வேண்டிய செய்கைகளைச் செய்து, பலவகையான பயிர்களை உண்டாக்குதல். மனிதர்களுக்குச் சீவ ஆதாரமாயுள்ளது வேளாண்மை. வேளாண்மைக்கு மேலாகிய தொழில் வேறு ஒன்றும் இல்லை.

வேளாண்மை செய்பவனுக்கு மாடு ஆடுகளும், கலப்பை மண் வெட்டிகளும், எருவும் அவசியம் வேண்டும். பயிர்களை அவைகள் நன்றாய் உண்டாகத்தக்க நிலத்தையும், காலத்தையும் பார்த்து, உண்டுபண்ணினால் மிகுந்த பயனை அடையலாம். உணவுப்பொருள்களைத் தருகிற நெல், வரகு, தினை, பயறு, எள்ளு முதலிய பயிர் வகைகள் அன்றி, பருத்தி, அவுரி, புகையிலை முதலிய செடி வகைகளும் மிகுந்த பிரயோசனத்தைத் தருபவைகள். இவைகளை அன்றி, மா, பலா, தென்னை முதலான மரங்களையும் வைத்து உண்டாக்கல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர்த்தொழில் தனக்கும் பிறர்க்கும் பிரயோசனத்தையும், உடம்புக்கு ஆரோக்கியத்தையும் உண்டாக்கும். ஆதலால், பயிர்த்தொழிலை எல்லாரும் கைவிடாது செய்துகொண்டு வருவது நல்லது. இந்தியாவிலே சில இடங்களிலும், இலங்கையில் யாழ்ப்பாணத்திலும், பயிர்களுக்குச் சலத்தை இறைத்துப் பாய்ச்சுகிறார்கள். யாழ்ப்பாணத்திலே நெல் மழையினால் விளைகின்றது. இலங்கையில் மற்றைப்பகுதி களிலும் இந்தியாவிலும் ஆறுகள் ஏரிகளின் பாய்ச்சலினால் நெல் அதிகமாக விளைகின்றது.

## வியாபாரம்

திரவியத்தைச் சம்பாதித்தற்கு உரிய தொழில் முயற்சி களுள்ளே வியாபாரம் சிறந்த தொழில். வியாபாரத்துக்கு உரிய முதல் தன் சொந்த முதலாக இருத்தல் வேண்டும். வட்டிக்கு வாங்கிச் செய்யும் வியாபாரம் தலையெடுக்காது.

வியாபாரத்திற்காக விட்டிருக்கும் முதலையும் வட்டியையும் பார்த்து, அவைகளுக்குத் தக்கபடி, நியாயமாக இலாபத்தைச் சம்பாதித்தல் வேண்டும். பிறரைக் கெடுத்துத் தான் இலாபஞ் சம்பாதிக்கும்படி எண்ணலாகாது. பிறர் பொருளையும் தன்பொருள்போல நினைத்தல் வேண்டும். தான் வியாபாரப் பொருள்களை வாங்குவதற்கு ஒன்றும், பிறருக்கு அவைகளை விற்பதற்கு ஒன்றும் ஆக, வேறு வேறு அளவைகளையும் நிறைகளையும் வைத்திருத்தல் ஆகாது. நெல் முதலாகிய உணவுக்கு உரிய பொருள்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக இலாபத்தைக் கருதாமல், மலிந்த விலைக்கு விற்கவேண்டும்.

தன்னுடைய வியாபாரப் பொருள்கள் எந்த எந்த இடங்களில் மலிவாக அகப்படும் என்று அறிதலும், தேச சஞ்சாரம் செய்தலும், தேச கால வர்த்தமானங்களை அறிதலும், வியாபாரஞ் செய்பவனுக்குக் கடமையாம். வியாபாரிக்குக் கணக்கு, நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டியது ஆவசியகம்.

வியாபாரத்தை ஒருவர் தனித்துச் செய்வதிலும் பார்க்க, பலர்கூடிச் செய்வது உத்தமம். ஆங்கிலேயர் முதலிய பிறசாதியர்கள் பலர் சேர்ந்து வியாபாரஞ்செய்து, மிகுந்த திரவியத்தைச் சம்பாதிக்கிறார்கள். வேளாண்மை, வியாபாரம், கல்விகற்றல் என்னும் இவைகளுக்கு முயற்சியே சிறந்தகருவி.

## மெய்ம்மை

ஒருநாள் விடியற்காலையில் இரண்டு சிறுவர்கள் ஒரு சந்தைக்குப்போய், தங்களுடைய சிறிய கடைகளில் தாங்கள் கொண்டுபோன பொருள்களைப் பரப்பிவைத்து, விற்கிறதற்காக உட்கார்ந்தார்கள். ஒரு கடையில் பழங்களும் காய்கறிகளும், மற்றொன்றில் தேங்காயும் வைக்கப்பட்டிருந்தன. சந்தை கலைந்தது. இந்தச் சிறுவர்களிடத்தும் பலபேர் பொருள்கள் வாங்கிக்கொண்டு போனார்கள்.

முருகனுடைய கடையில் எல்லாம் விற்றுக் கடைசியாய் ஒரு முலாம்பழம் மாத்திரம் இருந்தது. ஒரு பெரியமனிதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து, கையை அந்த முலாம்பழத்தின் மேல் வைத்து, எவ்வளவு பெரிய முலாம்பழம்? இதற்கு என்னவிலை சொல்லுகிறாய், "அடா தம்பி?" என்று கேட்டார்.

"இந்த முலாம்பழம் ஒன்றுதான் என்னிடத்தில் மிகுந்தது; இது நல்ல பழம்போல் தோன்றினாலும் இதில் கொஞ்சம் பழுது இருக்கின்றது ஐயா," என்று சொல்லி அந்தச் சிறுவன் அந்தப்பழத்தை மறுபுறம் திருப்பிக்காட்டினான்.

"ஆம் ஆம்! பழுது இருக்கின்றது! எனக்கு அது வேண்டாம்." என்று சொல்லி, அந்தப் பெரியமனிதர் அந்தச் சிறுவனுடைய அழகிய வஞ்சகமில்லாத முகத்தைப் பார்த்து, "உன்னுடைய பழத்திலுள்ள பழுதை வாங்க வருபவர் களுக்குக் காட்டுவது விற்கவந்த உனக்கு ஆகுமா?" என்று கேட்டார்.

"பொய்சொல்வதைப் பார்க்கிலும் இது நல்லது, ஐயா" என்று அந்தச் சிறுவன் பணிவுடன் சொன்னான். "நீ சொன்னது சரி, அடா தம்பீ, ஒருபோதும் அதை மறவாதே; நான் உன்னுடைய கடையை இனி மறவேன்." என்று சொல்லி, அந்தப் பெரியமனிதர் கிருஷ்ணன் கடை முகமாகத் திரும்பி, "இது என்ன நல்ல பழத்தேங்காயா?" என்று கேட்டார். "ஆம், ஐயா, நல்லபழக்காய்; நேற்றுத் தான் பிடுங்கினது—நான்தான் உரித்தேன்." என்று கிருஷ்ணன் மறுமொழி சொன்னான். அந்தப் பெரியமனிதர் அதை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போயினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முருகா, நீ என்ன பெரிய மூடன்! முலாம் பழத்திலுள்ள பழுதை அந்த மனிதனுக்குக் காட்டுகிறதா! நீ சொன்ன உண்மைக்காக அந்தப் பழத்தை இனி வீட்டுக்குக்கொண்டு போ, அல்லது எங்கேயாவது எறிந்துவிடு. அந்த முட்டுக் காயை வாங்கிக்கொண்டு போகின்றாரே, அவர் அதைப்பற்றி என்ன அறிந்துவிட்டார்? நல்ல பழக்காய்கள் விற்ற விலைக்கே அதையும் விற்றேன். அந்த முலாம்பழத்தை ஒன்றும் பாராமல் வாங்கிக்கொண்டு போயிருப்பார்.

"கிருஷ்ணா, எனக்கு இன்றுகாலமே கிடைத்த காசைப் போல இரண்டு பங்கு காசுதான் வந்தாலும் நான் ஒரு பொய் சொல்லவும் மாட்டேன், பொய்யாய் நடக்கவும் மாட்டேன். அல்லாமல், இது கடைசியிலே எனக்குத்தான் நயம். எனக்கு ஒரு வழக்கக்காரர் அகப்பட்டார்; உனக்கொருவர் போய் விட்டார்!"

அது அப்படியே நடந்தது. மறுநாள் அந்தப் பெரியமனிதர் தனக்கு வேண்டிய பழங்களையும் காய்கறிகளையும் எல்லாம் முருகனிடத்திலேயே வாங்கினார்; கிருஷ்ணனுடைய கடையில் ஒரு சல்லிக்குக்கூட ஒன்றும் வாங்க வில்லை. இந்தவிதமாகவே அந்த வருஷம் கழிந்தது. முருகனிடத்தில் எப்போதும் நல்ல பொருள் வாங்கலாம் என்று கண்டுகொண்டு அவர் அவனுடைய கடைக்கே எப்போதும் போவார்; சிலவேளை அவனிடத்தில் "மறு வருஷம் நீ என்னசெய்யப்போகிறாய்" என்று விசாரிப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுவருஷம் அந்தப் பெரிய மனிதருடைய பண்டகசாலையில் ஒரு நம்பிக்கையான சிறுவன் வேண்டியிருந்தது; அவர் முருகனைப் பார்க்கிலும் வேறொருவன் அகப்படான் என்று நினைத்து, முருகனுக்கே அந்த வேலையைக் கொடுத்தார். அவன் தன் எசமானனுக்குத் தன்னிடத்தில் மேலும் மேலும் நல்ல எண்ணம் வரும்படி நடந்து, ஒவ்வொரு உத்தியோகமாக உயர்ந்து, கடைசியில் எசமானனோடு வர்த்தகத்தில் ஒரு பங்காளி ஆயினான்.

## யுகம் 4.

| | | | |
|---|---|---|---|
| **கிருதயுகம்** | ௵ ௧௭ | லக்ஷத்து | ௨௮௲ |
| **திரேதாயுகம்** | ௵ ௧௨ | லக்ஷத்து | ௯௬௲ |
| **துவாபரயுகம்** | ௵ ௮ | லக்ஷத்து | ௬௪௲ |
| **கலியுகம்** | ௵ ௪ | லக்ஷத்து | ௩௨௲ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருஷம் 60

| | | |
|---|---|---|
| பிரபவ | சர்வசித்து | பிலவங்க |
| விபவ | சர்வதாரி | கீலக |
| சுக்கில | விரோதி | சௌமிய |
| பிரமோதூத | விகிர்தி | சாதாரண |
| பிரசோற்பத்தி | கர | விரோதிகிருது |
| ஆங்கீரச | நந்தன | பரிதாவி |
| ஸ்ரீமுக | விஜய | பிரமாதீச |
| பவ | ஜய | ஆனந்த |
| யுவ | மன்மத | ராக்ஷச |
| தாது | துர்முகி | நள |
| ஈசுவர | ஏவிளம்பி | பிங்கள |
| வெகுதானிய | விளம்பி | காலயுத்தி |
| பிரமாதி | விகாரி | சித்தார்த்தி |
| விக்கிரம | சார்வரி | ரௌத்திரி |
| விஷு | பிலவ | துர்மதி |
| சித்திரபானு | சுபகிருது | துந்துபி |
| சுபானு | சோபகிருது | ருதிரோற்காரி |
| தாரண | குரோதி | ரத்தாக்ஷி |
| பார்த்திவ | விசுவாவசு | குரோதன |
| விய | பராபவ | அக்ஷய |

## அயனம் 2

| உத்தராயணம் | தக்ஷிணாயனம் |
|---|---|
| தைமீ முதல் | ஆறுமாசம் உத்தராயணம் |
| ஆடிமீ முதல் | ஆறுமாசம் தக்ஷிணாயனம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ருது 6

| | |
|---|---|
| சித்திரை மாசம்<br>வைகாசி மாசம் | வசந்தருது |
| ஆனி மாசம்<br>ஆடி மாசம் | கிரீஷ்மருது |
| ஆவணி மாசம்<br>புரட்டாதி மாசம் | வருஷருது |
| ஐப்பசி மாசம்<br>கார்த்திகை மாசம் | சரருது |
| மார்கழி மாசம்<br>தை மாசம் | ஏமந்தருது |
| மாசி மாசம்<br>பங்குனி மாசம் | சிசிரருது |

## மாசம் 12

| | | |
|---|---|---|
| சித்திரை | ஆவணி | மார்கழி |
| வைகாசி | புரட்டாதி | தை |
| ஆனி | ஐப்பசி | மாசி |
| ஆடி | கார்த்திகை | பங்குனி |

## வாரம் 7

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | செவ்வாய் | வியாழன் | சனி |
| திங்கள் | புதன் | வெள்ளி | |

## பக்கம் 2

| | |
|---|---|
| சுக்கிலபக்கம் | கிருஷ்ணபக்கம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திதி 15

பிரதமை
துதியை
திருதியை
சதுர்த்தி
பஞ்சமி
சட்டி
சத்தமி
அட்டமி
நவமி
தசமி
ஏகாதசி
துவாதசி
திரயோதசி
சதுர்த்தசி
பௌர்ணிமை
அல்லது
அமாவாசை

## நக்ஷத்திரம் 27

அச்சுவினி
பரணி
கார்த்திகை
உரோகிணி
மிருகசீரிடம்
திருவாதிரை
புனர்பூசம்
பூசம்
ஆயிலியம்
மகம்
பூரம்
உத்தரம்
அத்தம்
சித்திரை
சுவாதி
விசாகம்
அனுஷம்
கேட்டை
மூலம்
பூராடம்
உத்தராடம்
திருவோணம்
அவிட்டம்
சதயம்
பூரட்டாதி
உத்தரட்டாதி
ரேவதி

## யோகம் 27

விட்கம்பம்
பிரீதி
ஆயுஷ்மான்
சௌபாக்கியம்
சோபனம்
அதிகண்டம்
சுகர்மம்
திருதி
சூலம்
கண்டம்
விருத்தி
துருவம்
வியாகாதம்
அர்ஷணம்
வச்சிரம்
சித்தி
விதிபாதம்
வரியான்
பரிகம்
சிவம்
சித்தம்
சாத்தியம்
சுபம்
சுப்பிரம்
பிரமம்
மகேந்திரம்
வைதிருதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரணம் 11

| | | |
|---|---|---|
| பவம் | கரசை | சதுஷ்பாதம் |
| பாலவம் | வணிசை | நாகவம் |
| கௌலவம் | பத்திரம் | கிந்துக்கினம் |
| தைதிலம் | சகுனி | |

## இராசி 12

| | | |
|---|---|---|
| மேடம் | சிங்கம் | தனு |
| இடபம் | கன்னி | மகரம் |
| மிதுனம் | துலாம் | கும்பம் |
| கர்க்கடகம் | விருச்சிகம் | மீனம் |

## இராசிமாசம் 12

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மேடம் | ~ | சித்திரை | துலாம் | ~ | ஐப்பசி |
| இடபம் | ~ | வைகாசி | விருச்சிகம் | ~ | கார்த்திகை |
| மிதுனம் | ~ | ஆனி | தனு | ~ | மார்கழி |
| கர்க்கடகம் | ~ | ஆடி | மகரம் | ~ | தை |
| சிங்கம் | ~ | ஆவணி | கும்பம் | ~ | மாசி |
| கன்னி | ~ | புரட்டாதி | மீனம் | ~ | பங்குனி |

## கிரகம் 9

| | | |
|---|---|---|
| சூரியன் | புதன் | சனி |
| சந்திரன் | வியாழன் | இராகு |
| செவ்வாய் | வெள்ளி | கேது |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திக்கு 8

| | | |
|---|---|---|
| கிழக்கு | தென்மேற்கு | வடக்கு |
| தென்கிழக்கு | மேற்கு | வடகிழக்கு |
| தெற்கு | வடமேற்கு | |

## திக்குப்பாலகர் 8

| | | |
|---|---|---|
| இந்திரன் | நிருதி | குபேரன் |
| அக்கினி | வருணன் | ஈசானன் |
| இயமன் | வாயு | |

| | | |
|---|---|---|
| வசந்தருது | – | இளவேனிற்பருவம் |
| கிரீஷ்மருது | – | முதுவேனிற்பருவம் |
| வருஷருது | – | கார்ப்பருவம் |
| சரருது | – | கூதிர்ப்பருவம் |
| ஏமந்தருது | – | முன்பனிப்பருவம் |
| சிசிரருது | – | பின்பனிப்பருவம் |

சுக்கிலபக்கத்துக்குப் பூர்வபக்கமென்றும் பெயர்.
கிருஷ்ணபக்கத்துக்கு அபரபக்கமென்றும் பெயர்.

## தாய் செய்த நன்றி

தன் மிருதுவாகிய முலையினால் உனக்குப் பால் ஊட்டி, தன் கைகளிலே நீ நித்திரை செய்யும்படி உன் கன்னத்தில் இனிமையாகிய முத்தங்கொடுத்தவள் எவள்? என் தாய்.

நித்திரை உன் கண்ணைவிட்டு நீங்கின பொழுது, நீ உறக்கம் கொள்ளும்படி இனிமையான கீதங்களைப்பாடி, நீ அழாதபடிக்குத் தாலாட்டினவள் எவள்? என் நற்றாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ தொட்டிலில் நித்திரை செய்யும்பொழுது, தொட்டிலை ஆட்டிக்கொண்டு, உன்னுடன்கூட இருந்து உன்னைச் சாவதானமாகக் காப்பாற்றி, உனக்காக அன்பின் கண்ணீர் விட்டவள் எவள்? என் அன்னை.

நீ வியாதியினாலும் துன்பத்தினாலும் அழுதபொழுது, துக்கக்குறியை யுடைய உன் கண்ணைப்பார்த்து, நீ இறந்து போவாயோ என்று பயந்து அழுதவள் எவள்? என் மாதா.

நீ விழுந்தபொழுது, உனக்கு உதவி செய்யும்படி ஓடிவந்து, இனிமையான கதைகளைச் சொல்லி, உன் காயத்தைச் சவுக்கியப்படுத்த உனக்கு முத்தங் கொடுத்தவள் எவள்? என் அருமைத்தாய்.

நீ பாவஞ்செய்யாமல் விலகும்பொருட்டும், புண்ணியத்தைச் செய்யும் பொருட்டும், கடவுளிடத்தே அன்புவைத்து அவரை எந்நாளும் வழிபடும் பொருட்டும், உனக்குப் போதித்தவள் எவள்? என்னைப் பெற்றதாய்.

இப்படியே உன்னிடத்தில் இவ்வளவு அதிக அன்புள்ளவளாய் இருக்கின்ற உன் மாதாவினிடத்திலே நீ எப்பொழுதாவது அன்பில்லாதவனாய் நடக்கலாமா? நடக்கலாகாது.

பிள்ளையே, நீ கடவுளுடைய திருவருளினாலே சீவனோடிருக்கும் வரையும், உன் அன்புள்ள மாதா உனக்காகப்பட்ட பிரயாசத்துக்கு நீ பிரதிபலன் அளிக்கும்படி விரும்பிக் காத்திருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈசுரத்தியானம்

சூரியன் உதிக்குமுன் நித்திரை விட்டெழுந்து சலம் வாயிற்கொண்டு இடப்புறத்திலே கொப்பளித்து, முகத்தையும் கை கால்களையும் கழுவி, ஈரந்துவட்டி, கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் இருந்துகொண்டு கடவுளைத் தியானித்துத் தோத்திரம் பண்ணக் கடவாய்.

## அவசியகருமம்

பின்பு வீட்டினின்றும் புறப்பட்டு, மலசலங் கழிக்கத்தக்க தனியிடத்தை அடைந்து, பூணூலை வலக்காதிலே சேர்த்து, தலையையும் காதுகளையும் வஸ்திரத்தினாலே சுற்றி, மௌனம் பொருந்தி, பகலிலே வடக்கு முகமாகவும், இரவிலே தெற்கு முகமாகவும், மூக்கு நுனியைப் பார்த்துக் கொண்டிருந்து, மலசலமோசனஞ் செய்யக்கடவாய்.

வழியிலும், குழியிலும், நீர் நிலையிலும், நீர்க்கரையிலும், கோமயம் உள்ள இடத்திலும், சாம்பர் உள்ள இடத்திலும், சுடுகாட்டிலும், பூந் தோட்டத்திலும், மரநிழலிலும், உழுத நிலத்திலும், அறுகம்பூமியிலும், பசுமந்தை நிற்கும் இடத்திலும், புற்றிலும், அருவிபாயும் இடத்திலும், மலையிலும் மலசலங் கழிக்கலாகாது.

## சௌசம்

மலசலங்கழித்த உடனே எழுந்து சலக்கரையை அடைந்து, சலத்துக்கு ஒருசாணுக்கு இப்பால் இருந்து கொண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடக்கையினாலே மண்ணுஞ் சலமுங் கொண்டு, குறியில் ஒருதரமும், குதத்தில் ஐந்துதரத்துக்கு மேலும், இடக்கையை இடையிடையே ஒவ்வொருதரமும் சுத்தி செய்யக்கடவாய். பின்னும் இடக்கையைப் பத்துத்தரமும், இரண்டு கையையுஞ் சேர்த்து ஏழுதரமும் சுத்திசெய்து, சகனத்தைத் துடைத்து, கால்களை முழங்கால் வரையும் கைகளை முழங்கைவரையும் ஒவ்வொருதரம் கழுவக்கடவாய்.

பின்பு அவ்விடத்தை விட்டு, வேறொரு துறையிலே போய், வாயையும் கண்களையும் நாசியையும் காதுகளையும் கை கால்களில் உள்ள நகங்களையும் சுத்திசெய்து, எட்டுத்தரம் சலம் வாயிற்கொண்டு இடப்புறத்திலே கொப்பளித்து, தலைக்கட்டு, இல்லாமல் ஆசமனம் பண்ணக்கடவாய்.

நதி முதலிய புண்ணிய தீர்த்தங்களிலே சௌசம் பண்ணலாகாது. சௌசத்துக்குச் சமீபத்திலே சலம் இல்லையானால் பாத்திரத்திலே சலம்கொண்டு வைத்துக் கொண்டு மலசலங்கழித்து, சௌசஞ் செய்துவிட்டு, பாத்திரத் தைச் சுத்திசெய்து, சலமொண்டு வாய் கொப்பளித்து, கால் கழுவக்கடவாய்.

## தந்தசுத்தி

தந்தசுத்திக்கு உரிய கொம்பையேனும் இலையையேனும் சலத்தினாலே கழுவி, கிழக்கு நோக்கியாயினும் வடக்கு நோக்கியாயினும் இருந்துகொண்டு, பல்லின் புறத்தையும் உள்ளையும் செவ்வையாகச் சுத்திசெய்து ஒருகழியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாகப் பிளந்து, ஒவ்வொரு பிளப்பை மும்மூன்றுதரம் உண்ணாக்களவாக ஓட்டி நாக்கை வழித்து, இடப்புறத்திலே போட்டுவிட்டு, சலம் வாயிற்கொண்டு பன்னிரண்டுதரம் இடப்புறத்திலே கொப்பளித்து முகத்தையும் கைகால்களையும் கழுவக்கடவாய்.

செங்கல்லினாலேனும், சாம்பராலேனும், மணலினாலேனும், பட்ட மரத்தினாலேனும், தந்தசுத்தி பண்ணலாகாது. நின்று கொண்டாயினும், நடந்து கொண்டாயினும், போர்த்துக் கொண்டாயினும், தந்தசுத்தி பண்ணலாகாது.

## பாடம் படித்தல்

தந்தசுத்தி செய்தவுடனே, உன்னுடைய மாதாவையும் பிதாவையும் நமஸ்கரித்து, உன் புதுப்பாடங்களைச் சாவதானமாகப் படித்து வரப்பண்ணிக் கொண்டு, பழைய பாடங்களை வாசித்து, தெரியாதவைகளைக் கேட்டறிந்து, கல்வியிலே தேறக்கடவாய்.

## ஸ்நானம்

நதி குளம் முதலிய நீர் நிலையை அடைந்து, கௌபீனத்தைக் கசக்கிப் பிழிந்து தரித்து, இரண்டு கைகளையுங் கழுவி, வேட்டியைத் தோய்த்து, அலம்பித் தரித்து; உடம்பைச் செவ்வையாகத் தேய்த்து, கொப்பூழள வினதாகிய சலத்திலே இறங்கி, நதியிலேயானால் அதற்கு எதிர்முகமாக நின்றும், குள முதலியவைகளிலேயானால் கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் நின்றும், இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதுகளையும் இரண்டு பெருவிரல்களினாலும், இரண்டு கண்களையும் இரண்டு சுட்டுவிரல்களினாலும், இரண்டு நாசிகளையும் இரண்டு நடுவிரல்களினாலும் மூடிக்கொண்டு, கடவுளைச் சிந்தித்து, ஸ்நானம் பண்ணக்கடவாய்.

ஸ்நானஞ்செய்த உடனே கரையிலேறி, வேட்டியைப் பிழிந்து, சூரியனெதிரே உதறி, உலர்ந்ததாகப் பாவித்து, உடம்பிலுள்ள ஈரத்தைத் துவட்டி, குடுமியை முடித்து, ஈரக்கௌபீனத்தைக் களைந்து, உலர்ந்த கௌபீனத்தைத் தரித்து, இரண்டு கைகளையுங் கழுவி, உலர்ந்த வஸ்திரத்தைத் தரித்துக் கொண்டு, ஈரவஸ்திரத்தை உலரும்படி கொடியிலே போடக்கடவாய்.

## ஈசுர வந்தனம்

கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் அசைவற இருந்து, கடவுளை அன்புடனே தியானித்துத் தோத்திரஞ்செய்து, எழுந்து மூன்று தரமாயினும் ஐந்துதரமாயினும் நமஸ்காரம் பண்ணக்கடவாய்.

## போசனம்

கோமயத்தினாலே மெழுகப்பட்ட இடத்திலே, சலத்தினாலே கழுவப்பட்ட இலையைப்போட்டு, அதிலே சலத்தினாலே புரோக்ஷித்து, அன்னம் கறி முதலியவைகளைப் படைப்பித்து, வீண்வார்த்தை பேசாமலும், தூங்காமலும், அசையாமலும், செவ்வையாக இருந்து, வேறொன்றையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினையாமல் கடவுளையே சிந்தித்துக்கொண்டு, அன்னத்தைச் சிந்தாமற் போசனம்பண்ணி, சலபானம் பண்ணக்கடவாய்.

போசனத்துக்குரிய பாத்திரங்களாவன வாழையிலை, பலாவிலை, புன்னையிலை, பலாசிலை, பாதிரியிலை, தாமரையிலை என்பவைகளாம். வாழையிலையைத் தண்டுரியாமல் அதினுடைய அடி வலப்பக்கத்திலே பொருந்தும்படி போடவேண்டும்.

பந்தியில் இருந்து போசனம் பண்ணும்பொழுது பெரியோர் புசிக்கத் தொடங்கு முன்னே நீ புசிக்கத் தொடங்கிவிடாதே. அவர் எழும்புதற்கு முன்னே நீ எழும்பிவிடாதே. அவரை நெருக்கி இராதே.

கிடந்து கொண்டாயினும், நின்று கொண்டாயினும், வெளியில் இருந்தாயினும், கட்டிலில் இருந்தாயினும், போசனமேனும் பானமேனும் பண்ணலாகாது.

நெய்யையேனும் லவணத்தையேனும் உச்சிட்டத்திலே படைத்துக் கொள்ளலாகாது. பாலுடனே லவணம் கூட்டலாகாது.

போசனஞ்செய்த உடனே வீட்டுக்குப் புறத்தேபோய், கைகளைக் கழுவி சலம் வாயிற்கொண்டு பதினாறுதரம் இடப்புறத்திலே கொப்பளித்து, வாயையும் கைகளையும் கால்களையுங் கழுவக்கடவாய்.

நீயே உச்சிட்டத்தை அகற்றவேண்டிய இடத்து, இலையை எடுத்து எறிந்துவிட்டு, கை கால்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுவிக்கொண்டு, உச்சிட்டத்தானத்தைக் கோமயங்கரைத்த சலந்தெளித்து, இடையிலே கையை எடாமலும், முன்பு தீண்டிய இடத்தைப் பின்பு தீண்டாமலும் புள்ளியில்லாமல் மெழுகி, புறத்தே போய்க் கைகழுவிவிட்டு, பின்னும் அந்தத் தானத்திலே கோமயங்கரைத்த சலம் தெளித்துவிடக்கடவாய்.

## பள்ளிக்கூடத்துக்குப் போதல்

போசனஞ்செய்த உடனே, புத்தகங்களை எடுத்துக் கொண்டு, பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காகப்போய், உபாத்தியார் இடத்திலே பாடங்களை ஒப்பித்து, அவர் விளக்குகின்றதைக் கருத்தாகக்கேட்டு, மனசில் வைக்கக்கடவாய். அங்கே எழுதவேண்டிய சட்டங்களை எழுதி, செய்யவேண்டிய கணக்குகளைச் செய்து, பிள்ளைகளுடனே சண்டை செய்யாமல், உபாத்தியாயருடைய சொல்லுக்கு அச்சத்தோடும் அன்போடும் அமைந்து நடக்கக்கடவாய். படிக்கும்பொழுது, அந்த அந்த அடையாளத்துக்கு இசைய நிறுத்திப் படிக்க வேண்டும். ஒவ்வொரு சொல்லையும் தெளிவாக உச்சரிக்க வேண்டும். புத்தகங்களை இழந்து போகாமலும் அழுக்கு ஏறவொட்டாமலும் சாவதானமாகக் காப்பாற்றல் வேண்டும். பள்ளிக்கூடம் முடிந்தவுடனே, தெருவிலே சண்டை செய்யாமலும், சிறிதும் தாழ்க்காமலும், வீட்டுக்குத் திரும்பல் வேண்டும்.

## இரவிற் செய்யுங் கருமம்

சூரியன் அத்தமிக்கும்பொழுது வாய் கொப்பளித்துக் கை கால் கழுவி, கடவுளை வழிபட்டுக் கொண்டு, விளக்கிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ கேட்ட பாடங்களைச் சிந்தித்து, புதுப்பாடங்களைப் படித்து, பழம் பாடங்களைப் போற்றக்கடவாய்.

பின்பு போசனஞ்செய்து சிறிதுநேரம் உலாவிக்கொண்டு, சயன ஸ்தானத்தை அலகிடுவித்து, சயனத்தைத்தட்டி விரித்து, கடவுளைச் சிந்தித்துக் கொண்டு நித்திரை செய்யக்கடவாய். சூரியோதயத்துக்குமுன் எழும்பிவிடக் கடவாய்.

*நித்தியகருமவிதி முற்றிற்று.*

---

## பெரியோரை வழிபடல்

தாய், தகப்பன், தமையன், தமக்கை, பாட்டன், பாட்டி, மாமன், உபாத்தியாயர், குரு முதலாகிய பெரியோர்களை அச்சத்தோடும் அன்போடும் வழிபடல் வேண்டும்.

பெரியோரெதிரே உயர்ந்த ஆசனத்திருத்தலும், காலை நீட்டிக்கொண்டிருத்தலும், காலின் மேலே கால் போட்டுக் கொண்டிருத்தலும், சயனித்தலும், சிரித்தலும், எதிர்த்துப் பேசுதலும், கைசுட்டிப் பேசுதலும், எச்சிலுமிழ்தலும், அரையிலே கையூன்றுதலும், காலைத் தூக்கி உயர்ந்த தானத்தில் வைத்துக் கொண்டு நிற்றலும், போர்த்துக் கொள்ளுதலும் ஆகாவாம்.

பெரியோர் முன்னே போகும்பொழுது, வேட்டியை ஒதுக்கிக்கொண்டு, தணிந்த நடையுடனே போகக்கடவாய். அவர் சமீபத்திலே நின்று பேசும்பொழுது வாய்புதைத்து நின்று பேசக்கடவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியோர் உன்னுடனே பேசும்பொழுது, நீ வேறொன்றையும் பாராமலும், வேறொன்றுக்குச் செவிகொடாமலும், அவர் முகத்தையே பார்த்துக்கொண்டு அவர் வார்த்தைக்கே செவி கொடுக்கக்கடவாய்.

பெரியோருடனே நீ பேசும்பொழுது, வேறொன்றையும் பாராமல், அவர் முகத்தையே பார்த்துக்கொண்டு பேசக்கடவாய். பெரியோரிடத்திலே அவரை 'சுவாமீ' 'ஐயா' என்பவை முதலிய வார்த்தைகளினாலே உயர்த்தியும், உன்னை, 'அடியேன்' 'தமியேன்' என்பவை முதலிய வார்த்தைகளினாலே தாழ்த்தியும் பேசக்கடவாய்.

பெரியோர் உனக்கு ஒன்றைத் தரும்பொழுது நீ எழும்பி, இரண்டு கைகளினாலும், வாங்கக்கடவாய். பெரியோருக்கு நீ ஒன்றைக் கொடுக்கும் பொழுதும், எழும்பி இரண்டு கைகளினாலும் கொடுக்கக்கடவாய்.

பெரியோர் உன் வீட்டுக்கு வந்தாராயின், நீ அவரை விரைந்து எதிர் கொண்டு கும்பிட்டு அழைத்துக்கொண்டு வந்து, ஆசனத்திலே இருத்தி, அவரை மூன்றுதரமாயினும் ஐந்து தரமாயினும் நமஸ்கரித்து, எழும்பி, அவர் 'இரு' என்றபின் இருக்கக்கடவாய். அவர் போம்பொழுது எழும்பி, அவர் பின்னே சிறித் தூரம்போய், அவரைக் கும்பிட்டு, விடை பெற்றுக்கொண்டு திரும்பக்கடவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் பிரிவு

## ஔவையார் அருளிச்செய்த

# ஆத்திசூடி

மூலமும் உரையும்.

### காப்பு

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோ மியாமே.

### இதன் பொருள்

ஆத்தி–திருவாத்திப்பூமாலையை, சூடி–தரிப்பவராகிய சிவபெருமான், அமர்ந்த–விரும்பிய, தேவனை–பிள்ளையாகிய விநாயகக்கடவுளை, ஏத்தி ஏத்தி–துதித்துத்துதித்து, தொழுவோம்–வணங்குவோம், யாம்–நாங்கள் என்றவாறு.

தேவன்–பிள்ளை, ஏ–ஈற்றசை.

### சூத்திரம்

1. அறம்செய விரும்பு.

அறம்–தருமத்தை, செய–செய்தற்கு, விரும்பு–நீ ஆசை கொள்ளு.

2. ஆறுவது சினம்.

ஆறுவது–(உன்னுள்ளே) தணிய வேண்டுவது, சினம்–கோபமே ஆம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. இயல்வது கரவேல்.**

இயல்வது–(கொடுப்பதற்கு) இசைவதை, கரவேல்–(நீ வறுமையினாலே இரப்பவர்களுக்கு) ஒளியாதே.

**4. ஈவது விலக்கேல்.**

ஈவது–(தருமத்தைக் குறித்து ஒருவருக்கு ஒருவர்) கொடுப்பதை, விலக்கேல்–நீ தடுக்காதே.

**5. உடையது விளம்பேல்.**

உடையது–(உனக்கு) உள்ள பொருளை, விளம்பேல்–(நீ பிறர் அறியும்படி) சொல்லாதே.

**6. ஊக்கமது கைவிடேல்.**

ஊக்கமது–(செய்தொழிலில்) மனஞ்சோராமையை, கைவிடேல்–நீ கைவிடாதே.

**7. எண்ணெழுத் திகழேல்.**

எண்–கணிதநூலையும், எழுத்து–இலக்கண நூலையும், இகழேல்–நீ இகழ்ந்து தள்ளாதே. (புகழ்ந்து கல் என்பது கருத்து) *கணிதம் கணக்கு.*

**8. ஏற்ப திகழ்ச்சி.**

ஏற்பது–(ஒருவரிடத்திலே போய்) இரப்பது, இகழ்ச்சி–பழிப்பாகும்.

**9. ஐய மிட்டுண்.**

ஐயம்–பிச்சையை, இட்டு–(இரப்பவர்களுக்குக்) கொடுத்து, உண்–நீயும் உண்ணு.

**10. ஒப்புர வொழுகு.**

ஒப்புரவு–உலகநடையை அறிந்து, ஒழுகு–(நீ அந்த வழியிலே) நட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. ஓதுவ தொழியேல்.

ஓதுவது–(அறிவு நூல்களை) வாசிப்பதை, ஒழியேல்–(நீ மரணபரியந்தம்) விடாதே.

## 12. ஒளவியம் பேசேல்.

ஒளவியம்–பொறாமை வார்த்தைகளை, பேசேல்–நீ பேசாதே.

## 13. அஃகஞ் சுருக்கேல்.

அஃகம்–தானியவிலையை, சுருக்கேல்–(நீ அதிக லாபத்துக்காகக்) குறையாதே.

## 14. கண்டொன்று சொல்லேல்.

கண்டு–(ஒன்றைக்) கண்டு, ஒன்று–வேறொன்றை, சொல்லேல்–(நீ சாக்ஷியாகும்போது) சொல்லாதே. [கண்டபடியே சொல்லென்பது கருத்து.]

## 15. ஙப்போல் வளை.

ஙப்போல்–ஙகரம் (தான் பிரயோசனமுள்ளதாய் இருந்து தன் வருக்கத்தைத் தழுவுதல்) போல, வளை–(நீ பிரயோசன முள்ளவனாய் இருந்து உன் இனத்தைத்) தழுவு.

ஙகரமானது அங்ஙனம் இங்ஙனம் உங்ஙனம் என்று சொல்லுக்குக் காரணமாய் வரும். அதின் வருக்கங்களாகிய ஙா ஙி ஙீ ஙு ஙெ ஙே ஙை ஙொ ஙோ ஙௌ என்கின்ற பதினொன்றும் சொல்லுக்குக் காரணமாதல் இல்லை. ஆயினும், ஙகரத்தின் பொருட்டு இவைகளையும் நெடுங்கணக்கிலே வழங்குவார்கள். அதுபோலவே, நீ கல்வி செல்வங்களினாலே பிறருக்கு உதவி செய்வாயாயின், அவர் உன்னைத் தழுவுவதன்றி உன்பொருட்டு உன் இனத்தாரையும் தழுவுவர் என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**16. சனிநீ ராடு.**

சனி—சனிக்கிழமைதோறும், நீர் ஆடு—(எண்ணெய் இட்டுக்கொண்டு) நீரிலே தலைமுழுகு.

புதன்கிழமையிலும் முழுகலாம்.

**17. ஞயம்பட வுரை.**

ஞயம்பட—(பேசுஞ்சொல்லிலே) இன்பம் விளையும்படி, உரை—நீ பேசு.

நயம் என்பது ஞயம் எனப் போலியாயிற்று.

**18. இடம்பட வீடெடேல்.**

இடம்—இடமானது, பட—(அளவுக்கு மேற்பட்டு வெறுமையாய்க்) கிடக்கும்படி, வீடு—வீட்டை, எடேல்—நீ பெரிதாகக் கட்டாதே.

**19. இணக்கமறிந் திணங்கு.**

இணக்கம்—(சினேகத்துக்கு ஏதுவாகிய) நற்குண நற்செய்கைகளை, அறிந்து—தெளிந்து, இணங்கு—(பின் ஒருவனோடு) சினேகஞ்செய்.

**20. தந்தை தாய் பேண்.**

தந்தை—(நீ உன்) பிதாவையும், தாய்—மாதாவையும், பேண்—(எப்போதும் பூசித்துக்) காப்பாற்று.

**21. நன்றி மறவேல்.**

நன்றி—(ஒருவர் உனக்குச் செய்த) உபகாரத்தை, மறவேல்—(நீ ஒருபோதும்) மறவாதே.

**22. பருவத்தே பயிர்செய்.**

பயிர்—பயிர்களை, பருவத்தே—(அது அது விளையும்) பக்குவ காலத்திலே, செய்—(வேண்டும் முயற்சியிலே வழுவாமல்) இடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிருக்கு வேண்டும் முயற்சிகளாவன, உழுதல், எரு இடுதல், களைபிடுங்குதல், நீர் பாய்ச்சல், காத்தல் என்கிற ஐந்தும் ஆம்.

**23. மன்றுபறித் துண்ணேல்.**

மன்று-தருமசபையிலே இருந்துகொண்டு, பறித்து-(வழக்குத்தீர்ப்புக்கு வரும் குடிகளுடைய பொருளைக்) கவர்ந்து, உண்ணேல்-நீ சீவனம் பண்ணாதே.

**24. இயல்பலா தனசெயேல்.**

இயல்பு அலாதன-(தருமநூலுக்குப்) பொருத்தமல்லாதவைகளை, செயேல்-நீ செய்யாதே.

**25. அரவ மாட்டேல்.**

அரவம்-(நஞ்சையுடைய) பாம்புகளை, ஆட்டேல்-(நீ பிடித்து) ஆட்டாதே.

**26. இலவம்பஞ் சிற்றுயில்.**

இலவம்பஞ்சில்-இலவம்பஞ்சு மெத்தையிலே, துயில்-நீ நித்திரைசெய்.

**27. வஞ்சகம் பேசேல்.**

வஞ்சகம்-கபட வார்த்தைகளை, பேசேல்-நீ பேசாதே.

**28. அழகலா தனசெயேல்.**

அழகு அலாதன-(நீ துன்பப்படவந்த காலத்தும்) இழிவுள்ள செயல்களை, செயேல்-செய்யாதே.

அழகுடையன உயர்வுள்ள செயல்கள் ஆதலால், அழகலாதன இழிவுள்ள செயல்கள் என்பதாம்.

**29. இளமையிற் கல்.**

இளமையில்-இளமைப் பிராயத்திலே, கல்-(நீ வித்தையைக்) கற்றுக்கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**30. அறனை மறவேல்.**

அறனை-தருமத்தை, மறவேல்-(நீ ஒருபோதும்) மறவாதே.

**31. அனந்த லாடேல்.**

அனந்தல்-நித்திரையை, ஆடேல்-(நீ அதிகமாகச்) செய்யாதே.

**32. கடிவது மற.**

கடிவது-(ஒருவரைச்) சினந்து பேசுவதை, மற-நீ மறந்துவிடு.

**33. காப்பது விரதம்.**

காப்பது-(உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் அவைகளைக்) காப்பாற்றுவதே, விரதம்-விரதமாம்.

**34. கிழமைப் படவாழ்.**

கிழமைப்பட-(உன்னிடத்தில் உள்ளபொருள் பிறருக்கும்) உரிமைப்படும்படி, வாழ்-நீ வாழு.

**35. கீழ்மை யகற்று.**

கீழ்மை-கீழ்மையாகிய குணத்தை, அகற்று-நீ நீக்கு.

**36. குணமது கைவிடேல்.**

குணமது-(மேலாகிய) குணத்தை, கைவிடேல்-நீ கைவிடாதே.

**37. கூடிப் பிரியேல்.**

கூடி-(நல்லவரோடு) சிநேகித்து, பிரியேல்-(நீ பின் அவரைவிட்டு) நீங்காதே.

**38. கெடுப்ப தொழி.**

கெடுப்பது-பிறருக்குக் கேடு செய்வதை, ஒழி-நீ விட்டுவிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**39. கேள்வி முயல்.**

கேள்வி-(கற்றவர் சொல்லும் நூற்பொருளைக்) கேட்பதற்கு, முயல்-நீ முயற்சி செய்.

**40. கைவினை கரவேல்.**

கைவினை-(உனக்குத் தெரிந்த) கைத்தொழிலை, கரவேல்-நீ (சமயத்திலே) ஒளியாதே.

**41. கொள்ளை விரும்பேல்.**

கொள்ளை-(பிறருடைய பொருளைக்) கொள்ளையிடுதற்கு, விரும்பேல்-நீ ஆசைப்படாதே.

**42. கோதாட் டொழி.**

கோது-குற்றம் பொருந்திய, ஆட்டு-விளையாட்டை, ஒழி-நீ நீக்கு.

**43. சக்கர நெறிநில்.**

சக்கர நெறி-(அரசனுடைய ஆஞ்ஞையாகிய) சக்கரம் செல்லும் வழியிலே, நில்-(நீ அடங்கி) நில், [அரசனுடைய கட்டளைக்கு அமைந்துநட என்பது கருத்து].

**44. சான்றோ ரினத்திரு.**

சான்றோர்-அறிவினாலே நிறைந்தவர்களுடைய, இனத்து-கூட்டத்திலே, இரு-(நீ எந்நாளும் சேர்ந்து) இரு.

**45. சித்திரம் பேசேல்.**

சித்திரம்-மெய்போலத் தோன்றும் பொய்மொழிகளை, பேசேல்-நீ பேசாதே.

**46. சீர்மை மறவேல்.**

சீர்மை-புகழுக்கு ஏதுவாகிய குணத்தை, மறவேல்-நீ மறந்துவிடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**47. சுளிக்கச் சொல்லேல்.**

சுளிக்க-(கேட்பவர்) கோபிக்கும்படியாக, சொல்லேல்-(நீ ஒன்றையும்) பேசாதே.

**48. சூது விரும்பேல்.**

சூது-சூதாடலை, விரும்பேல்-(நீ ஒருபோதும்) விரும்பாதே.

**49. செய்வன திருந்தச் செய்.**

செய்வன-செய்யுங் காரியங்களை, திருந்த-செவ்வையாக, செய்-நீ செய்.

**50. சேரிட மறிந்துசேர்.**

சேர் இடம்-அடையத்தகும் (நன்மையாகிய) இடத்தை, அறிந்து-தெளிந்து, சேர்-நீ அடை.

**51. சையெனத் திரியேல்.**

சை என-(பெரியோர் உன்னைச்) சீ என்று அருவருக்கும் படி, திரியேல்-(நீ துட்டனாய்த்) திரியாதே.

**52. சொற்சோர்வு படேல்.**

சொல்-(நீ பிறரோடு பேசும்) சொற்களிலே, சோர்வுபடேல்-மறதிபடப் பேசாதே. [சொல்லவேண்டுவதை மறவாமற்சொல் என்பது கருத்து.]

**53. சோம்பித் திரியேல்.**

சோம்பி-(நீ செய்யவேண்டும் முயற்சியைச் செய்யாமல்) சோம்பல்கொண்டு, திரியேல்-(வீணாகத்) திரியாதே.

**54. தக்கோ னெனத்திரி.**

தக்கோன் என-(உன்னைப் பெரியோர்கள்) யோக்கியன் என்று புகழும்படி, திரி-நீ திரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. தானமது விரும்பு.

தானமது–(சற்பாத்திரங்களிலே) தானம் செய்தலை, விரும்பு–நீ விரும்பு.

56. திருமாலுக் கடிமை செய்.

திருமாலுக்கு–விஷ்ணுவுக்கு, அடிமைசெய்–நீ தொண்டு பண்ணு.

57. தீவினை யகற்று.

தீவினை–பாவச் செயல்களை, அகற்று–(நீ செய்யாமல்) நீக்கு.

58. துன்பத்திற் கிடங்கொடேல்.

துன்பத்திற்கு–(தொழில் செய்யும்போது) முயற்சியினாலே வரும் சரீரப் பிரயாசத்தால் ஆகிய துன்பத்துக்கு, இடம் கொடேல்–(நீ சிறிதாயினும்) இடங்கொடாதே. [அத்துன்பத்தை இன்பமென்று கொண்டு முயற்சியை விடாது செய் என்பது கருத்து.]

59. தூக்கி வினைசெய்.

தூக்கி–(முடிக்கும் உபாயத்தை) ஆராய்ந்து, வினை–ஒரு தொழிலை, செய்–(நீ அதன்பின்பு) செய்.

60. தெய்வ மிகழேல்.

தெய்வம்–கடவுளை, இகழேல்–(நீ மறந்தாயினும்) இகழாதே.

61. தேசத்தோ டொத்துவாழ்.

தேசத்தோடு–நீ வசிக்கும் தேசத்திலுள்ளவர்களுடனே, ஒத்து–(பகை யில்லாமல்) ஒத்து, வாழ்–வாழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**62. தையல்சொற் கேளேல்.**

தையல்–(உன்) மனைவியுடைய, சொல்–சொல்லை, கேளேல்–நீ கேட்டு நடவாதே.

**63. தொன்மை மறவேல்.**

தொன்மை–பழமையாகிய சிநேகத்தை, மறவேல்–நீ மறந்துவிடாதே.

**64. தோற்பன தொடரேல்.**

தோற்பன–தோல்வியடையக் கூடிய வழக்குக்களிலே, தொடரேல்–நீ சம்பந்தப்படாதே.

**65. நன்மை கடைப்பிடி.**

நன்மை–புண்ணியத்தையே, கடைப்பிடி–(நீ விடாமல்) உறுதியாகப்பிடி.

**66. நாடொப் பனசெய்.**

நாடு–உன் நாட்டில் உள்ளோர் பலரும், ஒப்பன–ஒத்துக் கொள்ளத்தக்க நல்ல காரியங்களை, செய்–நீ செய்.

**67. நிலையிற் பிரியேல்.**

நிலையில்–(நீ நிற்கின்ற உயர்ந்த) நிலையிலே நின்று, பிரியேல்–(ஒருபோதும்) நீங்காதே.

**68. நீர்விளை யாடேல்.**

நீர்–(ஆழம் உள்ள) நீரிலே, விளையாடேல்–(நீ நீந்தி) விளையாடதே.

**69. நுண்மை நுகரேல்.**

நுண்மை–(நோயைத் தருகிற) சிற்றுண்டிகளை, நுகரேல்–நீ உண்ணாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**70. நூல்பல கல்.**

நூல் பல-(அறிவை வளர்க்கிற) நூல்கள் பலவற்றையும், கல்-நீ கற்றுக்கொள்.

**71. நெற்பயிர் விளை.**

நெற்பயிர்-நெல்லுப்பயிரை, விளை-நீ (வேண்டிய முயற்சி செய்து) விளைவி.

**72. நேர்பட வொழுகு.**

நேர்பட-(உன் ஒழுக்கம் கோணாமல்) செவ்வைப்பட, ஒழுகு-நீ நட.

**73. நைவினை நணுகேல்.**

நை-(பிறர்) கெடத்தக்க, வினை-தீவினைகளை, நணுகேல்-(நீ ஒருபோதும்) சாராதே.

**74. நொய்ய வுரையேல்.**

நொய்ய-(பயன் இல்லாத) அற்ப வார்த்தைகளை, உரையேல்-(நீ ஒருபோதும்) சொல்லாதே.

**75. நோய்க் கிடங்கொடேல்.**

நோய்க்கு-வியாதிகளுக்கு, இடங்கொடேல்-(அவபத்தியம் முதலானவைகளைச் செய்து) இடங்கொடாதே.

**76. பழிப்பன பகரேல்.**

பழிப்பன-(அறிவுடையவர்களாலே) பழிக்கப்படுவனவாகிய இழிசொற்களை, பகரேல்-நீ பேசாதே.

இழிசொற்களாவன பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல் என்கின்ற நான்குமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**77. பாம்பொடு பழகேல்.**

பாம்பொடு-(பால்கொடுத்தவருக்கும் விஷத்தைக்கொடுக்கிற) பாம்பைப் போல்பவர்களுடனே, பழகேல்-நீ சகவாசஞ் செய்யாதே.

**78. பிழைபடச் சொல்லேல்.**

பிழைபட-வழுக்கள் உண்டாகும்படி, சொல்லேல்-(நீ ஒன்றையும்) பேசாதே.

**79. பீடு பெறநில்.**

பீடு-பெருமையை, பெற-பெறும்படியாக, நில்-(நீ நல்லவழியிலே) நில்.

**80. புகழ்ந்தாரைப் போற்றிவாழ்.**

புகழ்ந்தாரை-உன்னைத் துதிசெய்து அடுத்தவரை, போற்றி-(கைவிடாமற்) காப்பாற்றி, வாழ்-நீ வாழு.

**81. பூமி திருத்தியுண்.**

பூமி-உன் விளைநிலத்தை, திருத்தி-சீர்திருத்திப் பயிர்செய்து, உண்-நீ உண்ணு.

**82. பெரியாரைத் துணைக்கொள்.**

பெரியாரை-(அறிவிலே சிறந்த) பெரியோரை, துணைக்கொள்-உனக்குத் துணையாகப் பேணிக்கொள்.

**83. பேதைமை யகற்று.**

பேதைமை-(பிறவிக்குக்காரணமாகிய) அஞ்ஞானத்தை, அகற்று-(நீ மெய்ஞ்ஞானத்தினாலே) போக்கு.

**84. பையலோ டிணங்கேல்.**

பையலோடு-சிறுபிள்ளையோடு, இணங்கேல்-நீ கூடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**85. பொருடனைப் போற்றிவாழ்.**

பொருள் தனை-திரவியத்தை, போற்றி-(மேன்மேலும் உயரும்படி) காத்து, வாழ்-நீ வாழு.

**86. போர்த்தொழில் புரியேல்.**

போர்-சண்டையாகிய, தொழில்-தொழிலை, புரியேல்-நீ செய்யாதே.

**87. மனந்தடு மாறேல்.**

மனம்-மனசு, தடுமாறேல்-(யாதொரு விஷயத்திலும்) கலங்காதே.

**88. மாற்றானுக் கிடங்கொடேல்.**

மாற்றானுக்கு-பகைவனுக்கு, இடம் கொடேல்-(உன்னை நெருக்கிப் பின் வருத்தும்படியாக நீ) இடங்கொடாதே.

**89. மிகைபடச் சொல்லேல்.**

மிகைபட-(சொற்கள் சுருங்காமல்) அதிகப்படும்படி, சொல்லேல்-நீ சொல்லாதே.

**90. மீதூண் விரும்பேல்.**

மீது ஊண்-அதிக போசனத்துக்கு, விரும்பேல்-நீ ஆசைப்படாதே.

**91. முனைமுகத்து நில்லேல்.**

முனைமுகத்து-சண்டைமுகத்திலே, நில்லேல்-(நீ போய்) நில்லாதே.

**92. மூர்க்கரோ டிணங்கேல்.**

மூர்க்கரோடு-அறிவில்லாதவர்களுடனே, இணங்கேல்-நீ சிநேகம் பண்ணாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**93. மெல்லினல்லா டோள்சேர்.**

மெல்-மெல்லிய, இல்-(உன்) மனையாட்டியாகிய, நல்லாள்-பெண்ணினுடைய, தோள்-தோள்களையே, சேர்-நீ புணர்.

இதனாலே, பிறர்மனைவியர் பரத்தையர் என்கின்ற இவர்களுடைய தோள்களை ஒருபோதும் புணராதே என்பது பெறப்படும்.

**94. மேன்மக்கள் சொற்கேள்.**

மேன்மக்கள்-மேன்மையாகிய மனிதருடைய, சொல்-சொல்லை, கேள்-நீ கேட்டு நட.

**95. மைவிழியார் மனையகல்.**

மை விழியார்-மைதீட்டிய கண்களையுடைய வேசிகளது, மனை-வீட்டை, அகல்-(நீ ஒருபோதும் கிட்டாமல்) அகன்று போ.

**96. மொழிவ தறமொழி.**

மொழிவது-சொல்லப்படும்பொருளை, அற-(சந்தேகம்) நீங்கும்படி, மொழி-நீ சொல்லு.

**97. மோகத்தை முனி.**

மோகத்தை-(நிலையாத பொருள்களின் மேலதாகிய) ஆசையை, முனி-நீ கோபித்து விலக்கு.

**98. வல்லமை பேசேல்.**

வல்லமை-(உன்னுடைய) சாமர்த்தியத்தை, பேசேல்-(நீ புகழ்ந்து) பேசாதே.

**99. வாதுமுற் கூறேல்.**

வாது-வாதுகளை, முன்-(பெரியோர்) முன்னே, கூறேல்-நீ பேசாதே.

**100. வித்தை விரும்பு.**

வித்தை-கல்விப்பொருளையே, விரும்பு-நீ விரும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**101. வீடு பெறநில்.**

வீடு-மோக்ஷத்தை, பெற-அடையும்படி, நில்-(அதற்குரிய ஞானவழியிலே) நில்.

**102. உத்தமனா யிரு.**

உத்தமனாய்-(நற்குண நற்செய்கைகளினாலே எல்லாரினும்) மேலானவனாகி, இரு-நீ இரு.

**103. ஊருடன் கூடிவாழ்.**

ஊருடன்-ஊரவர்களுடனே, கூடி-(சுபாசுப கன்மங்களிலே) அளாவி, வாழ்-நீ வாழு.

**104. வெட்டெனப் பேசேல்.**

வெட்டு என-கத்திவெட்டைப்போல, பேசேல்-நீ (ஒருவரோடுங் கடினமாகப்) பேசாதே.

**105. வேண்டி வினைசெயேல்.**

வேண்டி-(யாதொரு பிரயோசனத்தை) விரும்பி, வினை-தீவினையை, செயேல்-(நீ ஒருவருக்கும்) செய்யாதே.

**106. வைகறைத் துயிலெழு.**

வைகறை-(நீ தினந்தோறும்) விடியற்காலத்திலே, துயில்-நித்திரையைவிட்டு, எழு-எழுந்திரு.

**107. ஒன்னாரைத் தேறேல்.**

ஒன்னாரை-பகைவர்களை, தேறேல்-(நீ ஒருபோதும்) நம்பாதே.

**108. ஓரஞ் சொல்லேல்.**

ஓரம்-பக்ஷபாதத்தை, சொல்லேல்-(நீ யாதொரு வழக்கிலும்) பேசாதே.

*ஆத்திசூடியுரை முற்றிற்று.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையார் அருளிச்செய்த

# கொன்றை வேந்தன்

மூலமும் உரையும்

## காப்பு

கொன்றை வேந்தன் செல்வ னடியிணை
என்று மேத்தித் தொழுவோ மியாமே.

## இதன் பொருள்

கொன்றை-கொன்றைப்பூமாலையைச் சூடிய, வேந்தன்-சிவபெருமானுக்கு, செல்வன்-குமாரராகிய விநாயகக்கடவுளுடைய, அடி இணை-பாதங்களிரண்டையும், என்றும்-எந்நாளும், ஏத்தி-துதிசெய்து, தொழுவோம்-வணங்குவோம், யாம்-நாங்கள் என்றவாறு. ஏகாரம் ஈற்றசை.

## சூத்திரம்

**1. அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்.**

அன்னையும்-தாயும், பிதாவும்-தகப்பனும், முன்-முன்னே, அறி-காணப்பட்ட, தெய்வம்-தெய்வங்களாவார்.

**2. ஆலயந் தொழுவது சாலவும் நன்று.**

ஆலயம்-கோயிலுக்குப்போய், தொழுவது-கடவுளை வணங்குவது, சாலவும்-மிகவும், நன்று-நல்லது.

**3. இல்லற மல்லது நல்லற மன்று.**

இல்லறம்-(மனையாளோடு கூடிச் செய்யும்) இல்லறமானது, நல் அறம்-எளிதிற் செய்யத்தகும் அறமாகும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது-இல்லறமல்லாத துறவறமானது, அன்று-எளிதிற் செய்யத்தகும் அறமன்றாகும்.

**4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.**

ஈயார்-கொடாதவருடைய, தேட்டை-சம்பாத்தியத்தை, தீயார்-(கள்ளர் முதலாகிய) தீயவர், கொள்வர்-அபகரிப்பார்.

**5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு.**

உண்டி-போசனம், சுருங்குதல்-(அளவிற்) குறைதல், பெண்டிர்க்கு-பெண்டுகளுக்கு, அழகு-அழகாகும்.

**6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.**

ஊருடன்-(தான் இருக்கும்) ஊராருடன், பகைக்கின்-(ஒருவன்) விரோதித்தால், வேருடன்-(தன்) வமிசத்துடன், கெடும்-(அவன்) கெடுவான்.

**7. எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்.**

எண்ணும்-கணிதநூலும், எழுத்தும்-இலக்கண நூலும், கண் எனத் தகும்-(மனிதற்கு) இரண்டு கண்களென்று சொல்லப்படும்.

**8. ஏவா மக்கள் மூவா மருந்து.**

ஏவா-(பெற்றவர் இதைச் செய் என்று) ஏவுவதற்கு முன் குறிப்பறிந்து செய்கிற, மக்கள்-பிள்ளைகள், மூவாமருந்து-(அப்பெற்றவருக்குத்) தேவாமிர்தம் போல்வார்.

**9. ஐயம் புகினுஞ் செய்வன செய்.**

ஐயம் புகினும்-பிச்சையெடுத்தாலும், செய்வன-செய்யத்தகுங் கருமங்களையே, செய்-(நீ விடாது) செய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. ஒருவனைப் பற்றி ஓரகத் திரு.**

ஒருவனை—(நற்குணமுடைய) ஒருவனை, பற்றி—(துணையாகப்) பற்றிக் கொண்டு, ஓரகத்து—ஓரிடத்திலேதானே, இரு—(நீ எப்போதும்) வாசம்பண்ணு.

**11. ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்.**

வேதியர்க்கு—பிராமணருக்கு, ஒழுக்கம்—ஆசாரமானது, ஓதலின்—(வேதம்) ஓதலினும், நன்றே—நல்லதே.

**12. ஔவியம் பேசுத லாக்கத்திற் கழிவு.**

ஔவியம்—பொறாமை வார்த்தைகளை, பேசுதல்—(ஒருவன்) பேசுதல், ஆக்கத்திற்கு—(அவன்) செல்வத்திற்கு, அழிவு—கேட்டைத் தருவதாகும்.

**13. அஃகமுங் காசுஞ் சிக்கெனத் தேடு.**

அஃகமும்—தானியத்தையும், காசும்—திரவியத்தையும், சிக்கெனத்தேடு—நீ வீண்செலவு செய்யாமற் சம்பாதி.

**14. கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை.**

கற்பு எனப்படுவது—(பெண்களுக்குக்) கற்பென்று சொல்லப்படுவது, சொல்—(கணவர்) சொல்லுக்கு, திறம்பாமை—தப்பி நடவாமையாம்.

**15. காவலானே பாவையர்க் கழகு.**

காவல் தானே—(கற்புக்கு அழிவு வராமல் தம்மைக்) காத்துக்கொள்வது தானே, பாவையர்க்கு—பெண்களுக்கு, அழகு—அழகாகும்.

**16. கிட்டா தாயின் வெட்டென மற.**

கிட்டாது ஆயின்—(இச்சித்த ஒருபொருள்) கிடையாதானால், வெட்டென—சீக்கிரத்திலேதானே, மற—(அப்பொருளை) மறந்துவிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**17. கீழோ ராயினுந் தாழ வுரை.**

கீழோர் ஆயினும்-(கேட்பவர் உனக்குக்) கீழ்ப்பட்டவராய் இருந்தாலும், தாழ-(உன்சொல்) வணக்கமுடையதாய் இருக்கும்படி, உரை-(நீ அவருடன்) பேசு.

**18. குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை.**

குற்றம்-குற்றங்களை, பார்க்கின்-(ஆராய்ந்து) பார்த்தால், சுற்றம்-உறவாவோர், இல்லை-(ஒருவரும்) இல்லை.

**19. கூரம் பாயினும் வீரியம் பேசேல்.**

கூர் அம்பு ஆயினும்-(உன் கையிலிருக்கிறது) கூர்மை பொருந்திய அம்பானாலும், வீரியம்-வீரத்தன்மையை, பேசேல்-(நீ வீணாகப்) பேசாதே.

**20. கெடுவது செய்யின் விடுவது கருமம்.**

கெடுவது-கெடுவதை, செய்யின்-(தன் சினேகன்) செய்தால், விடுவது-(அவன் சினேகத்தை) விடுவதே, கருமம்-(விவேகிக்கு) நற்செய்கையாம்.

**21. கேட்டி லுறுதி கூட்டு முடைமை.**

கேட்டில்-(கைப்பொருள்) இழந்தகாலத்தில், உறுதி-மனந் தளராமை, உடைமை-(முன்போல அப்) பொருளுடையனாந்தன்மையை, கூட்டும்-சேர்க்கும்.

**22. கைப்பொரு டன்னின் மெய்ப்பொருள் கல்வி.**

கைப்பொருள் தன்னின்-கையிலிருக்கிற பொருளைப் பார்க்கிலும், மெய்ப்பொருள்-மெய்ப்பொருளாவது, கல்வி-கல்வியேயாம்.

**23. கொற்றவ னறித லுற்றிடத் துதவி.**

கொற்றவன்-அரசனானவன், அறிதல்-(ஒருவனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்திருத்தல், உற்ற இடத்து-(அவனுக்கு ஆபத்து) வந்த இடத்து, உதவி-உதவியாகும்.

## 24. கோட்செவிக் குறளை காற்றுட னெருப்பு.

கோட்செவி-கோள் கேட்குங் குணத்தோனுடைய கோளானது, காற்றுடன்-காற்றுடன் சேர்ந்த, நெருப்பு-நெருப்பைப்போல மூளும்.

## 25. கௌவை சொல்லி னெவ்வருக்கும் பகை.

கௌவை-(பிறர்மேலே) பழிச்சொல்லுகளை, சொல்லின்-(ஒருவன்) சொல்லினால், எவ்வருக்கும்-எல்லாருக்கும், பகை-(அவன்) பகையாவான்.

## 26. சந்ததிக் கழகு வந்தி செய்யாமை.

சந்ததிக்கு-தன் வமிசம் பெருகுவதற்கு, அழகு-அழகாவது, வந்தி-மலடியாக, செய்யாமை-செய்யாமல் (தன் மனையாளோடு) கூடி வாழ்தலாம்.

## 27. சான்றோ ரென்கை யீன்றோட் கழகு.

சான்றோர் என்கை-(தன் புத்திரரைக் கல்வியறிவால்) நிறைந்தோர் என்று (கற்றவர்) சொல்லுகிறது, ஈன்றோட்கு-பெற்றவர்களுக்கு, அழகு-அழகாகும்.

## 28. சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு.

சிவத்தை-(முதற்பொருளாகிய) பரமசிவத்தை, பேணின்-(ஒருவன்) வழிபட்டால், தவத்திற்கு-(அவன் செய்யுந்) தவத்திற்கு, அழகு-அழகாகும்.

## 29. சீரைத் தேடி னேரைத் தேடு.

சீரை-சௌக்கியத்தை, தேடின்-(உனக்குத்) தேடுவாயானால், ஏரை-பயிரிடுந்தொழிலை, தேடு-நீ தேடிக்கொள்ளு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**30. சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்.**

சுற்றத்திற்கு–உறவினருக்கு, அழகு–அழகாவது, சூழ–சுபாசுபங்களிலே பலரும் வந்து) சூழ, இருத்தல்–(சமீபங்களிலே) குடியிருக்கையாகும்.

**31. சூதும் வாதும் வேதனை செய்யும்.**

சூதும்–சூதாடுதலும், வாதும்–தருக்கம் பேசுதலும், வேதனை–வருத்தத்தை, செய்யும்–உண்டாக்கும்.

**32. செய்தவ மறந்தாற் கைதவ மாளும்.**

செய்தவம்–செய்யுந்தவத்தை, மறந்தால்–(ஒருவன்) மறந்தால், கைதவம்–பொய்யாகிய அஞ்ஞானமானது, ஆளும்–(அவனை அடிமைகொண்டு) ஆளும்.

**33. சேமம் புகினும் யாமத் துறங்கு.**

சேமம்–காவற்கூடத்திலே, புகினும்–போய் (ஒருவேலையும் இல்லாமல்) இருந்தாலும், யாமத்து–ஏழரைநாழிகைக்குப்பின், உறங்கு–நீ நித்திரைபண்ணு.

**34. சையொத் திருந்தா லைய மிட்டுண்.**

சை ஒத்து இருந்தால்–பொருள் ஒத்திருந்தால், ஐயம் இட்டு–பிச்சை இட்டு, உண்–நீயும் உண்ணு.

சை–பொருள்.

**35. சொக்க ரென்பவ ரத்தம் பெறுவர்.**

சொக்கர் என்பவர்–பொன்னுடையவர் என்று சொல்லப்படுவோர், அத்தம்–(அறமும் இன்பமுமாகிய மற்றைப்) புருஷார்த்தங்களையும், பெறுவர்–பெறுவார்.

சொக்கு–பொன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**36. சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்.**

சோம்பர் என்பவர்-சோம்பலுடையவர் என்று சொல்லப்படுவோர், தேம்பி-(வறுமையினால்) வருந்தி, திரிவர்-(இரந்து) திரிவார்.

**37. தந்தைசொல் மிக்க மந்திர மில்லை.**

தந்தை-பிதாவினுடைய, சொல்-சொல்லுக்கு- மிக்க-மேற்பட்ட, மந்திரம்-(பலனைத்தரும்) மந்திரமானது, இல்லை-(ஒருவனுக்கு எந்த நூலிலும்) இல்லை.

**38. தாயிற் சிறந்தகொரு கோயிலு மில்லை.**

தாயின்-மாதாவைப்பார்க்கிலும், சிறந்த-சிறப்புப்பொருந்திய, ஒரு கோயிலும்-ஒரு ஆலயமும், இல்லை-(ஒருவனுக்கு எங்கும்) இல்லை.

**39. திரைகட லோடியுந் திரவியந் தேடு.**

திரை கடல்-அலைகின்ற கடலிலே, ஓடியும்-(தோணியேறித் தூர தேசங்களிற்) போயானாலும், திரவியம்-திரவியத்தை, தேடு-நீ சம்பாதி.

**40. தீராக் கோபம் போரா முடியும்.**

தீரா-நீங்காத, கோபம்-கோபமானது, போரா-(பின்பு) சண்டையாக, முடியும்-முடிந்துவிடும்.

**41. துடியாப் பெண்டிர் மடியி னெருப்பு.**

துடியா-(தங்கணவருக்குத் துன்பம் வந்தபோது) மனம் பதையாத, பெண்டிர்-பெண்கள், மடியில்-(அவர்) வயிற்றில், நெருப்பு-அக்கினிக்கு ஒப்பாவார்.

**42. தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்.**

தூற்றும்-(தங்கணவர்மேற் குற்றஞ்சொல்லித்) தூற்றுகிற, பெண்டிர்-பெண்களை, கூற்று எனத் தகும்-(அவருக்கு) இயமன் என்று எண்ணத் தகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**43. தெய்வஞ் சீறிற் கைதவ மாளும்.**

தெய்வம்-தெய்வமானது, சீறின்-(ஒருவனைக்) கோபித்தால், கைதவம்-(அவனுக்குக்) கைகூடியிருந்த தவமும், மாளும்-(பயன்கொடாமல்) அழியும்.

**44. தேடா தழிக்கிற் பாடா முடியும்.**

தேடாது-(ஒருவன் வருந்திச்) சம்பாதியாமல், அழிக்கின்-(இருக்கிற பொருளைச்) செலவழித்தால், பாடா முடியும்-(அவனுக்குப் பின்) வருத்தமாக முடியும்.

**45. தையு மாசியும் வையகத் துறங்கு.**

தையும்-தைமாதத்திலும், மாசியும்-மாசிமாதத்திலும், வைஅகத்து-(பனிவருத்தந்தராத) வைக்கோல் வீட்டிலே, உறங்கு-நீ நித்திரை பண்ணு.

**46. தொழுதூண் சுவையி னுழுதூ ணினிது.**

தொழுது-(ஒருவரைச்) சேவித்து, ஊண்-உண்ணும் உணவினது, சுவையின்-சுவையைப்பார்க்கிலும், உழுது-உழுது பயிர்செய்து, ஊண்-உண்ணும் உணவின் சுவை, இனிது-இன்பந்தருவதாகும்.

**47. தோழ னோடு மேழைமை பேசேல்.**

தோழனோடும்-(உன்) சினேகனோடாயினும், ஏழைமை-(உனக்கு இருக்கிற) சிறுமையை, பேசேல்-(நீ எப்படிப்பட்ட வேளையிலும்) பேசாதே.

**48. நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்.**

நல் இணக்கம் அல்லது-நல்ல சகவாசம் அல்லாதது, அல்லல்-துன்பத்தையே, படுத்தும்-உண்டாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**49. நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை.**

நாடு எங்கும்–தேசமெங்கும், வாழ–செழித்திருக்குமாயின், கேடு ஒன்றும்–(திருட்டு முதலாகிய) கேடொன்றும், இல்லை–இல்லை.

**50. நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை.**

நிற்க–(தன்னிடத்தே) நிலைபெறும்படி, கற்றல்–கற்றலாவது, சொல்–(தான் சொல்லும்) சொல்லுகளிலே, திறம்பாமை–(ஒருபோதும்) தப்பிப்போகாமையாம்.

**51. நீரகம் பொருந்திய வூரகத் திரு.**

நீர்–நீர்வளமானது, அகம்–தனக்குள்ளே, பொருந்திய–(மழையில்லாத பஞ்சத்திலும்) அமைந்த, ஊரகத்து–ஊரினிடத்திலே, இரு–நீ குடியிரு.

**52. நுண்ணிய கருமமு மெண்ணித் துணி.**

நுண்ணிய–சிறிய, கருமமும்–தொழிலையும், எண்ணி–(முடிக்கும் வழியை நன்றாக) ஆலோசித்து, துணி–(நீ பின்பு அதைச்) செய்யத் துணி.

**53. நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு.**

நூல்–தருமநூலிலே சொல்லப்பட்ட, முறை–(விதிகளின்) முறையை, தெரிந்து–அறிந்து, சீலத்து நல்லொழுக்க வழியில், ஒழுகு–நீ நட.

**54. நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை.**

நெஞ்சை–(தம்முடைய) மனசுக்கு, ஒளித்த–மறைக்கப்பட்ட, ஒரு வஞ்சகம்–யாதொரு வஞ்சனையும், இல்லை–(யாவரிடத்திலும்) இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**55. நேரா நோன்பு சீரா காது.**

நேரா-(மனசினால்) உடன்படாத, நோன்பு-தவமானது, சீர் ஆகாது-சீராக முடியாது.

**56. நைபவ ரெனினு நொய்ய வுரையேல்.**

நைபவர் எனினும்-(கேட்போர் எதிர்பேசாமல்) வருந்துவோர் ஆயினும், நொய்ய-அற்ப வார்த்தைகளை, உரையேல்-நீ சொல்லாதே.

**57. நொய்யவ ரென்பவர் வெய்யவ ராவர்.**

நொய்யவர் என்பவர்-(உருவத்தினாலே) சிறியவர் என்று இகழப்படுவோரும், வெய்யவர் ஆவர்-செய்காரியத்தால் யாவரும் விரும்புங் குணத்தையுடையவராவர்.

**58. நோன் பென்பதுவே கொன்று தின்னாமை.**

நோன்பு என்பது-தவமென்று சொல்லப்படுவது, கொன்று-(ஒருசீவனை) வதைசெய்து, தின்னாமை-(அதன் மாமிசத்தைத்) தின்னாமையேயாம்.

**59. பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்.**

பண்ணிய-(ஒருவன்) செய்த, பயிரின்-பயிரின் விளைவினாலும் விளைவில்லாமையினாலும், புண்ணியம்-(அவனிடத்தே) புண்ணியம் இருத்தலும் இல்லாமையும், தெரியும்-அறியப்படும்.

**60. பாலோ டாயினுங் கால மறிந்துண்.**

பாலோடு ஆயினும்-பாலோடு கூடிய அன்னத்தை உண்டாலும், காலம் அறிந்து-(உண்ணத்தகுங்) காலத்தை அறிந்து, உண்-(நீ அதை) உண்ணு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. பிறன்மனை புகாமை யறமெனத் தகும்.

பிறன்-பிறனுடைய, மனை-மனையாளிடத்தில், புகாமை-(இச்சித்துப்) போகாமையே, அறம் எனத் தகும்-(எல்லாத் தருமங்களிலும் உயர்ந்த) தருமம் என்று சொல்லத்தகும்.

62. பீரம் பேணி பாரந் தாங்கும்.

பீரம் பேணி-முலைப்பால் குறைவற உண்டுவளர்ந்தவன், பாரம்-பாரமான சுமையை, தாங்கும்-சுமப்பான். [அதுபோல, முன்னே காரணங்களைக் குறைவறக் கொண்டவன் பின்னே பெரிய காரியங்களையும் வருத்தமின்றி முடிப்பான்.]

பீர்-முலைப்பால், அம்-சாரியை.

63. புலையுங் கொலையுங் களவுந் தவிர்.

புலையும்-புலாலுண்ணுதலையும், கொலையும்-சீவ வதை செய்தலையும், களவும்-பிறர்பொருளைத் திருடுதலையும், தவிர்-(நீ செய்யாது) ஒழித்துவிடு.

64. பூரியோர்க் கில்லை சீரிய வொழுக்கம்.

பூரியோர்க்கு-கீழ்மக்களுக்கு, சீரிய-சிறப்பாகிய ஒழுக்கம்-நடையானது, இல்லை-(உண்டாதல்) இல்லை.

65. பெற்றோர்க் கில்லை சுற்றமுஞ் சினமும்.

பெற்றோர்க்கு-(மெய்ஞ்ஞானத்தைப் பெற்றவருக்கு, சுற்றமும்-உறவினர்மேல் ஆசையும், சினமும்-(மற்றவர்மேல்) வெறுப்பும், இல்லை-இல்லை.

66. பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்.

பேதைமை என்பது-அறியாமையென்று சொல்லப்படுங் குணமானது, மாதர்க்கு-பெண்களுக்கு, அணிகலம்-ஆபரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**67. பையச் சென்றால் வையந் தாங்கும்.**

பைய-மெள்ள, சென்றால்-(ஒருவன் தகுதியானவழியிலே) நடந்தால், வையம்-பூமியிலுள்ளோர், தாங்கும்-(அவனை) மேலாகக் கொள்வார்.

**68. பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர்.**

பொல்லாங்கு என்பவை-தீங்குகளென்று சொல்லப்பட்டவை களாகிய, எல்லாம்-எல்லாவற்றையும், தவிர்-(நீ செய்யாது) ஒழித்துவிடு.

**69. போனக மென்பது தானுழந் துண்டல்.**

போனகம் என்பது-போனகமென்று சொல்லப்படுவது, தான் உழந்து-தான் பிரயாசப்பட்டுச் சம்பாதித்து, உண்டல்-உண்ணுதலாம்.

**70. மருந்தே யாயினும் விருந்தோ டுண்.**

மருந்தே ஆயினும்-(உண்ணப்படுவது கிடைத்தற்கு அரிய) தேவாமிர்தமேயானாலும், விருந்தொடு-(வந்த) விருந்தாளிகளோடு கூடி, உண்-நீ உண்ணு.

**71. மாரி யல்லது காரிய மில்லை.**

மாரி அல்லது-மழையினால் அல்லாமல், காரியம்-யாதொரு காரியமும், இல்லை-யாருக்கும் நடப்பது) இல்லை.

**72. மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை.**

மின்னுக்கு எல்லாம்-(வானத்திலே காணப்பட்ட) மின்னலுக்கு எல்லாம், பின்னுக்கு மழை-(அப்போது மழையில்லையாயினும்) பின்னே மழை உண்டாகும். [அதுபோல ஒருவனிடத்திலே காணப்பட்ட நல்ல முயற்சிகளுக்கெல்லாம் அப்போது பயன் இல்லையாயினும் பின்னே பயன் உண்டாகும்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**73. மீகாம னில்லா மரக்கல மோடாது.**

மீகாமன்-(தன்னை ஓட்டத்தக்க) மாலுமி, இல்லா-இல்லாத, மரக்கலம்-தோணியானது, ஓடாது-(கடலிலே செவ்வையாக) ஓடாது. [அதுபோலத் தன்னை முடிக்கத்தக்கவன் இல்லாத யாதொரு கருமமும் செவ்வையாக முடியாது.]

**74. முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்.**

முற்பகல்-ஒருமுகூர்த்தகாலத்தின் முன்பங்கிலே, செய்யின்-(பிறனுக்குத் தீங்கு) செய்தால், பிற்பகல்-அதன் பின்பங்கிலே, விளையும்-(செய்தவனுக்கு) அத்தீங்கு தானே உண்டாகும்.

பகல்-முகூர்த்தம்.

**75. மூத்தோர் சொன்ன வார்த்தை யமிர்தம்.**

மூத்தோர்-(கல்வியறிவினாலே) முதிர்ந்தவர், சொன்ன-சொல்லிய, வார்த்தை-வார்த்தையானது, அமிர்தம்-தேவாமிர்தத்தைப்போலும்.

**76. மெத்தையிற் படுத்த னித்திரைக் கழகு.**

மெத்தையில்-பஞ்சணையிலே, படுத்தல்-படுத்தலானது, நித்திரைக்கு-(ஒருவன் செய்கிற) நித்திரைக்கு, அழகு-அழகாகும்.

**77. மேழிச் செல்வங் கோழைபடாது.**

மேழி-கலப்பை (பிடித்து உழுது பயிர்செய்தலால் உண்டாகுகின்ற), செல்வம்-செல்வமானது, கோழைபடாது-(ஒருபோதும்) குறைவை அடையாது.

**78. மைவிழி யார்தம் மனையகன் றொழுகு.**

மை விழியார்தம்-மை தீட்டிய கண்ணையுடைய வேசிகளது, மனை-வீடுகளை, அகன்று ஒழுகு-நீ அணுகாமலே விலகிப்போ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**79. மொழிவது மறுக்கி னழிவது கருமம்.**

மொழிவது-(கற்றோர்) சொல்லுகின்ற உபாயத்தை, மறுக்கின்-கேளாமற் செய்தால், கருமம்-(ஒருவன் செய்யுந்) தொழில், அழிவது-கெடுவதாகும்.

**80. மோன மென்பது ஞான வரம்பு.**

மோனம் என்பது-மௌனநிலை என்பது, ஞானம்-மெய்ஞ்ஞானத்துக்கு, வரம்பு-எல்லையாகும்.

**81. வளவ னாயினு மளவறிந் தழித்துண்.**

வளவன் ஆயினும்-(சம்பத்திலே) சோழனுக்கு ஒப்பானவனாய் இருந்தாயானாலும், அளவு-(பொருள் வரவின்) அளவை, அறிந்து-தெரிந்து, அழித்து-செலவழித்து, உண்-நீ அனுபவி.

**82. வானஞ் சுருங்கிற் றானஞ் சுருங்கும்.**

வானம்-மழையானது, சுருங்கின்-பெய்தல் குறையுமாயின், தானம்-(சற்பாத்திரங்களுக்குக் கொடுக்கிற) கொடையும், சுருங்கும்-குறைவுபடும்.

**83. விருந்திலோர்க் கில்லை பொருந்திய வொழுக்கம்.**

விருந்து இலோர்க்கு-விருந்தினரை உபசரித்தல் இல்லாதவருக்கு, பொருந்திய-தாம் பொருந்திய, ஒழுக்கம்-இல்லறம், இல்லை-(இருந்ததாயினும்) இல்லாததற்குச் சமானமாகும்.

**84. வீரன் கேண்மை கூரம் பாகும்.**

வீரன்-வீரனுடைய, கேண்மை-சினேகம் (ஒருவனுக்கு இருந்தால்), கூர் அம்பு ஆகும்-(அவனுக்கு அதுவே தன்பகையை வெல்லுதற்குக்) கூர்மை பொருந்திய அம்பாகும்.

**85. உரவோ ரென்கை யிரவா திருத்தல்.**

உரவோர் என்கை-வல்லவரென்று சொல்லப்படுதல், இரவாது-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தமக்குச் சிறுமை வந்த காலத்திலும் (பிறரை) இரவாமல், இருத்தல்–இருக்கையாம்.

**86. ஊக்க முடைமை யாக்கத்திற் கழகு.**

ஊக்கம்–(செய்தொழிலிலே) மனந்தளராமையை, உடைமை–(ஒருவன்) உடையனாதல், ஆக்கத்திற்கு–(அவன்) செல்வத்திற்கு, அழகு–அழகாகும்.

**87. வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை.**

வெள்ளைக்கு–களங்கமில்லாத பரிசுத்த குணமுடையனிடத்து, கள்ளம்–வஞ்சனை பொருந்திய, சிந்தை–நினைப்பானது, இல்லை–இல்லை.

**88. வேந்தன் சீறினாந்துணை யில்லை.**

வேந்தன்–அரசனானவன், சீறின்–(ஒருவனைக்) கோபித்தால், ஆம்–(அப்போது அவனுக்கு உபயோகம்) ஆகின்ற, துணை–துணை, இல்லை–(ஒருவரும்) இல்லை.

**89. வையந் தோறுந் தெய்வந் தொழு.**

வையந்தோறும்–பூமியிலுள்ள தலந்தோறும் (போய்), தெய்வம்–கடவுளை, தொழு–(நீ தரிசித்து) வணங்கு.

**90. ஒத்த விடத்து நித்திரை கொள்.**

ஒத்த விடத்து–(மேடுபள்ளம் இல்லாமற்) சமமான இடத்திலே, நித்திரைகொள்–(நீ படுத்து) நித்திரை பண்ணு.

**91. ஓதாதார்க் கில்லை யுணர்வொடு மொழுக்கம்.**

ஓதாதார்க்கு–(அறிவு நூல்களைப்) படியாதவருக்கு, உணர்வொடும்–அறிவுடனே, ஒழுக்கம்–நல்ல நடையும், இல்லை–(உண்டாதல்) இல்லை.

***கொன்றைவேந்தனுரை***

*முற்றுப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபந்தம்

# கடிதம் எழுதுகிற முறை.

## தகப்பனுக்கு மகன் எழுதல்

மகா கனம்பொருந்திய தந்தையார் அவர்களுக்கு வந்தனஞ்செய்து எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்.

ஐயா,

கடவுளுடைய திருவருளினாலும் தங்கள் ஆசீர்வாதத்தினாலும் அடியேன் இங்கே க்ஷேமமாயிருக்கின்றேன். தாங்களும் அடியேனுடைய தாயார் தமையனார் முதலானவர்களும் க்ஷேமமாயிருக்கின்ற சமாசாரம் அறிய விரும்புகிறேன்.

அடியேன் வித்தியாசாலைக்கு நியமமாகப் போய்ப் படித்து வருகிறேன். இப்பொழுது இரண்டாம் பாலபாடமும் எண்சுவடியும் படிக்கிறேன்.

அடியேனுடைய சிறியதாயாரவர்கள் அடியேனை மிகுந்த அன்புடனே நடத்துகிறார்கள். கனம்பொருந்திய உபாத்தியாயரவர்கள் வெகு பிரீதியுடனே பாடஞ்சொல்லுகிறார்கள்.

அடியேனுக்கு இரண்டு வேட்டி வாங்கி அனுப்பும்படி தங்களைப் பிரார்த்திக்கின்றேன்.

அடியேனுக்கு வேண்டும் நல்லபுத்திகளை அடிக்கடி கட்டளையிடும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

சிதம்பரம் — இங்ஙனம்,

பிரபவஹு — தங்கள் அன்புள்ள குமாரன்

மார்கழிமீ 10உ — குமாரசுவாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகனுக்குத் தகப்பன் எழுதல்

கடவுளுடைய திருவருளினாலே சிரஞ்சீவி குமாரசுவாமிக்குக் கல்வியும் நல்லொழுக்கமும் ஈசுரபத்தியும் தீர்க்காயுசும் மேன்மேலும் பெருகுக.

என் அன்புள்ள குமாரனே,

நீ இந்தமீ 10உ எழுதிய கடிதம் வந்து சேர்ந்தது. கடவுளுடைய பெருங் கருணையினாலே நானும் உன்னுடைய அன்புள்ளதாய் தமையன் முதலானவர்களும் க்ஷேமமாயிருக்கிறோம். உன் மாமனார் இரண்டுவாரம் சுரத்தினாலே பீடிக்கப்பட்டு இப்போது சௌக்கியமடைந்திருக்கிறார்.

நீ வித்தியாசாலைக்கு நியமமாகப் போய், குணம்பொருந்திய உபாத்தியாயரவர்களுக்கு அன்போடும் அச்சத்தோடும் பணிந்து நடந்து, வித்தையை நன்றாகக் கற்றுக்கொள்ள வேண்டும். பின்வரும் நீதிமொழி இரண்டும் உனக்குத் தெரியுமே.

"வித்தை விரும்பு"
"இளமையிற் கல்."

உன் தமையன் மார்கழிமீ ஆருத்திராதரிசனத்தின் பொருட்டுச் சிதம்பரத்துக்கு வருவான்; உனக்கு வேட்டியிரண்டும் அவனிடத்திற் கொடுத்து அனுப்புவேன்; பெற்றுக்கொள்.

நீ தினந்தோறும் தவறாமல் கடவுளை அன்போடு தியானித்துத் தோத்திரம் பண்ணக்கடவாய்.

மாயூரம் — இங்ஙனம்,
பிரபவஹூ — இன்வாழ்வை விரும்புகிற தந்தை
மார்கழிமீ 13உ — வே. வைத்தியலிங்கம் பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமையனுக்குத் தம்பி எழுதல்

மகா கனம்பொருந்திய தமையனாரவர்களுக்கு வந்தனஞ்செய்து எழுதிக் கொள்ளும் விண்ணப்பம்.

அண்ணா,

இவ்விடத்தில் அனைவரும் க்ஷேமம். தங்கள் க்ஷேமாதிசயங்கள் அறிய விரும்புகிறேன்.

தங்கள் கட்டளைப்படி பயிர்வேலை தடையில்லாமல் நடந்து வருகின்றது. அடியேன் வித்தியாசாலைக்குத் தவறாமல் போய்ப் படித்துவருகிறேன்.

என் சிறு பிராயத்திலே பிதாமாதாக்கள் சிவபதமடைந்துவிட, தாங்களே அடியேன்மேல் இரக்கம் வைத்து, அடியேனை அன்ன வஸ்திரந்தந்து, வித்தியாசாலைக்கு அனுப்பிப் படிப்பித்து வருகிறீர்கள். அடியேன் இயன்றமட்டும் கல்வியிலே தேர்ச்சியடைந்து யாதாயினும் ஒரு உத்தியோகம் பெற்றுக்கொள்ளும் வரையும், இந்த நன்றியை இடையறா வண்ணம் செய்வீர்களென்று நம்புகிறேன். தாங்கள் செய்யும் நன்றியை அடியேன் மறவாதபடி அருள்செய்யும் பொருட்டுப் பெருங்கருணைக் கடலாகிய கடவுளைப் பிரார்த்தித்து வருகிறேன். ஒளவையார் அருளிச்செய்த "நன்றிமறவேல்" என்னும் நீதிமொழி எப்போதும் என்மனசில் இருக்கின்றது.

தங்கள் தரிசனம் அடியேனுக்கு எப்போது கிடைக்குமோ அறியேன். தாங்கள் இவ்விடத்துக்குத் திரும்பும்பொழுது அடியேனுக்கு ஒரு விபூதிச்சம்புடம் வாங்கிக் கொண்டு வரும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

சிதம்பரம் — இங்ஙனம்,
பிரபவஹு — தங்கள் அதிப்பிரியனாகிய சகோதரன்
மார்கழிமீ 21உ — மாசிலாமணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பிக்குத் தமையன் எழுதல்

கடவுளுடைய திருவருளினாலே சிரஞ்சீவி தம்பி மாசிலாமணிக்குச் சகல நன்மைகளும் பெருகுக.

நீ அனுப்பின கடிதம் பெற்று வாசித்துச் சந்தோஷமடைந்தேன். நான் இரண்டு வாரத்துக்குள்ளே அவ்விடம் வந்துசேருவேன். வரும்போது விபூதிச்சம்புடம் கொண்டு வருவேன்.

தம்பீ, நீ சிறிதும் கவலைப்படவேண்டாம். நீ எவ்வளவு காலத்துக்குப் படிக்கவேண்டுமோ அவ்வளவு காலத்துக்கும் நான் உனக்கு அன்னவஸ்திரம் புஸ்தக முதலானவைகளும் தந்து உன்னை அன்போடு, நடத்தும்படி கடவுள் கிருபை செய்வார்.

நீ படிப்பதற்கு மாத்திரமன்றிப் படித்தபடியே நடப்பதற்கும் பிரயாசைப்பட வேண்டும். நன்னடை இல்லாதபோது கல்வியினாலே பிரயோசனம் இல்லை. நமக்கு உயிர்த்துணையாகிய கடவுளை ஒருபோதும் மறவாதே.

"நின்று மிருந்துங் கிடந்து நடந்துநினை
என்றுஞ் சிவன்றாளிணை"

கும்பகோணம் — இங்ஙனம்,
பிரபவஞு — உன் அன்புள்ள தமையன்
மார்கழிமீ 26உ — கனகசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபாத்தியாயருக்கு மாணாக்கன் எழுதல்

ம-ள-ள-ஸ்ரீ. உபாத்தியாயரவர்களுக்கு மனம் வாக்குக் காயங்களினாலே வந்தனஞ்செய்து எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்.

கனம்பொருந்திய ஐயா,

அடியேன் இந்தமீ 5உ தமையனாருடைய கலியாணத்தின் பொருட்டு இருபது தினத்துக்குத் தங்களிடத்திலே அநுமதி பெற்றுக் கொண்டு, அன்று சாயங்காலம் சிறிய தகப்பனாரோடும் சிதம்பரத்தினின்றும் புறப்பட்டு, 9உ இவ்விடம் வந்து சேர்ந்தேன். 12உ தமையனாருடைய கலியாணம் சிறப்பாக நிறைவேறியது.

இவ்விடத்திலே எங்கள் ஸ்ரீ குருசுவாமிகள் இந்த மாசத்துக் கடைச்சோம வாரத்திலே சிலருக்குத் தீக்ஷை செய்யும் பொருட்டு நிச்சயித்திருக்கிறார்கள். கனம் பொருந்திய இரண்டாமுபாத்தியாயரவர்கள் தம் வகுப்புப் பிள்ளைகளுக்குத் தீக்ஷை பெற்றுக்கொள்ளும்படி ஒருநாள் போதித்ததைக் கேட்டு, அடியேனும் அதில் ஆசையுடையவனாய் இருந்தேன். அதற்கு இது சமயம் ஆதலால், அடியேன் அது வரையும் தாமதித்திருந்து, தீக்ஷைபெற்று நாலைந்து தினத்துக்குள்ளே அநுட்டானம் பழகிக்கொண்டு சிறிய தகப்பனாரவர்களோடு புறப்பட்டுத் தாமதமில்லாமல் அவ்விடம் வந்து சேருவேன். இதற்குத் தாங்கள் பெருந்தயை கூர்ந்து அனுமதி செய்யும்படி தங்கள் கனத்தைப் பிரார்த்திக்கின்றேன்.

அடியேன் பழம்பாடம் படித்து வருகின்றேன். புதுப்பாடம் தினந்தோறும் படித்துச் சிறிய தகப்பனாரிடத்தில் ஒப்பித்து வருகிறேன்.

வேதாரணியம்
பிரபவஸு
தைமீ 14உ

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள மாணாக்கன்
சு. அம்பலவாணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# எண்மானம்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒன்று | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | 1 |
| பத்து | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | 21 |
| நூறு | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | 321 |
| ஆயிரம் | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | 4, | 321 |
| பதினாயிரம் | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | 54, | 321 |
| இலக்ஷம் | ... | ... | ... | ... | ... | ... | ... | 6, | 54, | 321 |
| பத்திலக்ஷம் | ... | ... | ... | ... | ... | ... | ... | 76, | 54, | 321 |
| கோடி | ... | ... | ... | ... | ... | ... | 8, | 76, | 54, | 321 |
| பத்துக்கோடி | ... | ... | ... | ... | ... | ... | 28, | 76, | 54, | 321 |
| நூறுகோடி | ... | ... | ... | ... | ... | ... | 328, | 76, | 54, | 321 |
| ஆயிரகோடி | ... | ... | ... | ... | ... | 4, | 328, | 76, | 54, | 321 |
| பதினாயிரகோடி | ... | ... | ... | ... | ... | 54, | 328, | 76, | 54, | 321 |
| இலக்ஷகோடி | ... | ... | ... | ... | 6, | 54, | 328, | 76, | 54, | 321 |
| பத்திலக்ஷகோடி | ... | ... | ... | ... | 76, | 54, | 328, | 76, | 54, | 321 |
| மகாகோடி | ... | ... | ... | 8, | 76, | 54, | 328, | 76, | 54, | 321 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டல் வாய்ப்பாடு

| 1ம் | | | 2ம் | | | 3ம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ம் | 2 | 1 | ம் | 3 | 1 | ம் | 4 |
| 2 | | 3 | 2 | | 4 | 2 | | 5 |
| 3 | | 4 | 3 | | 5 | 3 | | 6 |
| 4 | | 5 | 4 | | 6 | 4 | | 7 |
| 5 | | 6 | 5 | | 7 | 5 | | 8 |
| 6 | | 7 | 6 | | 8 | 6 | | 9 |
| 7 | | 8 | 7 | | 9 | 7 | | 10 |
| 8 | | 9 | 8 | | 10 | 8 | | 11 |
| 9 | | 10 | 9 | | 11 | 9 | | 12 |
| 10 | | 11 | 10 | | 12 | 10 | | 13 |
| 11 | | 12 | 11 | | 13 | 11 | | 14 |
| 12 | | 13 | 12 | | 14 | 12 | | 15 |
| 13 | | 14 | 13 | | 15 | 13 | | 16 |
| 14 | | 15 | 14 | | 16 | 14 | | 17 |
| 15 | | 16 | 15 | | 17 | 15 | | 18 |
| 16 | | 17 | 16 | | 18 | 16 | | 19 |

| 4ம் | | | 5ம் | | | 6ம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ம் | 5 | 1 | ம் | 6 | 1 | ம் | 7 |
| 2 | | 6 | 2 | | 7 | 2 | | 8 |
| 3 | | 7 | 3 | | 8 | 3 | | 9 |
| 4 | | 8 | 4 | | 9 | 4 | | 10 |
| 5 | | 9 | 5 | | 10 | 5 | | 11 |
| 6 | | 10 | 6 | | 11 | 6 | | 12 |
| 7 | | 11 | 7 | | 12 | 7 | | 13 |
| 8 | | 12 | 8 | | 13 | 8 | | 14 |
| 9 | | 13 | 9 | | 14 | 9 | | 15 |
| 10 | | 14 | 10 | | 15 | 10 | | 16 |
| 11 | | 15 | 11 | | 16 | 11 | | 17 |
| 12 | | 16 | 12 | | 17 | 12 | | 18 |
| 13 | | 17 | 13 | | 18 | 13 | | [illegible] |
| 14 | | 18 | 14 | | 19 | 14 | | [illegible] |
| 15 | | 19 | 15 | | 20 | 15 | | [illegible] |
| 16 | | 20 | 16 | | 21 | 16 | | [illegible] |

1
320

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டல் வாய்ப்பாடு

| 7ம் | | | 8ம் | | | 9ம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ம் | 8 | 1 | ம் | 9 | 1 | ம் | 10 |
| 2 | | 9 | 2 | | 10 | 2 | | 11 |
| 3 | | 10 | 3 | | 11 | 3 | | 12 |
| 4 | | 11 | 4 | | 12 | 4 | | 13 |
| 5 | | 12 | 5 | | 13 | 5 | | 14 |
| 6 | | 13 | 6 | | 14 | 6 | | 15 |
| 7 | | 14 | 7 | | 15 | 7 | | 16 |
| 8 | | 15 | 8 | | 16 | 8 | | 17 |
| 9 | | 16 | 9 | | 17 | 9 | | 18 |
| 10 | | 17 | 10 | | 18 | 10 | | 19 |
| 11 | | 18 | 11 | | 19 | 11 | | 20 |
| 12 | | 19 | 12 | | 20 | 12 | | 21 |
| 13 | | 20 | 13 | | 21 | 13 | | 22 |
| 14 | | 21 | 14 | | 22 | 14 | | 23 |
| 15 | | 22 | 15 | | 23 | 15 | | 24 |
| 16 | | 23 | 16 | | 24 | 16 | | 25 |

| 10ம் | | | 11ம் | | | 12ம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ம் | 11 | 1 | ம் | 12 | 1 | ம் | 13 |
| 2 | | 12 | 2 | | 13 | 2 | | 14 |
| 3 | | 13 | 3 | | 14 | 3 | | 15 |
| 4 | | 14 | 4 | | 15 | 4 | | 16 |
| 5 | | 15 | 5 | | 16 | 5 | | 17 |
| 6 | | 16 | 6 | | 17 | 6 | | 18 |
| 7 | | 17 | 7 | | 18 | 7 | | 19 |
| 8 | | 18 | 8 | | 19 | 8 | | 20 |
| 9 | | 19 | 9 | | 20 | 9 | | 21 |
| 10 | | 20 | 10 | | 21 | 10 | | 22 |
| 11 | | 21 | 11 | | 22 | 11 | | 23 |
| 12 | | 22 | 12 | | 23 | 12 | | 24 |
| 13 | | 23 | 13 | | 24 | 13 | | 25 |
| 14 | | 24 | 14 | | 25 | 14 | | 26 |
| 15 | | 25 | 15 | | 26 | 15 | | 27 |
| 16 | | 26 | 16 | | 27 | 16 | | 28 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டல் வாய்ப்பாடு

| 13ம் | | | 14ம் | | | 15ம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ம் | 14 | 1 | ம் | 15 | 1 | ம் | 16 |
| 2 | | 15 | 2 | | 16 | 2 | | 17 |
| 3 | | 16 | 3 | | 17 | 3 | | 18 |
| 4 | | 17 | 4 | | 18 | 4 | | 19 |
| 5 | | 18 | 5 | | 19 | 5 | | 20 |
| 6 | | 19 | 6 | | 20 | 6 | | 21 |
| 7 | | 20 | 7 | | 21 | 7 | | 22 |
| 8 | | 21 | 8 | | 22 | 8 | | 23 |
| 9 | | 22 | 9 | | 23 | 9 | | 24 |
| 10 | | 23 | 10 | | 24 | 10 | | 25 |
| 11 | | 24 | 11 | | 25 | 11 | | 26 |
| 12 | | 25 | 12 | | 26 | 12 | | 27 |
| 13 | | 26 | 13 | | 27 | 13 | | 28 |
| 14 | | 27 | 14 | | 28 | 14 | | 29 |
| 15 | | 28 | 15 | | 29 | 15 | | 30 |
| 16 | | 29 | 16 | | 30 | 16 | | 31 |

| 16ம் | | |
|---|---|---|
| 1 | ம் | 17 |
| 2 | | 18 |
| 3 | | 19 |
| 4 | | 20 |
| 5 | | 21 |
| 6 | | 22 |
| 7 | | 23 |
| 8 | | 24 |
| 9 | | 25 |
| 10 | | 26 |
| 11 | | 27 |
| 12 | | 28 |
| 13 | | 29 |
| 14 | | 30 |
| 15 | | 31 |
| 16 | | 32 |

## கழித்தல்.

கழித்தல் வாய்பாட்டின் பொருட்டு இக்கூட்டல் வாய்ப்பாட்டையே மாற்றிப் படிக்க. உதாரணம்:- 2ல் 1 போனால் 1; 3ல் 1 போனால் 2; 4ல் 1 போனால் 3; 5ல் 1 போனால் 4 என வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 1 | | | 2 | | | 3 | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | = | 1 | 1 | = | 2 | 1 | = | 3 |
| 2 | | 2 | 2 | | 4 | 2 | | 6 |
| 3 | | 3 | 3 | | 6 | 3 | | 9 |
| 4 | | 4 | 4 | | 8 | 4 | | 12 |
| 5 | | 5 | 5 | | 10 | 5 | | 15 |
| 6 | | 6 | 6 | | 12 | 6 | | 18 |
| 7 | | 7 | 7 | | 14 | 7 | | 21 |
| 8 | | 8 | 8 | | 16 | 8 | | 24 |
| 9 | | 9 | 9 | | 18 | 9 | | 27 |
| 10 | | 10 | 10 | | 20 | 10 | | 30 |
| 11 | | 11 | 11 | | 22 | 11 | | 33 |
| 12 | | 12 | 12 | | 24 | 12 | | 36 |
| 13 | | 13 | 13 | | 26 | 13 | | 39 |
| 14 | | 14 | 14 | | 28 | 14 | | 42 |
| 15 | | 15 | 15 | | 30 | 15 | | 45 |
| 16 | | 16 | 16 | | 32 | 16 | | 48 |

| 4 | | | 5 | | | 6 | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | = | 4 | 1 | = | 5 | 1 | = | 6 |
| 2 | | 8 | 2 | | 10 | 2 | | 12 |
| 3 | | 12 | 3 | | 15 | 3 | | 18 |
| 4 | | 16 | 4 | | 20 | 4 | | 24 |
| 5 | | 20 | 5 | | 25 | 5 | | 30 |
| 6 | | 24 | 6 | | 30 | 6 | | 36 |
| 7 | | 28 | 7 | | 35 | 7 | | 42 |
| 8 | | 32 | 8 | | 40 | 8 | | 48 |
| 9 | | 36 | 9 | | 45 | 9 | | 54 |
| 10 | | 40 | 10 | | 50 | 10 | | 60 |
| 11 | | 44 | 11 | | 55 | 11 | | 66 |
| 12 | | 48 | 12 | | 60 | 12 | | 72 |
| 13 | | 52 | 13 | | 65 | 13 | | 78 |
| 14 | | 56 | 14 | | 70 | 14 | | 84 |
| 15 | | 60 | 15 | | 75 | 15 | | 90 |
| 16 | | 64 | 16 | | 80 | 16 | | 96 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருக்கல் வாய்ப்பாடு

| 7 | | | 8 | | | 9 | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | = | 7 | 1 | = | 8 | 1 | = | 9 |
| 2 | | 14 | 2 | | 16 | 2 | | 18 |
| 3 | | 21 | 3 | | 24 | 3 | | 27 |
| 4 | | 28 | 4 | | 32 | 4 | | 36 |
| 5 | | 35 | 5 | | 40 | 5 | | 45 |
| 6 | | 42 | 6 | | 48 | 6 | | 54 |
| 7 | | 49 | 7 | | 56 | 7 | | 63 |
| 8 | | 56 | 8 | | 64 | 8 | | 72 |
| 9 | | 63 | 9 | | 72 | 9 | | 81 |
| 10 | | 70 | 10 | | 80 | 10 | | 90 |
| 11 | | 77 | 11 | | 88 | 11 | | 99 |
| 12 | | 84 | 12 | | 96 | 12 | | 108 |
| 13 | | 91 | 13 | | 104 | 13 | | 117 |
| 14 | | 98 | 14 | | 112 | 14 | | 126 |
| 15 | | 105 | 15 | | 120 | 15 | | 135 |
| 16 | | 112 | 16 | | 128 | 16 | | 144 |

| 10 | | | 11 | | | 12 | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | = | 10 | 1 | = | 11 | 1 | = | 12 |
| 2 | | 20 | 2 | | 22 | 2 | | 24 |
| 3 | | 30 | 3 | | 33 | 3 | | 36 |
| 4 | | 40 | 4 | | 44 | 4 | | 48 |
| 5 | | 50 | 5 | | 55 | 5 | | 60 |
| 6 | | 60 | 6 | | 66 | 6 | | 72 |
| 7 | | 70 | 7 | | 77 | 7 | | 84 |
| 8 | | 80 | 8 | | 88 | 8 | | 96 |
| 9 | | 90 | 9 | | 99 | 9 | | 108 |
| 10 | | 100 | 10 | | 110 | 10 | | 120 |
| 11 | | 110 | 11 | | 121 | 11 | | 132 |
| 12 | | 120 | 12 | | 132 | 12 | | 144 |
| 13 | | 130 | 13 | | 143 | 13 | | 156 |
| 14 | | 140 | 14 | | 154 | 14 | | 168 |
| 15 | | 150 | 15 | | 165 | 15 | | 180 |
| 16 | | 160 | 16 | | 176 | 16 | | 192 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருக்கல் வாய்ப்பாடு

| 13 | | 14 | | 15 | |
|---|---|---|---|---|---|
| 1 = | 13 | 1 = | 14 | 1 = | 15 |
| 2 | 26 | 2 | 28 | 2 | 30 |
| 3 | 39 | 3 | 42 | 3 | 45 |
| 4 | 52 | 4 | 56 | 4 | 60 |
| 5 | 65 | 5 | 70 | 5 | 75 |
| 6 | 78 | 6 | 84 | 6 | 90 |
| 7 | 91 | 7 | 98 | 7 | 105 |
| 8 | 104 | 8 | 112 | 8 | 120 |
| 9 | 117 | 9 | 126 | 9 | 135 |
| 10 | 130 | 10 | 140 | 10 | 150 |
| 11 | 143 | 11 | 154 | 11 | 165 |
| 12 | 156 | 12 | 168 | 12 | 180 |
| 13 | 169 | 13 | 182 | 13 | 195 |
| 14 | 182 | 14 | 196 | 14 | 210 |
| 15 | 195 | 15 | 210 | 15 | 225 |
| 16 | 208 | 16 | 224 | 16 | 240 |

| 16 | |
|---|---|
| 1 = | 16 |
| 2 | 32 |
| 3 | 48 |
| 4 | 64 |
| 5 | 80 |
| 6 | 96 |
| 7 | 112 |
| 8 | 128 |
| 9 | 144 |
| 10 | 160 |
| 11 | 176 |
| 12 | 192 |
| 13 | 208 |
| | 224 |
| | 240 |
| | 256 |

## வகுத்தல்.

வகுத்தல் வாய்பாட்டின் பொருட்டு, இப்பெருக்கல் வாய்பாட்டையே மாற்றிப் படிக்க. உதாரணம்:- 1ல் 1-1 தரம்; 2ல் 1-2 தரம்; 2ல் 2-1 தரம்; 4ல் 2-2 தரம்; 6ல் 2-3 தரம்; 8ல் 2-4 தரம்; 9ல் 3-3 தரம் என வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஒரு | முக்கால் | $\frac{3}{4}$ |
| ஒ | அரை | $\frac{1}{2}$ |
| வ | கால் | $\frac{1}{4}$ |
| கி | நாலுமா | $\frac{1}{5}$ |
| ஙூ | மும்மா முக்காணி அல்லது மூன்றுவீசம் | $\frac{3}{16}$ |
| ரு | மும்மா | $\frac{3}{20}$ |
| வரு | அரைக்கால் | $\frac{1}{8}$ |
| ஃ | இருமா | $\frac{1}{10}$ |
| ஶ | மாகாணி அல்லது வீசம் | $\frac{1}{16}$ |
| ப | ஒருமா | $\frac{1}{20}$ |
| சூ | முக்காணி | $\frac{3}{80}$ |
| சு | அரைமா | $\frac{1}{40}$ |
| ஐ | காணி | $\frac{1}{80}$ |
| ஷ | அ[illegible] | $\frac{1}{160}$ |
| வத | முந்திரி | |

| | | | |
|---|---|---|---|
| வுத | ஓ | ஙுதூருவுத | வபதூ |
| ரு | ஓவுத | கு | வபதூரு |
| ருவுத | ஓரு | குவுத | வஓ |
| 8 | ஓருவுத | குரு | வஓரு |
| 8வுத | ஓ8 | குருவுத | வஓ8 |
| 8ரு | ஓ8வுத | கு8 | வஓ8ரு |
| 8ருவுத | ஓ8ரு | கு8வுத | வஓசபு |
| சபு | ஓ8ருவுத | கு8ரு | வஓசபுரு |
| சபுவுத | ஓசபு | கு8ருவுத | வஓதூ |
| சபுரு | ஓசபுவுத | குசபு | வஓதூரு |
| சபுருவுத | ஓசபுரு | குசபுவுத | வஙு |
| தூ | ஓசபுருவுத | குசபுரு | வஙுரு |
| தூவுத | ஓதூ | குசபுருவுத | வஙு8 |
| தூரு | ஓதூவுத | குதூ | வஙு8ரு |
| தூருவுத | ஓதூரு | குதூவுத | வஙுசபு |
| ப | ஓதூருவுத | குதூரு | வஙுசபுரு |
| பவுத | ஙு | குதூருவுத | வஙுதூ |
| பரு | ஙுவுத | வ | வஙுதூரு |
| பருவுத | ஙுரு | வரு | வகு |
| ப8 | ஙுருவுத | வ8 | வகுரு |
| ப8வுத | ஙு8 | வ8ரு | வகு8 |
| ப8ரு | ஙு8வுத | வசபு | வகு8ரு |
| ப8ருவுத | ஙு8ரு | வசபுரு | வகுசபு |
| பசபு | ஙு8ருவுத | வதூ | வகுசபுரு |
| பசபுவுத | ஙுசபு | வதூரு | வகுதூ |
| பசபுரு | ஙுசபுவுத | வப | வகுதூரு |
| பசபுருவுத | ஙுசபுரு | வபரு | உ |
| பதூ | ஙுசபுருவுத | வப8 | உ8 |
| பதூவுத | ஙுதூ | வப8ரு | உசபு |
| பதூரு | ஙுதூவுத | வபசபு | உதூ |
| பதூருவுத | ஙுதூரு | வபசபுரு | உப |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ஒப° | ஓகசு | ஒஙட | உய௫ |
| ஒபசு | ஓககூ | ஓ | உயசா |
| ஒபகூ | க | ஓப° | உயஎ |
| ஒஇ | ப | ஓறு | உயஅ |
| ஒஇ° | இ | ஓஙட | உயகூ |
| ஒஇசு | ங | க | ஙய |
| ஒஇகூ | க | வ | ஙயக |
| ஒங | வ | ஒ | ஙயஉ |
| ஒங° | வப | ஓ | ஙயங |
| ஒஙசு | வஇ | க | ஙயச |
| ஒஙகூ | வங | உ | ஙயரு |
| ஒக | வக | ங | ஙயசா |
| ஒக° | ஒ | ச | ஙயஎ |
| ஒகசு | ஒப | ரு | ஙயஅ |
| ஒககூ | ஒஇ | சா | ஙயகூ |
| ஓ | ஒங | எ | சய |
| ஓ° | ஒக | அ | சயக |
| ஓசு | ஓ | கூ | சயஉ |
| ஓகூ | ஓப | ய | சயங |
| ஓப | ஓஇ | யக | சயச |
| ஓப° | ஓங | யஉ | சயரு |
| ஓபசு | ஓக | யங | சயசா |
| ஓபகூ | க | யச | சயஎ |
| ஓஇ | ப° | யரு | சயஅ |
| ஓஇ° | வறு | யசா | சயகூ |
| ஓஇசு | ஙட | யஎ | ருய |
| ஓஇகூ | வ | யஅ | ருயக |
| ஓங | வப° | யகூ | ருயஉ |
| ஓங° | வறு | உய | ருயங |
| ஓஙசு | வஙட | உயக | ருயச |
| ஓஙகூ | ஒ | உயஉ | ருயரு |
| ஓக | ஒப° | உயங | ருயசா |
| ஓக° | ஒறு | உயச | ருயஎ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருய அ
ருய க
கூய
கூய க
கூய உ
கூய ங
கூய ச
கூய ரு
கூய கூ
கூய எ
கூய அ
கூய க
எய
எய க
எய உ
எய ங
எய ச
எய ரு
எய கூ
எய எ
எய அ
எய க
அய
அய க
அய உ
அய ங
அய ச
அய ரு
அய கூ
அய எ
அய அ
அய க
கய

கய க
கய உ
கய ங
கய ச
கய ரு
கய கூ
கய எ
கய அ
கய க
ா
ய
உய
ஙய
சய
ருய
கூய
எய
அய
கய
ா
உா
ஙா
சா
ருா
கூா
எா
அா
கா
த
தா
தஉா
தஙா
தசா

தருா
தகூா
த எா
த அா
தகா
உத
உ தா
உ தஉா
உ தஙா
உ தசா
உ தருா
உ தகூா
உ த எா
உ த அா
உ தகா
ஙத
ஙதா
ங தஉா
ங தஙா
ங த எா
ங தருா
ங தகூா
ங த எா
ங த அா
ங தகா
ச த
ச தா
ச தஉா
ச தஙா
ச த சா
ச தருா
ச தகூா
ச த எா

ச த அா
ச தகா
ரு த
ரு தா
ரு தஉா
ரு தஙா
ரு தசா
ரு தருா
ரு தகூா
ரு த எா
ரு த அா
ரு தகா
கூ த
கூ தா
கூ த உா
கூ தஙா
கூ த எா
கூ தருா
கூ தகூா
கூ த எா
கூ த அா
கூ தகா
எ த
எ தா
எ தஉா
எ தஙா
எ தசா
எ தருா
எ தகூா
எ த எா
எ த அா
எ தகா
அ த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௮௲௱
௮௲௨௱
௮௲௩௱
௮௲௪௱
௮௲௫௱
௮௲௬௱
௮௲௭௱
௮௲௮௱
௮௲௯௱
௯௲
௯௲௱
௯௲௨௱
௯௲௩௱
௯௲௪௱
௯௲௫௱
௯௲௬௱
௯௲௭௱
௯௲௮௱
௯௲௯௱
௰௲
௨௰௲
௩௰௲
௪௰௲
௫௰௲
௬௰௲
௭௰௲
௮௰௲
௯௰௲
௱௲ அல்லது இலக்ஷம்.

௱௰௲
௱௨௰௲
௱௩௰௲
௱௪௰௲
௱௫௰௲
௱௬௰௲
௱௭௰௲
௱௮௰௲
௱௯௰௲
௨௱௲
௨௱௰௲
௨௱௨௰௲
௨௱௩௰௲
௨௱௪௰௲
௨௱௫௰௲
௨௱௬௰௲
௨௱௭௰௲
௨௱௮௰௲
௨௱௯௰௲
௩௱௲
௩௱௰௲
௩௱௨௰௲
௩௱௩௰௲
௩௱௪௰௲
௩௱௫௰௲
௩௱௬௰௲
௩௱௭௰௲
௩௱௮௰௲
௩௱௯௰௲
௪௱௲
௪௱௰௲

௪௱௨௰௲
௪௱௩௰௲
௪௱௪௰௲
௪௱௫௰௲
௪௱௬௰௲
௪௱௭௰௲
௪௱௮௰௲
௪௱௯௰௲
௫௱௲
௫௱௰௲
௫௱௨௰௲
௫௱௩௰௲
௫௱௪௰௲
௫௱௫௰௲
௫௱௬௰௲
௫௱௭௰௲
௫௱௮௰௲
௫௱௯௰௲
௬௱௲
௬௱௰௲
௬௱௨௰௲
௬௱௩௰௲
௬௱௪௰௲
௬௱௫௰௲
௬௱௬௰௲
௬௱௭௰௲
௬௱௮௰௲
௬௱௯௰௲
௭௱௲
௭௱௰௲
௭௱௨௰௲

௭௱௩௰௲
௭௱௪௰௲
௭௱௫௰௲
௭௱௬௰௲
௭௱௭௰௲
௭௱௮௰௲
௭௱௯௰௲
௮௱௲
௮௱௰௲
௮௱௨௰௲
௮௱௩௰௲
௮௱௪௰௲
௮௱௫௰௲
௮௱௬௰௲
௮௱௭௰௲
௮௱௮௰௲
௮௱௯௰௲
௯௱௲
௰௱௲
௨௰௱௲
௩௰௱௲
௪௰௱௲
௫௰௱௲
௬௰௱௲
௭௰௱௲
௮௰௱௲
௯௰௱௲
௱௱௲ அல்லது கோடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Printed by : Anush Printers, Colombo -11. Tel : 075-343812**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org